விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு நவீத
மடல்கள், பொதிகள் சேவை
உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து
WESTERN UNION மூலம்
அனுப்பிய பணத்தை ஒருசில
நிமிடங்களில் நீங்கள்
பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்
அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(அ-1358)

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 தை 11 புதன்கிழமை (24.01.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 036

# கூட்டமைப்பு உறுப்பினர்கள் 2கோடி வாங்கியது உண்மை

## சுரேஷ் பிரேமச்சந்திரன் குற்றச்சாட்டு



(யாழ்ப்பாணம்) தமிழ் மக்களின் நலன்களை பாராமல் அரசின் தேவைகளை பூர்த்தி செய்தமையால் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இரண்டு கோடி ரூபாய் பணம் வழங்கப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டியுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ் அரசியல் கைதிகளுடைய விடுதலை, கூட்டமைப்பின் அழுத்தத்தால் இடம் பெறவில்லை எனவும் தெரிவித்துள்ளார். (23-ம் பக்கம்...)

### அன்பு வாசகர்களே...



கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்களுக்கு வலம்புரியின் பிரதம ஆசிரியர் எழுதும் பதில் கடிதம் உள்ளே வாசிக்கத் தவறாதீர்கள்...!

## ரயில் மோதியதில் குடும்பப்பெண் பலி

(வவுனியா)

வவுனியாவை சேர்ந்த இளம் குடும்ப பெண் ரயிலில் மோதியதில் உயிரிழந்துள்ளார்.

வவுனியா தாண்டிக்குளம் பகுதிய சேர்ந்த கமலவதனா 24

## 2018-ம் ஆண்டுக்கான உலக சுகாதார தினம் இம்முறை இலங்கையில்

(கொழும்பு)

2018-ம் ஆண்டுக்கான உலக சுகாதார தினத்தை இலங்கையில் நடத்துவது என ஜெனிவாவில் நடைபெற்ற 142 உலக சுகாதார 23

### ஊரெழு கேணியடிப் பகுதியில்

## பிக்கப் - மோ.சைக்கிள் விபத்து இரு இளைஞர் உயிரிழப்பு



(புன்னாலைக்கட்டுவன்)

பிக்கப் ரக வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று மாலை 3 மணியளவில் பலாலி வீதி ஊரெழு கேணியடிப் 23

## இலங்கை வருகிறார் இந்தோனேசிய ஜனாதிபதி



(கொழும்பு)

இரண்டு நாட்கள் உத்தியோக பூர்வ விஜயத்தினை மேற்கொண்டு இந்தோனேசிய ஜனாதிபதி ஜக்கோ விதோதோ இன்று புதன் 23

## சர்வதேச வர்த்தகக் கண்காட்சி 26, 27, 28-ம் திகதிகளில்

### யாழ். மாநகரசபை மைதானத்தில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வர்த்தக தொழிற்துறை மன்றத்தின் ஒழுங்கமைப்பில் 9 ஆவது யாழ்.சர்வதேச வர்த்தகக் கண்காட்சி இம்மாதம் 26-ம், 27-ம், 28-ம் திகதிகளில் யாழ். 24

## சர்வதேச நீதிபதிகள் மீது நம்பிக்கையில்லை: சமரசிங்க

(கொழும்பு)

உண்மைகளை கண்டறியும் பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகளை அனுமதிக்கப்போவதில்லை. சர்வதேச நீதிபதிகள் பக்கச்சார்பாகவும், வெளிநாட்டு அழுத்தங்களுக்கு அமையவுமே செயற்படுவர். இது இலங்கைக்கு சாதகமாக அமையாது என அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார். 23

## ஊவா முதலமைச்சர் பிணையில் விடுதலை



(கொழும்பு)

அதிபர் ஒருவரை முழந்தாளிட வைத்த சம்பவம் தொடர் 23

## இலங்கை - சிங்கப்பூர் இடையே வர்த்தக உடன்படிக்கை கைச்சாத்து

(கொழும்பு)

சிங்கப்பூர் மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கும் இடையில் பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் முதலீடு தொடர்பிலான புரிந்துணர்வை 23



## பிரபல போதைப்பொருள் வர்த்தகருக்கு மரணதண்டனை

### கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

கொழும்பில் பிரபல போதைப் பொருள் வர்த்தகராக செயற்பட்டிருந்த ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க நேற்று மரணதண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளார்.

2014-ம் ஆண்டின் 23

## பிணைமுறி மோசடி அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பு

### விவாதம் பெப்ரவரி 19-ம் திகதி எதிர்பார்ப்பு

(கொழும்பு)

மத்திய வங்கியின் பிணைமுறிகள் தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அறிக்கை நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் பிணைமுறிகள் விற்பனையில் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணைகள் நடத்த ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை மைத்திரிபால சிறிசேன கடந்த ஆண்டு நடுப்பகுதியில் நியமித்திருந்தார்.

குறித்த ஆணைக்குழு 23

## பிரபாகரன் தமிழீழம் கேட்டது நியாயமான கோரிக்கையே!

### முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க



(கொழும்பு)

தமிழ்மக்களுக்கான தேவையை பூர்த்தி செய்யாவிட்டால் எமக்கு தனியான நாட்டினை பிரித்துத் தாருங்கள் என பிரபாகரன் விடுத்த கோரிக்கை நியாயமானதே என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார். கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பு ஒன்றில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். 03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிணை முறி விவகாரம் தொடர்பில் உண்மைக்கு புறம்பாக கூற்றுக்களை தெரிவிக்க வேண்டாம்-சபாநாயகர்

(கொழும்பு)

மத்திய வங்கி பிணைமுறி விவகாரம் தொடர்பில் விசாரித்த ஆணைக்குழுவின் அறிக்கையும், பாரதூரமான ஊழல் மோசடிகள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையும் நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதனை சபைமுதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

இதன்போது உரையாற்றிய சபாநாயகர் கரு ஜயசூரிய,

மத்திய வங்கி பிணைமுறி சம்பவம் தொடர்பாக விடயங்களை கண்டறிவதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின். அறிக்கை உரியமுறையில் கிடைக்கப்பெற்றுள்ளது.

இதனால் உண்மைக்கு புறம்பான கூற்றுக்களை தெரிவிக்க வேண்டாம் என்று அவர் கேட்டுக்கொண்டார். (ம)

**கார், வான் வாடகைக்கு தேவை**

கார்கள், வான்கள் மாதாந்த வாடகைக்கு தேவை.

**0710404978** (2528)

**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532

# விசாரணை அறிக்கை முடித்த பின்னர் ஊவா முதலமைச்சர் மீது நடவடிக்கை

## அமைச்சர் மகிந்த சமரசிங்க

(கொழும்பு)

ஊவா மாகாண முதலமைச்சர் தொடர்பாக முறையான விசாரணை அறிக்கை கிடைத்த பின்னர் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என திறன் அபிவிருத்தி மற்றும் தொழில்சார் பயிற்சி அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும், அண்மையில் அதிகாரத்திற்கு கட்டுப்படாத தமிழ் பாடசாலை அதிபர் ஒருவரை மண்டியிட வைத்த விடயம் தொடர்பாக முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமைப் பீடத்திலிருந்து நான் இதனை முற்றாக நிராகரிக்கிறேன் எனச் சுட்டிக்காட்டிய அவர், ஊவா முதலமைச்சர் அவரின் நிலைப்பாட் டைத் தெளிவுபடுத்துதைப் போல், எதிர்த்தரப் பினரும் அவர்களின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துவார்கள் என்வும் குறிப்பிட்டு ள்ளார்.

எவ்வாறாயினும் சுயாதீன விசாரணையின் பின்னர்தான் யார் குற்றவாளி என்பது குறித்து தீர்மானிக்க முடியும் எனவும், இந்த விடயத்தில் தற்போது ஜனாதிபதி தலையிட்டு எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை எடுத்துள்ளார் எனவும் மகிந்த சமரசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (ம)

# 500 மில்லியன் நஷ்ட ஈடு கோரும் ஜே.வி.பி தலைவர் அநுரகுமார

(கொழும்பு)

தன்னை அவமதிக்கும் வகையில் கருத்து தெரிவித்தமை தொடர்பில் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் தனியார் தொலைக்காட்சி ஒன்றிற்கு எதிராக தலா 500 மில்லியன் ரூபா நஷ்டஈடு கோரி மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

தனது பெயருக்கு கலங்கம் ஏற்படுத்தும் வகையில் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தொடர்ந்தும் செயற்படுவதாக குறித்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழக்கறிஞர் சுனில் வடகல ஊடாக குறித்த முறைப்பாடு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

**அன்பான அரச அலுவலர்களே!**

**'தூய கரங்கள்-தூய நகரம்' 'Clean hands – Clean City'**

பல்வேறு வழிகளிலும் எமது மக்களின் நலனுக்காய் உங்களை அர்ப்பணித்து கடமையாற்றும் அரச ஊழியர்களே, இச்சமூகத்தில் மிகப்பெரிய கருத்துருவாக்கங்களை செய்து சமூக மாற்றத்திற்கான அடித்தளத்தை இடும் நீங்களும்தான் அரசியல் மாற்றத்திற்கும் காரணமாக அமைய வேண்டும் என்பது எங்கள் அன்பான வேண்டுகோள்.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல் அபிவிருத்திக்கான தேர்தலாக இருந்தாலும் இது **பிரிக்கப்பட்ட வடக்கு கிழக்கில் பௌத்தத்திற்கு முன்னுரிமை கொடுத்து ஒற்றையாட்சியை வலியுறுத்தும் இடைக்கால அரசியல் அமைப்பிற்கு** ஆதரவு தேடுவதாகவே அமையப்போகிறது என்பதே உண்மை. இதற்கு ஆதரவு தேடும் முகமாகவே தமிழ்த்தேசிய கூட்டமைப்பு உள்ளடங்கலான அரசின் பங்காளி கட்சிகள் யாவும் இத்தேர்தலில் களமிறங்கியுள்ளன என்பதை நாம் உணரவேண்டும்.

எனவே உங்கள் மனசாட்சியின் கதவுகளை உரக்கத்தட்டி இப்பெரும் ஆபத்தினை உணர்ந்து எமக்கு வாக்களித்து அரசியல் பேரம்பேசுகின்ற ஒரு சக்தியாக எதிர்காலத்தில் எமது அரசியல் இயக்கத்தை உருவாக்குவீர்கள் என்பது எங்களுடைய அசையாத நம்பிக்கை.

அதுமட்டுமல்லாது **'தூய கரங்கள் - தூய நகரம்'** என்ற தொனிப் பொருளில் இம்முறை உள்ளூராட்சித்தேர்தலை எதிர்கொள்கின்ற நாம் புலம்பெயர் தமிழ் உறவுகளின் நிதி உதவியுடன் தாயகத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள காத்திருக்கின்றோம். தமிழர் அரசியலில் புதிய இரத்தத்தினை பாய்ச்சி, புதிய சிந்தனையுடன் நமக்கான அரசியலை முன்னெடுக்க எம்மோடு இணைந்து எமது கரங்களை பலப்படுத்த எமக்கு வாக்களிக்குமாறு அன்போடு வேண்டுகின்றோம்.

**அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் சைக்கிள் சின்னத்தில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, சம உரிமை இயக்கம் மற்றும் நம்பிகள் நல்வாழ்வுக் கழகம்** என்பவற்றின் கூட்டான தமிழ் தேசியப் பேரவைக்கு வாக்களித்து எமக்கும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்கித்தான் பாருங்கள்.



நன்றி

கஜேந்திரகுமார் காங்கேசர் பொன்னம்பலம்

(தலைவர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி)



(சு-002)

**அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சின்னத்தில்**

**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன்**

**தமிழ்த் தேசியப் பேரவை**

# சுதந்திரக் கட்சியின் எதிர்கால பயணத்தை யாராலும் தடுக்க முடியாது-ஜனாதிபதி

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிராக காலத்துக்கு காலம் பல்வேறு கட்சிகள் உருவாக்கப்பட்டபோதிலும் அவை வெற்றியடையவில்லை என்பதுடன் தற்போதும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிராக அக்கட்சியின் சில உறுப்பினர்கள் உருவாக்கியுள்ள புதிய கட்சியால் ஸ்ரீலங்கா சுதந்திரக் க்ட்சியின் எதிர்கால பயணத்தை தடுக்க முடியாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஊழல், மோசடி, முறைகேடுகளற்ற தூய்மையான கட்சி என தெரிவித்த ஜனாதிபதி, நாட்டை சீரழித்த ஊழல் ஆட்சியை மீண்டும் நாட்டில் ஏற்படுத்த இந்த நாட்டு மக்கள் தயாராக இல்லை எனவும் வலியுறுத்தினார்.

அத்துடன் நாட்டிற்கும் மக்களுக்காகவும் எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வரலாற்று ரீதியான வெற்றியை பெற்றுக்கொள்ளும் என மக்கள் சந்திப்பில் உரையாற்றும்போது ஜனாதிபதி தெரிவித்தார்.

அந்த வெற்றியின் பின்னர் நாட்டுக்காக ஆற்றவேண்டிய செயற்பாடுகளை துரிதப்படுத்துவதாகவும் தெரிவித்த ஜனாதிபதி, தனக்கு பின்னர் தனது கதிரையை கையளிப்பதற்கு தனது குடும்பத்தில் எவரையும் தயார்படுத்தவில்லை எனவும் நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் ஆற்றவேண்டிய கடமைகளை உரியவாறு நிறைவேற்றும் வலு தம்மிடம் உள்ளதாகவும் தெரிவித்தார்.

சட்டத்தின் முன்னிலையில் தவறிழைத்தவர்களை பாதுகாக்க தான் தயாராக இல்லையென ஜனாதிபதி தெரிவித்ததுடன், ஊவா மாகாண முதலமைச்சர் பாடசாலை அதிபருடன் ஏற்படுத்திக்கொண்ட பிரச்சினையில் அவரை தனது அமைச்சுப் பதவியிலிருந்து விலகுமாறு கட்டளையிட்டு அவருக்கெதிராக பக்கசார்பற்ற விசாரணை ஒன்றினை மேற்கொண்டு சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு ஆலோசனை வழங்கியமைக்கு சட்டம் சகலருக்கும் பொதுவானது என்பதனாலேயேயாகும் எனவும் தெரிவித்தார்.

செல்வச் செழிப்புடன் வசதியான குடும்பப் பின்னணியை தான் கொண்டிராததுடன் தினமும் சிரமத்தோடு வாழும் அப்பாவி விவசாய மக்களின் பிரச்சினைகளை நன்கறிந்துள்ளதாகவும், அவர்களை பொருளாதார ரீதியில் பலப்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

வடமேல் மாகாண மக்களின் நீர்ப்பிரச்சினைக்கு மொரகஹகந்த நீர்த்தேக்கத்தினூடாக நிரந்தர தீர்வு கிடைக்கும் என குறிப்பிட்ட ஜனாதிபதி, இரத்தினபுரி, களுத்துறை மற்றும் கேகாலை மாவட்டங்களில் வெள்ளப்பெருக்கு அச்சுறுத்தல்களை ஏற்படுத்தி சமுத்திரத்திற்கு செல்லும் நீரோட்டத்தை வடமேல் மற்றும் வட மாகாணத்திற்கு நவீன தொழில்நுட்பத்தின் உதவியோடு குழாய் மூலமாக வழங்கும் செயற்திட்டத்தின் ஆரம்பப் பணிகளை தனது பதவிக்காலத்துக்குள் நிறைவேற்றுவதாகவும் தெரிவித்தார்.

இம்முறை உள்ளூராட்சி மன்ற தேர்தலை முன்னிட்டு ஸ்ரீலங்கா சுதந்தரக் கட்சி உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நாடு பூராகவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மக்கள் சந்திப்பு தொடரில் மேலுமொரு மக்கள் சந்திப்பு நேற்று பாரியளவு மக்கள் பங்குபற்றலுடன் ஆணமடுவையில் இடம்பெற்றது.

ஆணமடுவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதான அமைப்பாளர் ஆனந்த சரத்குமாரவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த மக்கள் சந்திப்பில் அமைச்சர்களான அநுர பிரியதர்ஷன யாப்பா, தயாசிறி ஜயசேகர, டீ.பீ. ஏகநாயக்க, திலங்க சுமதிபால, வீரகுமார திஸாநாயக்க, ஷாந்த பண்டார, அநுருத்த பொல்கம்பொல, நியோமால் பெரேரா, தயாசிறி தி திசேரா, சுமல் திசேரா, பியசிறி ராம நாயக்க, விக்டர் என்டனி உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்கள் தமிழீழம் கோருவது நியாயமே!



## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்கள் தமிழீழம் கோருவது நியாயமான ஒன்றாகும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார். இலங்கையில் நீண்ட காலமாக தமிழ் மக்கள் முகம் கொடுத்துள்ள மாற்றங்கள் காரணமாக இவ்வாறான கோரிக்கை வலுப்பெற்றுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பெரும்பான்மை இன சிங்கள மக்கள் வாழும் பகுதிகளில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தி தமிழ் மக்களுக்கு கிடைக்கவில்லை என்ற உண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

எங்களுக்கு செய்யவில்லை என்றால் எங்களுக்கு தனி நாடு வழங்குங்கள் என தமிழ் மக்கள் (தமிழீழம்) கோருவது நியாயமான ஒன்றாகும் என அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை சிறிய நாடு. இங்கு பெருமளவு மக்கள் இல்லை. பல தசாப்தங்களாக பிரிந்து வாழும் மக்கள் பகுதியினர் ஒருவருக்கு ஒருவர் அறிமுகப்படுத்தி கொள்ளாமையாலேயே போர் நிலை ஏற்பட்டது.

நான்கு மதங்களை சேர்ந்த மக்கள் நாட்டில் வாழ்ந்த போதிலும், ஒருவருக்கு ஒருவர் ஒரு போதும் பேசிக் கொள்வதில்லை. நாட்டில் பாரிய மோதல் ஏற்பட அது போதுமானதாகும்.

ஒருவருடைய மொழியை ஒவ்வொருவராலும் பேச முடியாமையே நாட்டில் கொடூர யுத்தம் ஏற்படுவதற்கான பிரதான காரணம்.

சமூகங்கள் சகஜமாக இருந்திருந்தால் பிரபாகரன் என்ற ஒருவரை உருவாக்காமல் இருந்திருக்கலாம்.

தமிழ், முஸ்லிம் பகுதிகளில் அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் மந்தமான நிலை காணப்படுவதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## ராஜீவ் கொலை;7 பேரை விடுவிப்பது குறித்து 3 மாதங்களுக்குள் முடிவெடுக்க வேண்டும்

### மத்திய அரசிற்கு உச்ச நீதிமன்று உத்தரவு



(டில்லி)

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள 7 பேரையும் விடுவிப்பது குறித்து 3 மாதங்களுக்குள் முடிவெடுக்குமாறு மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலை வழக்கின் இறுதி விசாரணை, உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்றுவரும் நிலையில், நேற்று இந்த வழக்கு நீதிபதி ரஞ்சன் கோகாய் முன் விசாரணைக்கு வந்தது.

அப்போது, ராஜீவ் கொலை வழக்கில் 7 பேரையும் விடுவிப்பது குறித்து 3 மாதங்களுக்குள் முடிவெடுக்கு மாறு மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 7 பேர் 25 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் உள்ளனர். இவர்களை விடுவிக்க தமிழக அரசு முடிவு செய்தது.

ஆனால் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, மத்திய அரசு உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது.

மேலும் இவர்களை விடுவிக்கும் அதிகாரம் யாருக்கு உள்ளது என்று கேள்வி எழுப்பப்பட்டது.

இதையடுத்து, பேரறிவாளன் உட்பட 7 பேர் விடுதலை குறித்து முடிவெடுக்க காலக்கெடு நிர்ணயித்துள்ள உச்ச நீதிமன்றம், இவர்கள் விடுதலை தொடர்பாக பல்நோக்கு விசாரணை ஆணையம், சி.பி.ஐயின் மனுக்கள் குறித்து ஆலோசித்து, அரசியலமைப்புச் சட்டத்தை ஆராய்ந்து, மத்திய அரசு எடுக்கும் முடிவு குறித்தும் அறிக்கை தாக்கல் செய்யவும் உத்தரவிட்டுள்ளது.

மேலும், 7 பேர் விடுதலை செய்யப்படுவது குறித்து மத்திய அரசின் நிலைப்பாட்டைக் கேட்டு தமிழக அரசு ஏற்கனவே கடிதம் எழுதியிருந்தது.

இதற்கு பதில் வரவில்லை. அந்த கடிதத்தையும் தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது. குறிப்பிடத்தக்கது. (இ-7)

## 98 இந்திய மீனவர்கள் வார இறுதியில் விடுவிப்பு

(கொழும்பு)

எல்லை மீறி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்த குற்றச்சாட்டின் பேரில் கடந்த வருட இறுதியில் சிறை பிடிக் கப்பட்ட 98 இந்திய மீனவர் களை இந்த வார இறுதியில் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவர்கள் உள்ளிட்ட 113 பேர் இதுவரையில் இலங்கை சிறையில் இருப்பதாக கடற்றொழில் மற்றும் நீரியல் வள திணைக்களம் தெரிவித்துள்ளது. இவர்கள் அனைவரும் காங்கேசன் துறை, யாழ்ப்பாணம் மற்றும் பருத்தித்துறையை அண்மித்த கடற்பரப்பில் எல்லை மீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்களாவர்.

மேலும் இம் மாத தொடக்கத்தில் 69 பேர் விடுதலை செய்யப்பட்டதுடன், இன்னும் 16 பேர் இக் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்ய ப்பட்டனர். கைது செய்யப்பட்டோர் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள் ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)


அன்புடன் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு...

மீண்டும் ஒரு தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள சூழலில், உங்களின் நியாயமான தீர்ப்புக்காக உங்களுடன் மனந்திறந்து சில கருத்துக்களைப் பறிமாறிக்கொள்ள முற்படுகின்றேன்.

1989ஆம் ஆண்டுக்குப் பின்னர் எமது தாயகப் பிரதேசத்தில் இயல்புச் சூழல் முடக்கப்பட்டுக் கிடந்ததையும், அரசியல் தலைமைகள் செயற்பட முடியாமல் இந்த மண்ணைவிட்டு வெளிநாடுகளுக்கும், தென் இலங்கைக்கும் ஓடியதையும், அரச இயந்திரம் இயங்க முடியாமல் போனதையும் உங்களில் பலர் அறிந்திருப்பீர்கள். அவ்வாறான ஓர் இருண்ட சூழலிலேயே துணிச்சலோடு தேசிய நீரோட்டத்தில் நான் கலந்துகொண்டேன்.
அந்தச் சூனியச் சூழலையும், தடைகளையும் எதிர்கொண்டு, எமது தாயகத்தில் ஜனநாயகச் சூழலை ஏற்படுத்துவதற்கும், எமது மக்கள் இயல்புச் சூழலை அனுபவிப்பதற்கும் உயிர் அச்சுறுத்தலுக்கு முகம் கொடுத்தபடி நானே முன்னின்று உழைத்திருந்தேன்.

மக்கள் சேவையை திறம்படச் செய்து முடிப்பதற்காக இரவு பகல் பாராமலும், நேர, காலம் பாராமலும், மழை, வெய்யில் பாராமலும் நான் செயல்பட்டபோது, எனக்கு உங்களின் ஆலோசனைகள் தேவையாக இருந்தன. உங்களின் பங்களிப்பும் தேவையாக இருந்தது. அதற்காக, எந்தவேளையில் நான் உங்களை அழைத்தாலும் நீங்கள் வருகை தந்து மனம் சோராமல் உதவி செய்தீர்கள்.

அரசாங்க உத்தியோகத்தர்கள் தமது பணியைச் செய்தாலும், அதை ஒரு சமூக சேவையாகவும், மனிதாபிமானப் பணியாகவும் நினைத்து மக்களுக்கு செய்ய வேண்டும் என்று நான் உங்களிடம் கோரிக்கை விடுத்ததையும், நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். அத்துடன் நீங்கள் நியாயமாகவும், சுதந்திரமாகவும் செயல்பட உங்களுக்கு நான் பக்கபலமாக இருந்ததையும் நினைவில் கொண்டிருப்பீர்கள் என்றும் நம்புகின்றேன்.
உங்கள் பங்களிப்பும், உதவியும் கிடைக்கப்பெற்றதால்தான், யுத்த இடிபாடுகளாகக் கிடந்த யாழ். குடா நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடிந்தது.

எனது அயராத முயற்சியினால்தான் வடக்கிலும், கிழக்கிலும் பல ஆயிரம் பேருக்கு அரச வேலை வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுக்கவும் முடிந்தது. அந்த நன்றி உணர்வோடு இன்னும் பலர் இருப்பதையும் அன்போடு ஞாபகத்தில் வைத்திருக்கின்றேன். எமது மக்கள் எதிர்கொண்ட பல்வேறு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக நேரகாலம் பாராமல் நான் அரச அதிகாரிகளை அழைத்திருந்தேன் என்பதற்காகவும், மக்கள் முன்வைக்கும் கோரிக்கைகளுக்கு நியாயமான உடனடித் தீர்வு காணப்பட வேண்டும் என்று பிடிவாதமாக கேட்டுக்கொண்டதற்காகவும் உங்களில் சிலர் அதிருப்தியடைந்திருப்பதாலேயே தபால் மூல வாக்குகளில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி(ஈ.பி.டி.பி)க்கு கணிசமான வாக்குகள் கிடைப்பதில்லை என்று கூறப்படுவதை நான் உண்மையென்று நம்பவில்லை.

எமது மக்களுக்காகவே நான் பாடுபட்டேன். எமது மண்ணுக்காகவே உழைத்தேன். கடந்த மூன்று வருடங்களாக எனக்கு எதிரான சக தமிழ் அரசியல் கட்சிகள் செய்த சதி காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் எமது மக்களும், அபிவிருத்தியற்று முடங்கிப்போனது எமது தாயகப் பிரதேசமும்தான். இப்பாதிப்பையும், பின்னடைவையும் எமது மக்கள் உணர்ந்து வருவதையும், அதை வெளிப்படுத்தி வருவதையும் நான் புரிந்து கொள்கின்றேன்.
இந்த முடக்கத்திலிருந்து அபிவிருத்தியும், மீள் எழுச்சியும் முழு வீச்சில் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும். எதிர்காலம் மீதான நம்பிக்கையை எமது மக்களிடையே மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும். சமூகச் சீர்கேடுகளை நிறுத்தி, அதனால் பாதிப்புக்குள்ளானவர்களை அதிலிருந்து மீட்டெடுக்க வேண்டும். அதற்காக நீங்களும் எனக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். நீங்கள் கடந்த காலத்தில் எவ்வாறான தீர்மானம் எடுத்திருந்தாலும் பரவாயில்லை. இம்முறை நியாயத்திற்காக எனது கோரிக்கையை ஏற்று நியாயத் தீர்ப்பை எழுதுவீர்கள் என்று நம்புகின்றேன்.

முயல்வோம்! வெல்வோம்! உளம்சோரோம்!!



(சி-003)



என்றும் மக்கள் சேவையிலுள்ள
டக்ளஸ் தேவானந்தா பா. உ
செயலாளர் நாயகம்
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மணிவிழா வாழ்த்துக்கள்

**மனோன்மணி அம்பிகா சமேத ஸ்ரீ சிவபூதவராஜர் தேவஸ்தான**

## சிவஸ்ரீ.ஞானசம்பந்த ஜோதிநாதக் குருக்கள் புஷ்பலதா தம்பதிகள்

நிகழும் ஏவிளம்பி வருடம் தைத்திங்கள் 11ம் நாள் (24.01.2018) புதன்கிழமை சிவஸ்ரீ.ஞானசம்பந்த ஜோதிநாதக் குருக்கள் தம்பதிகளின் மணிவிழாவை முன்னிட்டு காலை 9.00 மணியளவில் தம்பதிகளை அருள்மிகு யாழ். கோண்டாவில் தில்லைக்காளி அம்பாள் தேவஸ்தானத்தில் இருந்து மங்கள வாத்தியங்கள் சகிதம் அழைத்து வந்து சிவபூதவராஜர் தேவஸ்தானத்தில், தேவஸ்தான நிர்வாக சபையினரின் பாராட்டுரையும் கௌரவிப்பு நிகழ்வும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் நிகழ்வில் பங்குபற்றி தம்பதிகளை கௌரவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**அருள்மிகு மனோன்மணி அம்பிகா சமேத சிவபூதவராஜர் தேவஸ்தான நிர்வாக சபையினரும் ஊர் மக்களும்**

**24.01.2018**

(2532)


அனுசரணை:-

**லிங்கம் ஹாட்வெயர்**
கட்டிடப் பொருட்கள் விநியோகஸ்தர்களும் கட்டிட ஒப்பந்தகாரர்களும்
இல.411, பலாலி வீதி, கோண்டாவில் வடக்கு (டிப்போ முன்பாக) யாழ்ப்பாணம்.


**துர்க்கை அம்மன்**
ஹாட்வெயர் அன் ரான்ஸ்போட்
கல், மணல், சீமெந்து, கம்பி ஆகியவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
கைதடி, மானிப்பாய் வீதி, கோப்பாய் வடக்கு, கிருஸ்ணர் கோவிலடி.
தொ.பே. 077 786 0769, 021 730 6029

**குகா & பிறதர்ஸ்**
Building Furniture and Timber Depot
C.T.B Depot Junction, Kondavil. T.P:021 222 5098

**சிவலிங்கம் கட்டிடப் பொருள் & ரான்ஸ்போட்**
பலாலி றோட், கோண்டாவில்.
தொ.பே 077 611 7075, 077 962 2669

**ஸ்ரீராம் ஹாட்வெயார்**
Palaly Road, Kondavil Junction.


# 1ம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் சுந்தரம்பிள்ளை கதிரவேலு

(முன்னாள் லொறிச்சாரதி SAFEE & V.M.S டிரான்ஸ்போட்)

**தோற்றம்: 26.06.1932** **மறைவு: 03.02.2017**

**திதி:ஸப்தமி (24.01.2018)**

ஓராண்டு ஓடிச் சென்றாலும்
ஓயவில்லை உங்கள் நினைவுகள்
கண்இமைக்கும் பொழுதெல்லாம்
கண்ணெதிரே நிறைந்து
புன்னகையுடன் மிளிரும் உங்கள் வதனம்.
உங்கள் அன்புக்கு எவையும் ஈடாகுமோ?

**நீங்கா நினைவுகளுடன்**
**குடும்பத்தினர்**
**துறட்டிப்பனை அம்மன் கோவில் வீதி, வட்டுக்கிழக்கு, வட்டுக்கோட்டை.**

(C-1365)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி சபைத் தேர்தல்-2018

வலி. மேற்கு பிரதேச சபை



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன



**ந.திரிலோகநாதன் (லோகன்)**

(முன்னாள் வலிமேற்கு பிரதேச சபை தவிசாளர்
அமைப்பாளர் ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணி வட்டுக்கோட்டை தொகுதி)

- சைவத்திற்கும் தமிழிற்கும் முதலிடம்.
- இடைநடுவில் நிறுத்திவிட்ட அபிவிருத்தியை மீள கட்டியெழுப்பல்.
- பெரும்பான்மை இனத்துடன் இணைந்து நிரந்தர அரசியல் தீர்வு.
- தேசியம் பேசி மக்கள் காது புளித்து விட்டது. பசப்பு வார்த்தைகளுக்கு மக்கள் எடுபட மாட்டார்கள். (171)

இவ் அனைத்தையும் பெற உங்கள் பொன்னான வாக்கை அளிப்பீர்கள் தாமரை மொட்டிற்கு.


## தக்காளிச் செடிகளுக்குள் கஞ்சா வளர்த்தவருக்கு விளக்கமறியல்

(திருமலை)

திருகோணமலை - சேருநுவர பகுதியில் தக்காளிச் செடிகளுக்குள் ஐந்து கஞ்சா செடிகளை வளர்த்து வந்த நபரை நாளை 25ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு நேற்றுமுன்தினம் மூதூர் நீதிமன்ற நீதவான் எம்.எஸ். எம்.சம்சுதீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் வெருகல், மாவடிச்சேனை பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய ஒருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபர் வீட்டில் மறைமுகமாக தக்காளிச் செடிக்குள் ஐந்து கஞ்சா செடிகளை வளர்த்து வந்த நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)


# விற்பனைக்கு உண்டு

பருத்தித்துறை பிரதான வீதி ராஜா சுவைச் சோலைக்கு எதிரே உள்ள 5 கடையுடன் கூடிய இரண்டு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

கற்கோவளத்தில் உள்ள தென்னந்தோப்புடன் கூடிய வீட்டுடனும் புனித நகருக்குப் போகும் பெரிய வாகனங்கள் செல்லக்கூடிய அகலப் பாதையும் கொண்ட 18 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு.

மேலதிக தொடர்புகளுக்கு:
077 555 2973, 021 226 3248


# கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாநகர சபை, வடமாகாணம்.

## வாகனங்களை வாடகைக்கமர்த்துவதற்கான கேள்விப்பத்திரம் கோரல்

அலுவலக மற்றும் வேலை மேற்பார்வைத் தேவைகளின் பொருட்டு ஒரு வாகனத்தை வாடகைக்கு அமர்த்த பொருத்தமான வழங்குநர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

அ.திணைக்களத்தின் நிரந்தரப் பாவனைக்கான, குறைந்தது சரி செய்யக்கூடிய ஐந்து ஆசனங்களைக் கொண்டதும், குளிரூட்டல் வசதிகளைக் கொண்டதுமான வான் (Van) ரக வாகனம்.

ஆ.எரிபொருள், சாரதி, சேவிஸ், பூரணகாப்புறுதி மற்றும் வாகனத் திருத்தங்கள் உள்ளடங்கலான கேள்வி.

இ.முற்பதிவு 2000 ஆம் ஆண்டிற்குப் பிந்தியதும் தயாரிப்பு 18 வருடங்களுக்குட்பட்டதுமான வாகனம்.

ஈ.செயற்றிட்ட நடவடிக்கைகளிற்கு வாகனம் பயன்படுத்தப்பட்ட முதல் வரும் 1700 கிலோ மீற்றருக்கான மொத்தப் பெறுமதி தரப்படவேண்டும். அத்துடன் 1700 கிலோ மீற்றருக்கு மேற்பட்ட ஒவ்வொரு கிலோ மீற்றருக்குமான பெறுமதியும் தரப்பட வேண்டும்.

உ.வாகனம் நிரந்தர, நாளாந்த பாவனைக்காக மூன்று மாத காலத்திற்கு (தேவை ஏற்படின் கால எல்லை நீடிக்கப்படும்) வழங்கப்படல் வேண்டும்.

1.இச் சேவைக்கென தயாரிக்கப்பட்ட கேள்வி ஆவணங்களை ரூபா 1000.00 செலுத்தி எமது திணைக்களத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

2.மூடிய கேள்விகள் 01.02.2018 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிவரை எமது அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப்படும். தபால் மூலம் அனுப்புவதற்கு திணைக்கள முகவரியை பயன்படுத்துவதுடன் கடித உறையில் "வாகனங்களை வாடகைக்கமர்த்துவதற்கான கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும். தாமதமான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

3.கேள்விகள் 01.02.2018 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு திறக்கப்படும். விண்ணப்பதாரர்களது பிரசன்னம் எதிர்பார்க்கப்படுகிறது.

தொலைபேசி இல:
021 222 2019

பிராந்திய பெறுகைக்குழு,
யாழ்ப்பாணம் மாநகர சபை,
வடமாகாணம்,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-1362)

# 90 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
1986 - 10 - 11



மறைவு
2017 - 10 - 15

அமரர்.

## பன்னீர்செல்வம் விஜயகுமார் [விஜி]



அள்ளி அரவணைத்து
அன்பு மொழி பேசி நிதம்
செல்லச் சிரிப்பாலே
சிறகடித்த செல்லமோ!
அள்ளாக் குறையாத அன்பை
அள்ளித் தந்தாயே!
அவனியிலே எமைத் தவிக்கவிட்டு
எங்கேயடா சென்றுவிட்டாய்?



15.10.2017 அன்று காலமான எமது அன்புச் செல்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் 24.01.2018 இன்று புதன்கிழமை காலை 7 மணியளவில் சாட்டி தீர்த்தக் கரையிலும் 25.01.2017 நாளை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்.

மண்கும்பான் கிழக்கு,
4ஆம் வட்டாரம்,
சிவகாமி அம்மன் கோவிலடி.

(2519)

பன்னீர் செல்வம்(தந்தை)
சகோதரர் - சதீஸ்குமார்.

**மீனம்** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்,வாக்கு மேன்மையுண்டு, பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**மேடம்** பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**இடபம்** வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், தேவையற்ற சஞ்சலங்களை தவிர்த்துக் கொள்வது நல்லது,சயனக் குறைவான நாள், ரோக பயமுண்டு.

**மிதுனம்** செய்தொழில் விருத்தியுண்டு, குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், கௌரவ மான சம்பவங்கள் இடம் பெறலாம், முயற்சிகளில் முன்னேற்றம் பெறுவீர்கள்.

**கும்பம்** செய்தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள், உறவினர்கள் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

| | | | |
|---|---|---|---|
| | சந் | | |
| | இராசிபலன் கிரகநிலை சித்திரை | | ராகு |
| சூரி.சுக் கேது.புத | | | |
| சனி | செவ் | குரு | |

**24.01.2018**

தை 11, புதன்கிழமை
சூரிய உதயம் காலை 6.35 மணிக்கு
சப்தமி பிற்பகல் 12.21மணிவரை
அச்சுவினி பின்னிரவு 4.39 மணிவரை
சுபநேரம் 5.06-6.36 மணிவரை
இராகுகாலம் 12.36-2.06 மணிவரை
ரத சப்தமி

குறிப்பு: சித்திரை நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் இன்று எச்சரிக்கை , விழிப்புடன் நடந்து கொள்ள வேண்டிய நாள்

வளவன்

**கடகம்** உற்சாகத்துடன் பணிபுரிந்து பாராட்டுக்களைப் பெறுவீர்கள்,வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்,தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும் வகையில் அமையும்.

**மகரம்** உற்சாகம் சம்பந்தமான ரோக பயமுண்டு, சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், நண்பர்களின் சந்திப்புகள் இடம் பெறலாம், பயணங்கள் கைகூடும்.

**சிம்மம்** தொழில் நலன் கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், பயணங்களில் ஆன்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**தனுசு** புத்திரர்களின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள் , தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், முயற்சிகளில் அதிக பிரயாசை காட்டும் நிலையுண்டு.

**விருச்சிகம்** எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர்,தொழிலில் ஆர்வத்துடன் பணிபுரிவீர்கள், போசன சுகமுண்டு, மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

**துலாம்** நண்பர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், முயற்சிகளில் முன்னேற்றம் பெறுவீர்கள், தன்னம்பிக்கை அதிகரிக்கும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**கன்னி** குடும்பத்தில் எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்றுக்கொள்வது நல்லது, தேவையற்ற விதத்தில் பண விரயங்கள் ஏற்படலாம்.மனச் சோர்வான நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கசிப்புக் குகை முற்றுகை!



(கரணவாய்)

வடமராட்சி அல்வாய்ப் பகுதியில் கசிப்புக் குகை முற்றுகையிடப்பட்டதில் கசிப்பு, கோடா மற்றும் கசிப்பு உற்பத்தி உபகரணங்களும் மீட்கப்பட்டதாக பருத்தித் துறை மதுவரித்திணைக்கள பொறுப்பதிகாரி சமிந்த சிறிமான் தெரிவித்தார்.

இது தொடர்பில் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவல் ஒன்றை அடுத்து மதுவரித் திணைக்கள உதவி ஆணையாளர் சோதிநாதன், மதுவரித் திணைக்கள அத்தியட்சகர் மதன் மோகன் ஆகியோரின் வழி நடத்தலில் நேற்றுக் காலை குறித்த இடம் சுற்றி வளைக்கப்பட்ட போது அங்கிருந்த கசிப்பு மற்றும் கோடா வும் உற்பத்திப் பொருட்களும் கைப்பற்றப்பட்டதாக பொறுப் பதிகாரி தெரிவித்தார். (இ-60)

# வீதியில் மயங்கி விழுந்த குடும்பஸ்தர் மரணம்

(கரணவாய்)

வீதியில் மயங்கி விழுந்த குடும்பஸ்தர் ஒருவர் வைத்தியசா லையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மரணமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை இடம்பெற்ற இச் சம்பவத்தில் வதிரிப்பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய குடும்பஸ்தரே மரணமடைந்தவர் ஆவார்.

குடத்தனைப் பகுதியில் வாகனத் திருத்தகம் நடத்தி வந்த அவர் தந்தையின் அந்தியேட்டிக் கிரியைக்காக முதல் நாள் வீட்டிற்கு வந்து விட்டு கிரியைகளை முடித்து விட்டு மறுநாள் (22.01.2018) திருத்தகம் நோக்கிச் சென்ற போது மாலுசந்திப் பகுதியில் மயங்கி வீழ்ந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது அவர் மரணமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-60)

# யாழில் பாரதி விழா

(யாழ்ப்பாணம்)

தமிழக பாரதியார் சங்கமும் யாழ்ப்பாணம் பாரதி மன்றமும் இணைந்து நடத்தும் பாரதி விழா எதிர்வரும் 28.01.2018 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சென்னை பாரதியார் சங்கத் தலைவர் இரா.காந்தி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் மேல் மாகாண ஆளுநர் கே.சி. லோகேஸ்வரன் தலைமை விருந்தினராகவும் யாழ். இந்தியத் துணைத்தூதர் ஆ.நடராஜன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வில் சென்னை சரஸ்வதி பரதநாட்டிய வித்தியாலய இயக்குநர் நர்த்தன சிரோன்மணி கிரிஜா முருகன் குழுவினரின் பரத நாட்டிய நிகழ்ச்சியும் கலைமாமணி சோபனா ரமேஷ் வழங்கும் பாரதி பாடல்களுக்கான பரத நாட்டிய நிகழ்ச்சியும் இடம் பெறவுள்ளன.

நிகழ்வின்போது இயற்றல் பெயர்த்தல் செய்தல் என்ற பொருளில் தமிழகப் பேராசிரியர் உலகநாயகி பழனி. மகாகவி பாரதியின் சமூகப் பார்வை என்ற பொருளில் பேராசிரியர் வெ.இராசேந்திரன், வீழ்வேனென்று நினைத்தாயோ என்ற பொருளில் யாழ்ப்பாணம் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் ஆகியோரது சிறப்புரைகள் இடம் பெறவுள்ளன.

இவ்விழாவின் போது யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் பாரதியார் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளார். அத்துடன் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, கவிஞர் சோ.பத்மநாதன், செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் ஆகிய இலங்கைத் தமிழார்வலர்களும் திருச்சியைச் சேர்ந்த பேராசிரியர் வெ.இராசேந்திரன், பிரான்ஸைச் சேர்ந்த சாம் விஜய் ஆகிய தமிழார்வலர்களும் பாரதி பணிச் செல்வர் என்ற விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர். (இ-7)

# சுகாதாரம் இன்றி இயங்கிய உணவகத்தை மூட உத்தரவு

## 17 ஆயிரம் ரூபா அபராதம்

(கரணவாய்)

சுகாதாரமற்ற நிலையில் இயங்கிய உணவகம் ஒன்றிற்கு 17000ரூபாதண்டப்பணம் விதித்ததுடன் அவ் உணவகத்தை மூடுமாறும் பருத்தித் துறை மாவட்ட நீதிபதி பெருமாள் சிவகுமார் உத்தரவிட்டார்.

நெல்லியடி சுகாதார பரிசோதகரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை பருத்தித் துறை நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது உணவக உரிமையாளருக்கு 17000 ரூபா தண்டப் பணம் விதித்ததுடன் உணவகத்தை மூடுமாறும் திருத்த வேலைகளின் பின்னர் சுகாதாரப் பரிசோதகர் சிபார்சின் பின்னர் திறக்குமாறும் உத்தரவிட்டார்.

இதேவேளை ஒரு குற்றம் சாட்டப்பட்ட உணவக உரிமையாளருக்கு 3000 ரூபாவும் இரு குற்றம் சாட்டப்பட்ட உணவக உரிமையாளருக்கு 6000 ரூபாவும் தண்டப் பணம் விதிக்கப்பட்டது. (இ-60)

# பகவத்கீதை விளக்கவுரை

(யாழ்ப்பாணம்)

யாழ். சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யாவால் வாரந்தோறும் புதன் கிழமைகளில் ஸ்ரீமத்பகவத் கீதை விளக்கவுரை மாலை 5 மணி முதல் 6 மணிவரை யாழ். சின்மயா மிஷன் இல. 9 செட்டத்தெரு ஒழுங்கை, நல்லூர் என்னும் முகவரியில் நடைபெறுகின் றது.

இதில் இன்று புதன்கிழமை ஸ்ரீமத் பகவத்கீதையின் முதலாம் அத்தியாயமாகிய "அர்ஜுன விஷாத யோகம்" பகுதியில் "அரசாட்சிக்காக அழிக்க மாட்டேன்" என்ற தலைப்பில் விரிவுரை இடம்பெறும். (இ-7)

# நகரமாக இருப்பதா? நரகமாக மாறுவதா?

## மக்களே! உங்கள் கரங்களிலேயே தங்கியுள்ளது

## யாழ்.மாநகர சபை ஆணையாளர் அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

வரலாற்று பாரம்பரிய பெருமைமிக்க எம் யாழ்.மாநகரசபை நகரமாக இருப்பதா? அல்லது நரகமாக மாறுவதா? என்பது உங்கள்,எங்கள் ஒவ்வொருவரினதும் கைகளிலேயே தங்கியுள்ளது. நாம் எல்லோரும் ஒருங்கிணைந்து பொறுப்புணர்வுடன் திண்மக் கழிவு முகாமைத்துவத்தில் ஈடுபடுவதாலேயே மாநகர அழகு, தூய்மை,சுகாதாரம், அபிவிருத்தி என்பன விரைவில் சாத்தியமாகும். எனவே உங்கள் ஒவ்வொருவரினதும் ஒத்துழைப்பினை நாடி நிற்கின்றோம்.

உங்கள் வீடுகளில் பயன்படுத்தப்படும் உக்கக்கூடியதும் சேதன பசளையாக்கக் கூடியதுமான கனிசமான கழிவுகளை (குப்பைகள், கழிவுப் பொருட்களை) எரியூட்டுவதால் சூழல் மாசடைகின்றது. எனவே எரியூட்டுவதை தவிர்த்து உங்கள் வீட்டுக்காணிகளிலேயே புதைத்து உங்கள் காணியின் மண் வளத்தினை மேம்படுத்திக்கொள்ளுங்கள்.

தொற்றுநோய் அபாயமுள்ள கழிவுகளை (பம்பஸ் போன்ற கழிவுகள்) பொது இடங்களில் வீசுவதை தயவுடன் தவிர்த்து பையினுள் இட்டு கட்டி வழங்கவும்.

உங்கள் வீடுகளிலுள்ள உக்க முடியாத திண்மக்கழிவுகளை தரம் பிரித்து வழங்குவதன் மூலம் எமது பணியாளர்களுக்குஉதவிசெய்யுங்கள்.

தற்போது இலங்கை பூராகவும் தரம்பிரிக்கப்படாத திண்மக் கழிவுகளை உள்ளூராட்சி சபையால் பொறுப்பேற்பது தவிர்க்கப்பட்டுள்ளது.

பொது இடங்களில் பொறுப்பற்ற விதத்தில் தங்களது வீட்டுக் கழிவுகளை தரம் பிரிக்காது வீசுவதனை தயவுடன் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

எம்மால் பொது இடங்களில் வைக்கப்பட்டுள்ள கழிவு அகற்றும் தொட்டிகளில் அறிவுறுத்தப்பட்டபடி தரம்பிரித்து போடுமாறு மாநகர சபை மக்களைகேட்டுக்கொள்கின்றோம்.

இறந்த விலங்குகள், இறைச்சிக்கழிவுகள் என்பவற்றை பொது இடங்களில் வீசுவதை தயவுடன் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

இலத்திரனியல் கழிவுகளை மாநகர சபையின் கழிவு சேகரிப்பு நிலையங்களில் ஒப்படைக்கவும் என யாழ்.மாநகரசபை ஆணையாளர் இதஜெயசீலன் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார். (இ

# புலவர் பரீட்சார்த்திகளுக்கு வழிகாட்டல் அறிமுக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தால் நடத்தப்படவுள்ள 2018 ஆம் ஆண்டுக்கான சைவப்புலவர் மற்றும் இளஞ்சைவப்புலவர் பரீட்சைக்கு தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கான வழிகாட்டல் அறிமுக நிகழ்வு எதிர்வரும் 27.01.2018 சனிக்கிழமை யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. இவ் வழி காட்டல் அறிமுக நிகழ்விற்கு பரீட்சைக்கு விண்ணப்பித்த அனைத்து பரீட்சார்த்திகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப் புலவர் எஸ்ரி.குமரன்அறிவித்துள்ளார்.

பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் வகுப்புக்கள் பிரதி சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை குறித்த பாடசாலையில் இடம்பெறவுள்ளது. பரீட்சை வழிகாட்டல் வகுப்பில் இலக்கணம், சாத்திரம், உரைநடை, இலக்கியம் , வரலாறு ஆகிய ஐந்து பாடங்களும் இளஞ்சைவப் புலவர் மற்றும் சைவப்புலவர் பரீட்சைக்கு தோற்றுவோர் என இரு பிரிவாக தனித் தனியே வகுப்புக்கள் இடம்பெறவுள்ளது. பரீட்சை சித்திரை மாதம் 3ஆவது வாரத்தில் இடம்பெறவுள்ளன.

எனவே பரீட்சைக்கான வழிகாட்டல் அறிமுக நிகழ்விலும் வழிகாட்டல் வகுப்புக்களிலும் விண்ணப்பதாரிகள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவித்துள்ளார். (இ-7)

# மீளாய்வு பெறுபேறு

(யாழ்ப்பாணம்)

யா/செட்டித்தெரு மெ.மி. த.க பாடசாலை மாணவர்களின் தரம்5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் மீளாய்வுப் பெறுபேற்றின் அடிப்படையிலும் லோ.வருண் -164 புள்ளியும் ச.கோபிராம் -156 புள்ளியும், ச.சுடர்நிலவன்-155 புள்ளியும் பெற்று சித்தியடைந்துள்ளனர் என அதிபர் அறிவித்துள்ளார். (இ-8)

# தனியார் ஊழியர் சங்க அங்குரார்ப்பண நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தனியார் ஊழியர் சங்கத்தின் அங்குரார்ப்பண நிகழ்வும் கலந்துரையாடலும்எதிர்வரும்28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தின் முதலாம் மாடியில் இடம்பெறும்.

இக்கூட்டத்திற்கு ஆண், பெண் ஊழியர்கள் அனைவரும் கலந்து சிறப்பித்து தங்கள் ஆதரவை நல்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ-8)



அமரர் கிருபைராஜா மதுசூதனன் அவர்களின் 02 ஆம் ஆண்டு நினைவினை முன்னிட்டு நம் உயிரோடு பிறர் உயிரையும் காப்போம் எனும் தொனிப்பொருளில் இரத்ததான நிகழ்வு அண்மையில் யாழ். மயிலணி சைவ வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.அச்சுவேலி மத்திய கல்லூரியின் வருடாந்த,இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை 25 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 1.30மணிக்கு கல்லூரி விளையாட்டு மைதானத்தில் கல்லூரி அதிபர் சி.திரிகரன் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்டச்செயலக மேலதிக அரச அதிபர் (காணி) சு.முரளிதரன், சிறப்பு விருந்தினராக புத்தூர் வலி.கிழக்கு பிரதேசசபை செயலாளர் யு.ஜெலீபன், கௌரவ விருந்தினர்களாக கல்லூரியின் ஓய்வு நிலை பகுதித் தலைவர் நா.சண்முகரட்ணம், கல்லூரியின் பழைய மாணவர் (லண்டன்) இ.சிவதயாளன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கம்பவாரிதி இ.ஜெயராஜுக்கு வலம்புரி ஆசிரியரின் பதில்

என்றும் என் அன்புக்கும் மரியாதைக்கும் உரிய கம்பவாரிதி இ.ஜெய்ராஜ் அவர்களுக்கு அன்பு வணக்கம்.

27.12.2017 அன்று யாம் எழுதிய ஆசிரியர் தலையங்கத்திற்கு தாங்கள் பதில் எழுதியிருந்தீர்கள். அதற்கு முதற்கண் நன்றி.

எத்தனையோ வேளைப்பளுவுகளுக்கு மத்தியில் ஆசிரியர் தலையங்கத்திற்குப் பதில் எழுத வேண்டும் என்று நினைத்தமை தங்கள் பெருந்தன்மை என்றுணர்ந்தேன்.

தாங்கள் எழுதிய பதிலில் பல விடயங்களைப் பதிவு செய்திருந்தீர்கள்.

விடுதலைப்புலிகளின் காலத்தில் தாங்கள் முன்வைத்த நியாயங்கள் கண்டு மெய்சிலிர்த்தேன்.

ஆனால் அப்படி நடந்திருக்குமா என்று எந்த ஐயமும் என்னில் எழவில்லை. காரணம் கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்கள் விடுதலைப்புலிகளிடம் மட்டுமல்ல சாட்சாத் ஈஸ்வரன் நேரில் வந்தாலும் நியாயத்தை எடுத்துரைக்கவல்லவர் என்பது உலகத்தார் அறிந்த விடயம். இதில் எந்த புகழ்பாடலும் கிடையாது.

அதேவேளை ஒரு தவறு செய்தால் அதைத் தெரிந்து செய்தால்... எனத் தாங்கள் எழுதிய மிக நீண்ட தொடரில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளருமாகிய எம்.ஏ.சுமந்திரனைச் சாடி அவரின் சர்வாதிகாரத் தன்மையைக் கண்டித்து எழுதியமைக்காக நீங்கள் முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு ஆதரவாக இருக்கிறீர்கள் என்று யான் ஒருபோதும் கருதியதில்லை.

அவ்வாறு கருதி உங்கள் கருத்தைப் பாராட்டி எழுதவும் இல்லை.

சுமந்திரன் தொடர்பில் நீங்கள் எத்தகைய குறைகளைச் சுட்டிக் காட்டியிருந்தீர்களோ அத்தனை விடயத்திலும் நான் ஒத்துப் போபவன்.

நீங்கள் குறிப்பிட்ட அத்தனை விடயங்களையும் மனதிற்கொண்டே நாமும் கூட்டமைப்புத் தொடர்பில் எங்கள் கருத்துக்களை முன்வைத்தோம்.

சுமந்திரன் மீது நீங்கள் முன்வைத்த விமர்சனங்களில் ஒத்துப் போகும் அதேநேரம் வடக்கின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் மீது நீங்கள் முன்வைத்த குற்றச்சாட்டுக்களை என்னால் ஏற்கவும் முடியவில்லை என்பதைத் தயவுடன் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த இடத்தில் சுமந்திரனை குற்றப்படுத்தினால் ஏற்பீர்கள். முதலமைச்சர் விக்னேஸ்வரனை விமர்சித்தால் நிராகரிப்பீர்களோ! என்று கூட நீங்கள் கேள்வி எழுப்பலாம் என்பதை நான் அடியோடு நிராகரிக்கமாட்டேன்.




எனினும் தங்கள் வாழ்வையே அர்ப்பணித்து கட்டியெழுப்பிய கம்பன் கழகத்தில் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களை 15 ஆண்டுகளாகப் பெருந்தலைவராக்கி அழகு பார்த்தீர்களே அது விக்னேஸ்வரன் அவர்களின் நேர்மைக்கும் நீதிக்கும் ஆளுமைத் திறத்திற்கும் தலைமைத்துவப் பண்புக்கும் அவரின் சான்றாண்மைக்கும் கிடைத்த உயரிய கௌரவம் என்றே நாம் கருதுகின்றோம்.

சிலவேளை அவர் தொடர்பில் நீங்கள் கேட்ட கேள்விக்கான விடையாகவும் இதனைக் கருத முடியும்.

தவிர, கம்பன் கழகம் ஒரு இலக்கிய அமைப்பு. எனவே ஒரு இலக்கிய அமைப்பின் பெருந் தலைவர் பதவியை ஓர் இனத்தின் தலைமைக்கு தகைமையாக எடுத்துக் கொள்ள முடியாது என்று நீங்கள் வாதிட்டால் நீதியரசர் விக்னேஸ்வரன் தமிழ் மக்களுக்கான தகைசார்ந்த தலைமைக்குரியவர் என்பதை பல சான்றுகள் மூலம் என்னால் நிரூபிக்க முடியும்.

எதுவாயினும் வடக்கு மாகாணத்தின் முதலமைச்சர் என்ற பதவி நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களை தேடிச் சென்றது என்பதையும் அவர் பதவியைத் தேடி ஒருபோதும் வரவில்லை என்பதையும் தாங்கள் நிராகரிக்கமாட்டீர்கள் என நம்புகிறேன்.

பதவியைச் தேடிச் செல்வது என்பது ஒரு தலைவருக்குரிய பண்பாக யாம் கருதவில்லை.

யாரைத்தேடி பதவி போகிறதோ அவரே தலைமைத்துவத்துக்குரிய சான்றாண்மையை கொண்டுள்ளார் என்பது நம் தாழ்மையான கருத்து.

அந்த வகையில், வீடு தேடிச் சென்று நீங்கள் தான் வடக்கின் முதலமைச்சராக வரவேண்டும் என்று இரா.சம்பந்தர் ஐயா அழைக்க, வருகிறேன் என்று ஓடி வராமல், கூட்டமைப்பில் இருக்கும் அத்தனை கட்சித் தலைவர்களும் இணைந்து கேட்டால் மட்டுமே வருவேன் என்று கூறிய நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனை அழைத்து வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்போது அவர் மீது குற்றச் சாட்டுக்களை அடுக்கினால் உடனடியாக நாமும் எங்களை மாற்றி அவரை எதிர்க்க வேண்டும் என்று யார் நினைத்தாலும் அதில் நியாயம் இல்லை என்பதை தாங்கள் ஏற்பீர்கள் என நம்புகிறேன்.

மரியாதைக்குரிய கம்பவாரிதி அவர்களே!

இதுவரையும் கூறாத ஒன்றை இவ்விடத்தில் கூற விரும்புகின்றேன். வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மீதான எங்கள் ஆதரவும் அபிமானமும் எங்கள் சொந்த நலன் சார்ந்தது அல்ல என்பதை முதலில் சத்தியப்படுத்துகின்றேன்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மீதோ அன்றி மரியாதைக்குரிய சம்பந்தர் ஐயா மீதோ பாராளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராஜா மற்றும் எம்.ஏ. சுமந்திரன் மீதோ எங்களுக்குத் தனிப்பட்ட கோபம் எதுவும் கிடையாது.

தமிழ் மக்களின் உரிமையை மிகத் தெளிவாக எடுத்துரைக்க வல்ல சிவஞானம் சிறிதரன் பாராளுமன்ற உறுப்பினராக இருப்பது தமிழருக்குப் பெருமை என்று நினைப்பவன் யான். ஆனாலும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் மீது பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தற்போது கொண்டுள்ள நிலைப்பாட்டில் எனக்கு உடன்பாடில்லை. நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களை வடக்கின் முதலமைச்சராக்குவதில் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனின் வகிபங்கு காத்திரமானது. எனினும் முதலமைச்சருக்கு எதிராக கூட்டமைப்பு செயற்பட்ட போது அதை பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் வன்மையாகக் கண்டித்திருக்க வேண்டும். ஆனால் அதை அவர் செய்யவில்லை. அவ்வாறு செய்யாததற்கு கூட்டமைப்புக்குள் இருந்த சர்வாதிகாரத்தனம் கூட காரணமாக இருந்திருக்கலாம்.

அதேவேளை வடக்கின் முதலமைச்சராக நீதியரசர் விக்னேஸ்வரன் அவர்களைக் கொண்டு வந்து விட்டு கூட்டமைப்பின் தலைமை அவரை எப்படி நடத்தியது என்பது நீங்கள் அறியாத ஒன்றல்ல.

முதலமைச்சருக்கு எதிராகச் செயற்படுவதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனே முதன்மையானவர். நேரடியாகவும் மறைமுகமாகவும் அவர் முதலமைச்சர் விக்னேஸ்வரனை எதிர்த்தார்.

அவ்வரை அவமதிக்கும் வகையில் செயற்பட்டார்.

வடக்கு மாகாண சபையில் இருக்கக்கூடிய இளம் உறுப்பினர்களைத் தன்வசம் வைத்துக் கொண்டு உயர்ந்த பதவி தரலாம் எனப் பேரம் பேசி அவர்கள் மூலமாக முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு எதிராக செய்த சதிகள் கொஞ்ச நஞ்சமல்ல.

(நாளை தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலில் 'X' புள்ளடியைத் தவிர வேறெந்த அடையாளமும் செல்லுபடியற்றது

## முல்லைத்தீவு மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

எதிர்வரும் பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வாக்களிக்கும் வாக்காளர்கள் தாம் விரும்பிய கட்சியினதோ அல்லது சுயேட்சை குழுவினதோ சின்னத்துக்கு எதிரில் புள்ளடியை (x) இடுமாறும் ஏனைய எந்த அடையாளங்களும் செல்லுபடியற்றதாகும். எனவே வாக்காளர்கள் இதனை கருத்தில் கொண்டு செயற்படுமாறு முல்லைத்தீவு மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் கா.காந்தீபன் அறிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி.மன்றத் தேர்தலில் மக்கள் வாக்களிக்கும் போது அவதானமாச் செயற்படுமாறும் அவர் கேட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று, துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய நான்கு பிரதேச சபைகளுக்கு பல்வேறு கட்சிகளும் சுயேட்சை குழுக்களும் போட்டியிடுகின்றன. இந்தப் பிரதேச சபைகளுக்கு உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக 72961 வாக்காளர்கள் களத்தில் உள்ளனர் இவர்களுக்காக 134 வாக்களிப்பு நிலையங்களில் தேர்தல் வாக்களிப்பு நடைபெறவுள்ளது.

இந்நிலையில் நடைபெறவுள்ள தேர்தல் தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் கா.காந்தீபனிடம் தொடர்பு கொண்டு வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (2-281)

## முள்ளியவளை 6ம் கட்டையில் விபத்து; சாரதி படுகாயம்



(பனிக்கன்குளம்)

தண்ணீரூற்று நெடுங்கேணி வீதியில் இடம்பெற்ற விபத்தில் சாரதி படுகாயமடைந்தார்.

இச் சம்பவம் நேற்று காலை 7 மணியளவில் நடைபெற்றது. இது தொடர்பில் தெரியவருவதாவது, கொழும்பில் இருந்து தண்ணீர் தாங்கிகளை ஏற்றி பயணித்த கனரக வாகனம் ஒன்று முள்ளியவளை ஆறாம் கட்டைப் பகுதியில் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் சாரதி படுகாயம் அடைந்துள்ளார்.

எகல பகுதியினை சேர்ந்த 51 வயதுடைய டோன் ஜெரோஜ் ஸ்ரான்லி என்பவரே படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டவராவார். (2-281)

## வவுனியா, முல்லையில் தபால் மூல வாக்குப் பதிவுகள் சீராக நடைபெற்றன

### படம் எடுப்பதற்கு ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுப்பு



(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் நேற்று முன்தினம் காலை தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை நடைபெற்ற தபால் மூல வாக்குப்பதிவு சீராக இடம்பெற்ற போதிலும் அப்பகுதியில் ஊடகவியலாளர்கள் படம் எடுப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், பெலிஸார், மற்றும் முப்படையினருக்கான தபால் மூல வாக்குப்பதிவுகள் இன்று இடம்பெற்றன.

இதன்போது மாவட்ட செயலக உத்தியோகத்தர்களுக்கான வாக்குப்பதிவு மாவட்ட செயலக கேட்போர் கூடத்திலும் பொலிஸாருக்கான வாக்குப்பதிவு வவுனியா பொலிஸ் நிலையத்திலும் நடைபெற்றிருந்தது.

இந் நிலையில் மாவட்ட செயலக கேட்போர் கூடப்பகுதியில் அரச உத்தி யோகத்தர்கள் வாக்களிப்பதற்காக காத்திருந்தமை மற்றும் பொலிஸ் நிலையத்தில் காத்திருந்த பொலிஸ் உத்தியோகத்தர்களையும் படம் எடுப்பதற்கு ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் பொலிஸ் நிலையங்களிலும் தேர்தல் அலுவல்கத்திலும், மாவட்ட செயலகத்திலும் அலுவலக அதிகாரிகளுக்கான தபால்மூல வாக்களிப்பு நடைபெற்றுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையம், முள்ளியவளை பொலிஸ் நிலையம், புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையம், மல்லாவி பொலிஸ் நிலையம், ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையம், மாங்குளம் பொலிஸ் நிலையம், வட்டுவாகல் சிறப்பு அதிரடிப்படை முகாம் போன்ற இடங்களில் கடமை புரியும் 792 பொலிஸ் உத்தியோகத்தர்களும், மாவட்ட செயலகத்தில் பணியாற்றும் அரச உத்தியோகத்தர்கள் 156 பேரும் 11 தேர்தல் திணைக்கள அதிகாரிகளும் நேற்று முன்தினம் தபால் மூலம் வாக்களித்ததாக முல்லைத்தீவு மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் காந்தீபன் தெரி வித்துள்ளார். (2-281-250)




## வருடாந்த விளையாட்டுப் போட்டி

(கிளிநொச்சி)

கிளி/சோரன்பற்று சி.சி.த.க பாடசாலை வருடாந்த விளையாட்டு போட்டி இன்று புதன் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் நடராசா ராமதாஸ் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை உதவிப்பணிப்பாளர் இரா. அகிலன் சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி ஆரம்பக்கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் சுந்தரம் சிவபாலன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக, கிராம அலுவலர் யோகராசா சிவராம், நலன் விரும்பியான கந்தவனம் தங்கராசா, கிளிநொச்சி வி.ரி.ஏ. பயிற்சி முகாமையாளர் எம். ராஜ் குமார் ஆகியோர்கலந்துகொள்ளவுள்ளனர். (2)

## தொழிற்பயிற்சி கண்காட்சி

(பனிக்கன்குளம்)

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் கிராம அபிவிருத்தி திணைக்களம் மற்றும் மகளிர் அபிவிருத்தி திணைக்களம் ஆகியவை இணைந்து நடத்திய சுயதொழில் பயிற்சியில் கலந்து கொண்ட யுவதிகளின் சுயதொழில் கண்காட்சி நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது பல்வேறு துறைகளில் சுய தொழில் பயிற்சியை பூர்த்தி செய்த யுவதிகளின் சுயதொழில் உற்பத்திப் பொருட்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

குறித்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் எஸ்.கேதீஸ்வரன் கலந்து கொண்டு வைபவ ரீதியாக குறித்த கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார்.

இதன்போது பல்வேறு தொழில் பயிற்சிகளை பூர்த்தி செய்ய யுவதிகளின் ஆக்கங்கள் அங்கு கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-281)



மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் கிராம அபிவிருத்தி திணைக்களம் மற்றும் மகளிர் அபிவிருத்தி திணைக்களம் ஆகியவை இணைந்து நடத்திய சுயதொழில் பயிற்சியில் கலந்துகொண்ட யுவதிகளின் சுயதொழில் கண்காட்சி நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. (படங்கள்:பனிக்கன்குளம் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழவர் விழாவும், மூத்த விவசாயிகள் கௌரவிப்பும்



(பனிக்கன்குளம்)

மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் உழவர் விழா மற்றும் மூத்த விவசாயிகள் கௌரவிப்பு நிகழ்வும் நேற்று முன்தினம் காலை மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் எஸ்.கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது பொங்கல் பொங்கப்பட்டு வைபவ ரீதியாக நிகழ்வுகள் இடம்பெற்றதோடு மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மூத்த விவசாயிகள் 13 பேர் விசேடவிதமாக கௌரவிக்கப்பட்டனர்.

தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு பொன்னாடை போர்த்தி,மாலை அணிவித்து, பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் எஸ்.கேதீஸ்வரன் தலைமையில் விசேட நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதன்போது மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கேதீஸ்வரன், பிரதேச செயலக பணியாளர்கள், கிராம அலு வலகர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-281)



# பிரதிநிதி மாநாடு

ஶ்ரீலங்கா ஜனரஜ சுகாதார சேவைச் சங்கத்தில் வடக்கு கிழக்கு மாகாண சுகாதார சேவையில் பணியாற்றும் அங்கத்தவர்களின் பிரதி மாநாடு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி கிளிநொச்சி கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் மு.ப. 10 மணிக்கு நடத்துவதற்கு சகல ஏற்பாடுகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இம் மாநாட்டில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சுகாதார சேவையில் பணியாற்றும் கனிஷ்ட ஊழியர்களை பாதிக்கும் பிரேரணைகளுக் கான அனுமதியை பெறவும் அரசாங்கத்திற்கு முன்வைக்கப்படவுள்ள உரிய அரச சேவையை பாதிக்கும் கோரிக்கைகளுக்கான அனுமதியைப் பெறவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இம் மாநாட்டின் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் அதிகாரிகள் மற்றும் அமைச்சர்கள் உள்ளிட்ட தொழிற் சங்கத் தலைவர்களை அழைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. (2)

# பனிக்கன்குளம் கிராமத்தின் உள்ளக வீதிகள் புனரமைப்பு

(பனிக்கன்குளம்)

பனிக்கன்குளத்தில் சுமார் 4 கிலோமீற்றர் உள்ளக வீதிகள் தற்காலிகமாக புனரமைக்கப்பட்டு வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்ப்பட்ட கிராமங்களின் உள்ளக வீதிகள் நெடுங்காலமாக புனரமைப்பின்றி காணப்படுவதால் மக்கள் மிகவும் சிரமப் படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் பனிக்கன்குளம் கிராமத்தின் உள்ளக வீதிகளும் சுமார் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக திருத்தப்படாது காணப்பட்ட நிலையில் கிராம அபிவிருத்தி சங்கத்தின் கோரிக்கைக்கமைவாக புதுக்குடியிருப்பு பிரதேச சபையினரால் புதுக்குடியிருப்பு பிரதேச சபை ஒலுமடு உப அலுவலகத்தினூடாக குறித்த கிராமத்தில் காணப்பட்ட சுமார் 4 கிலோமீற்றர் வீதிகள் கனரக இயந்திரங்கள் மூலம் தற்காலிகமாக புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன



குறித்த இந்த வீதிகளை விரைவில் நிரந்தரமாக புனரமைப்பு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோருகின்றனர்.

இதேவேளை அண்மைய நாட்களில் குறித்த பிரதேச சபையினால் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்ப்பட்ட பல்வேறு கிராம உள்ளக வீதிகள் கனரக இயந்திரங்கள் மூலம் தற்காலி கமாக புனரமைப்பு செய்யப்பட் டுவருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (2-281)

# தேர்தல் சட்டத்தை மீறிய நால்வர் முல்லையில் கைது

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவில் தேர்தல் சட்டத்தை மீறிய நான்கு பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தேர்தல் பிரசார சுவரொட்டிகளை சட்டவிரோதமாக எடுத்துச் செற்ற குற்றத்தின் அடிப்படையில் முள்ளியவளை பகுதியில் ஒருவர் கைதாகியுள்ளார்.

ஏனைய மூன்று சந்தேக நபர்களும் விசுவமடு, புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேசங்களில் கைதாகியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மேலும், தேர்தல் சட்டத்தை மீறி செயற்படுபவர்களை கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# கிளி/முழங்காவில் ம.வித்திக்கு குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம்

பூநகரிப் பிரதேசத்தின் கிளி/முழங்காவில் மகாவித்தியாலயத்திற்கு குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் வழங்கும் நிகழ்வு நேற்று பாடசாலை அதிபர் பத்மநாதன் ஆனந்தராசா தலைமையில் இடம்பெற்றது.

அதிபர் கருத்து தெரிவிக்கையில், தமது வாழ் நாள் இந்நிகழ்வின் வாயிலாக 10 வருடங்கள் அதிகரித்துள்ளதாகவும் இந்த உதவிக்காக பல வருடங்கள் காத்திருந்ததாகவும் தெரிவித்தார். கனடா Ralhan Dentistry நிறுவனத்திற்கும் அனைவரின் சார்பிலும் நன்றி தெரிவிப்பதாகவும் கூறினார். பிரதம அதிதியாக கனடா செந்தில் குமரன் கலந்து கொண்டு குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரத்தை கையளித்து மாணவர்கள் மத்தியில் உரையாற்றுகையில் தமக்கு வடகிழக்குப்பிரதேசாங்களில் இருந்து சிறுநீரக சிகிச்சைக்காக நிதியுதவி வேண்டி பல கோரிக்கைகள் வந்ததையிட்டு தான் இந்த முடிவை எடுத்ததாகவும் இதன்மூலம் எமது எதிர்கால சந்ததியினரை நோய்களிலிருந்து பாதுகாக்க முடியுமெனவும் நம்பிக்கை தெரிவித்தார்.

மேலும் இச்செயற்றிட்டம் வன்னிப் பெரு நிலப்பரப்பில் சுத்தமான தண்ணீரை எதிர் பார்த்து காத்துக் கொண்டிருக்கும் இதர பாடசாலைகளுக்கும் எடுத்துச் செல்லப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். இந்த முதலாவது திட்டத்தின் பிரகாரம் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களும் ஆசிரியர்களும் பயன்பெறுவர் என்பது குறிப்பிடத்தக்கது. (2-281)


# முதலை மடக்கிப்பிடிப்பு

(பனிக்கன்குளம்)

வவுனியாவில் வீட்டிற்குள் சென்ற முதலை மக்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டது. வவுனியா நெளுக்குளம் பகுதியிலுள்ள வீடு ஒன்றிற்குள் புகுந்த முதலையை அப்பகுதியிலுள்ளவர்களினால் மடக்கிப் பிடித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

நேற்று அதிகாலை 3.30மணியளவில் நெளுக்குளம் பொலிஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள வீடு ஒன்றிற்குள் திடீரெனப் புகுந்து மறைந்துகொண்ட ஆறு அடி நீளமான முதலையை அவதானித்த வீட்டு உரிமையாளர் அயலவர்களின் உதவியுடன் முதலையை மடக்கிப்பிடித்து பொலிசாரிடம்



ஒப்படைத்தார். இதனால் பாரிய அனர்த்தம் ஒன்று தவிர்க்கப்பட்டுள்ளது.

தற்போது குளங்களின் நீர் மட்டம் இன்றி முதலைகள் வெளியேறி வீடுகளை நோக்கியும், வயல்களை நோக்கியும் செல்வதைக் காணகூடியதாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# வீட்டில் மறைத்து வைக்கப்பட்ட கசிப்புடன் ஒருவர் கைதானார்

(மல்லாவி)

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள 8 ஆம் யுனிட் பகுதியில் விற்பனை செய்யும் நோக்கோடு தனது வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 8 போத்தல் கசிப்பை வைத்திருந்த சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்துள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ. ஆர்.விமல குணரட்ணா தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் திங்கட் கிழமை இரவு 8 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

தருமபுரம் பொலிஸார் விசேட ஊர்சுற்றுக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த போது கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து தருமபுரம் 8 ஆம் யுனிட் கிராமக் குடியிருப்பு பகுதியில் உள்ள வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 8 போத்தல் கசிப்பை கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் வீட்டு உரிமையாளரையும் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்கள் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன் கைதான சந்தேக நபரிடம் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் தடயப் பொருட்களுடன் சந்தேக நபரை கிளிநொச்சி மாவட்ட நீதமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ.ஆர். விமல குணரட்ணா தெரிவித்துள்ளார். (2-15)

# வெளிநாட்டு வேலைத்திட்டத்திற்கான நேர்முகப் பரீட்சை

(பனிக்கன்குளம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் வெளிநாட்டு வேலைத்திட்டத்திற்காக முல்லைத்தீவு மாவட்டத்தின் இளைஞர், யுவதிகளைத் தெரிவு செய்யும் நேர் முகப் பரீட்சை இன்று புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணி வரை தேசிய இளைஞர் சேவைகள் மன்ற ஏ-9 வீதி மாங்குளத்தில் அமைந்துள்ள மாவட்ட காரியாலயத்தில் நடைபெற இருப்பதாக தேசிய இளைஞர் சேவைகள் மன்ற முல்லைத்தீவு மாவட்ட உதவிப் பணிப்பாளர் திருமதி சரோஜா குகநேசதாசன் தெரிவித்துள்ளார்.

நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்பவர்களிடம் எதிர்பார்க்கப்படும் சில அடிப்படை தகைமைகள் வருமாறு,

ஆகக் குறைந்தது இளைஞர் கழகத் துறையில் 3 வருட செயற்பாட்டாளராக ஈடுபட்டிருத்தல். 2018 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களின் விண்ணப்பதாரிகளாக இருத்தல், யூத் வித் ரலண்ட் வேலைத்திட்டத்திற்கு சிறந்த கருத் திட்டத்தை செயற்படுத்திய இளைஞர் கழகத்தின் அங்கத்தவராக இருத்தல்,தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மூலமாக இதற்கு முன்பு வெளிநாட்டு பயணங்களுக்கு பங்குபற்றாதிருத்தல், வேறு தொண்டர் அமைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடல், கலாசாரம் மற்றும் விளையாட்டு திறமைகள் பற்றிய ஆற்றல் என்பனவாகும். (2-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகில இலங்கை ரீதியிலான கட்டுரைப்போட்டியில் வேம்படி மகளிர் கல்லூரி மாணவி முதலிடம்





(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை ரீதியில் கல்வியமைச்சின் அனுசரணையில் நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் மத்திய பிரிவில் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி மாணவி அம்பிகை சண்முகலிங்கன் தேசிய மட்டத்தில் முதல் இடம் பெற்றுள்ளார்.

சுகாதார அமைச்சும், இலங்கை நீரிழிவு சம்மேளன அகம்சுரப்பியியல் கல்லூரியும் இணைந்து நடத்திய இப்போட்டி விருது வழங்கும் வைபவம் கொழும்பு தாமரைத் தடாக கலையரங்கில் சுகாதார அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந் நிகழ்வில் வைத்திய நிபுணர்கள், கல்வியாளர்கள் கலந்துகொண்டு மாணவருக்கு விருது, சான்றிதழ், பணப்பரிசில் வழங்கிக் கௌரவித்துள்ளனர். (இ-7)

# மீனவச் சட்டத்தில் திருத்தம் பிரேரணை இன்று சபைக்கு



(கொழும்பு)

மீனவச் சட்டத்தில் திருத்தத்தை மேற்கொள்வது தொடர்பான, பிரேரணை இன்று பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளதாக அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இலங்கை கடல் எல்லையில் நுழைந்து சட்ட விரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்தல், நாட்டில் கடற்பகுதியில் மீன்பிடி மற்றும் நீரியல் வளத்தைப் பாதுகாத்தல் போன்ற நோக்குடன் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக அமரவீர தெரிவித்தார். (இ-7)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# 'உணவே மருந்து'



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

(கடந்த வாரத் தொடர்ச்சி)

**புளிப்பு**

புளிப்புச்சுவை பசியைத் தூண்டுகிறது. செரிமானத்தை மிகைப்படுத்துகின்றது. உணவின் பால் வேட்கையையும் சுவை உணர்வையும் ஏற்படுத்து கின்றது. வெப்பத்தைக் கூட்டுகின்றது. குடலில் வலி யின் இயக்கத்தைத் தூண்டி மேல் கீழ் வெளி யேற்ற உதவுகின்றது.

புளிப்பு உணவை மிகையாக உட் கொண் டால் உடலுறுப்புக்கள் தளர்ச்சி யடையும், தலை சுற்றல், கண் இருட்டல் ஏற்படலாம், உடலில் அரிப்பு, வெளுப்பு, அக்கி, அம்மை தோன்றும், நீர் வேட்கை மிகும், உடல் வீங்கும், குறைந்தால் செரிமானம் குறையும்.

**உப்பு - உவர்ப்பு**

உப்பு உடலுறுப்புகளுக்குள் கசிவையும், இசைவையும் ஏற்படுத்து கிறது. வியர்வையை மிகுதிப்படுத்தி வெளியேற்று கிறது. நுண்ணிய உடலுறுப்புக்குள் அமைந்துள்ள குழாய்களில் ஏற்படும் தடைகளை, அடைப்புகளை, சிக்கல்களை உடைத்து நீக்க உதவுகிறது. செரிப் பூட்டுகிறது. உப்பை மிகுதி யாக உட்கொண்டால் - உணவில் சேர்த்துக் கொண்டால் இளமையில் நரை, திரை மூப்பு ஏற்பட்டு விடும். வழுக்கை விழும். நீர் வேட்கை மிகும், சிறுநீரகக் கோளாறு வரும் . குண்டிக் காயில் கல் ஏற்படும். நீர டைப்பு கோளாறு வரும், நீரடைப்பு எரிச்சல் தோன்றும், குறைந்தால் சோர்வு தோன்றும்.

**கைப்பு - கசப்பு**

இச் சுவையை யாரும் விரும்புவதில்லை. ஆனால் இதுதான் உடலிற்கு உறுதுணையாகின்றது. பூச்சிகளைக் கொல்கின் றது. விடத்தை முறிக்கி றது. தோல் நோய்களைக் குணமாக்கிறது. எரிச்சல், கசிவு குமட்டலைக் குறைக்கிறது. மலம், சிறுநீர் ஆகியவற்றிற்கு வரட்சியை அளிக்கிறது.கசப்பு மிகுந்தால் உடல் தாதுக்கள் குறைகின்றன. வாத நோய்கள் வருகின்றன. குறைந்தால் குருதி தூய்மை கெடுகின்றது. மலப்புழுக்கள் தோன்றுகின்றன.

**கார்ப்பு - காரம்**

காரச் சுவை உணவின் பால் நாட்டத்தை உண்டாக்கும். செரிப்பாற்றலை மிகுவிக்கும். சிறு குடலில் செரிக்கப்பட்ட உணவுக் கூழிலிருந்து உயிர்ச்சத்தை நீர்ப் பொருளாக அந்தந்த உடல் உறுப்புக்கள் உறிஞ்ச உதவுகிறது. குழாய்களின் அடைப்பை அகற்றி குழாய் முதலியவற்றை வெளியேற்ற உதவுகிறது. தொண்டை நோய், உடல்துடிப்பு, வீக்கம், குமட்டல் ஆகியவற்றைக் குறைக்கிறது.

மிகையானால் நீர் வேட்கை மிகும். உடல் ஆற்றல் குறையும், உடலில் நடுக்கம் ஏற்படும். வலிப்பு நோய் வரும். குறைந்தால் செரிப் பாற்றல் குறையும்.

**துவர்ப்பு**

துவர்ப்புச்சுவை பித்தத்தையும், கபத்தையும் போக்கும், குருதியை உண்டாக்கும். தூய்மைப்படுத்தும், கசிவுகளையும் கொழுப்புகளையும் வளரச் செய்யும், புண்களை ஆற்றும், தோலுக்கு வனப்பையும் வலுவையும் தரும், மலத்தைக் கட்டும், குளிர்ச்சி தரும், செரிமானம் குறையும்.

துவர்ப்பு மிகுதியானால் வயிறு பொருமும், மலம் சிக்கும், சிறுநீர் தடைப்படும், நீர் வேட்கை மிகும், மார்பு வலி ஏற்படும், ஆண்மை, பெண்மை குறையும், உறுப்புகளில் உந்தும் ஆற்றல் குறையும், குறைந் தால் குருதி கெடும் கசியும்.

வாத உடம்பினர் கைப்பு, கார்ப்பு , துவர்ப்பு உணவுகளைக் குறைத்து இனிப்பு, புளிப்பு, உப்பு, கார்ப்பு உணவுகளைக் மிகுத்து உண்ணுதல் நன்றாகும். பித்த உடம்பினர் புளிப்பு, உப்பு, கார்ப்பு உணவுகளைக் குறைத்து கைப்பு, துவர்ப்பு, இனிப்பு, உணவுகளை மிகுத்து உண்ணுதல் நலம். கப உடம்பினர், கார்ப்பு, துவர்ப்பு



உணவுகளை மிகுத்தும் உண்ணுதல் நலம்.

எல்லோரும் எல்லாக் காலத்திற்கும் பொருந்திய அறு சுவை உணவுகளை அளவோடு உண்ணுதலே உடல் நலத்திற்கும் வளத்திற்கும் நல்லதாகும்.

நோயற்று வாழ நினைப்வர்கள் அவரவர்களுக்கேற்ற நோய்க்கேற்றவாறு தேவையான சுவையுணவு களைக் கூட்டியும், தேவையற்ற சுவை உணவுகளை குறைத் தும் உண்ணுதல்வேண்டும்என்பது திருவள்ளுவர் கருத் தாகும். மருத்துவநூல்களும்இதனையே கூறுகின்றன. நாவிற்கு அடிமை ஆகாமல் உடல் நோவிற்கு இடங்கொடாமல் வாழ்தலே அறிவுடைமை!

**கால இயல்போடு பொருந்துவன**

இலக்கியத்திற்கே அன்றி இலங்கிடும் வாழ்வியலுக்கும் இலக்கணம் கூறுவது தொல்காப்பியம். தொல்காப் பியம் கால இயல்பை வகுத்துரைக்கின்றது. திணை என்ப தற்கு ஒழுக்கம் என்று பொருள். மக்கள் சுட்டாகிய உயர்திணை மக்களுக்குரிய ஐந்திணையை வகுத்துக் கூறு கின்றார். குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் எனத் திணை கூறுவார். இவைகளுக்குப் பொழுதும் காலமும் தொகுத்துக் கூறுவார்.

குறிஞ்சிக்குப் பெரும் பொழுது கூதிர்காலமும் முன் பனிக்காலமும் ஆகும். சிறு பொழுது யாமம். நடு இரவு முல்லைக்கு பெரும் பொழுது கார்காலம் சிறு பொழுது மாலைக்காலம் பாலைக்கு பெரும் பொழுது பின்பனி சிறுபொழுது நண்பகல் மருதம், நெய்தல் ஆகிய நிலங்களுக்கும் பெரும் பொழுது ஆறும் பெறும் பொழுது களாகும். மருதத்திற்கு சிறு தொழுது வைகறை. நெய்தலுக்கு சிறுபொழுது எல்மடு காலமாகும்.

கார்காலம் ஆவணி, புரட்டாதி. கூதிர்காலம் ஐப்பசி, கார்த்திகை. முன்பனிக்காலம் மார்கழி, தை. பின்பனிக் காலம் மாசி, பங்குனி. இளவேனில் சித்திரை, வைகாசி. முதுவேனில் ஆனி, ஆடி எனத் திங்கள் அடிப்படையில் காலங்களை வகுத்துரைப்பார்.

**கார் காலம்**

கார் காலத்தில் பசி குறையும். பித்தம் மிகும். ஆகவே பசியைத் தூண்டும் நீர்மோர், ஆற்று நீர் நல்லது. வெந்நீர் உட்கொள்வது நல்லது. புளிப்பு, உப்பு, இனிப்புச் சுவை உண வுகள் ஏற்றன. செரித்தல் எளிதில் நடக்கும். உணவு களை உண்பது நல்லது. குளிர்ச்சி உடலில் படாமல் வெப்ப ஆடைகளை உடுத்த லாம். கம்பளி, செயற் கையிழை ஆடைகள் ஏற்ற னவாம்.

**கூதிர் காலம்**

கூதிர் காலம் கைப்பு, இனிப்பு, துவர்ப்பு சுவையுள்ள உணவுகளை உட்கொள்வது நல்லது. சர்க்கரை, நெல்லி அரிசி, தேன் உணவில் சேரலாம். தயிர், கொழுப்பு (புலால்) போன்ற வெப்ப ஆற்றல் உள்ள உணவுகளைத் தவிர்க்கவும். பகலுறக்கம் கூடாது. மீதூண் உண்டால் நோய் வரும். உப்பு பொருள்களைக் குறைக்கவும்.

**முன்பனிக்காலம்**

இக் காலத்தில் பசி கூடும். இனிப்பு, புளிப்பு,உப்புச் சுவையுள்ள பொருட்கள் ஏற்றவை. உடலை வளர்க்கும் நெருப்பும் சூடுமுள்ள உணவை உட் கொள்ளவும். எள், நெய் நீராடல் நல்லது., கம்பளம், பட்டு ஆடைகளை அணிவது நல்லது.

**பின்பனிக் காலம்**

பின்பனிக்காலத்தில் மென்மையான உணவினை உண்பது நல்லது. கைப்பு, கார்ப்பு, துவர்ப்புச் சுவை யுள்ள குளிர்ச்சியானஉணவுகளையே மேற்கொள்ள வேண்டும்.

**இளவேனில் காலம்**

இளவேனில் காலம் கோழை மிகும், பசியைக் கெடுக்கும். கார்ப்பு, கைப்பு, துவர்ப்புச்சுவை உணவுகளை உண்ண வேண்டும். இனிப்பு, புளிப்பு, உப்புச் சுவை உணவுகளைக் குறைக்கவும் பகலுறக்கத்தையும் இரவு விழித்தலையும் தவிர்க் கவும்.

**முதுவேனில் காலம்**

வாதப்பிணிகள் மிகும். உப்பு, புளிப்பு, கார்ப்பு உணவுகளை நீக்கவும். அல்லது குறைக்கவும். இனிப்பு நீர் வடிவ உணவுகள் ஏற்றது. கள், மது அருந்தினால் காமாலை, சோகை, பாண்டு உடல் தளர்ச்சி, மயக்கம் வரும் . இயற்கையின் இன் கருணை இயல்பினை என்னென்போம். அவ்வவ் காலத்திற்கு ஏற்ப உணவுப் பொருட்களையாண்டும் விளைவிக்கின்றது. வேனி லில் வெப்பம் தணித்த குளிர் நிழலும் , பொழில் இடமும் மெல்லிய பூங்காற்றும் பனி மலரும் நறுங்கனியும் தீஞ் சுவைத் தண்நீரும் குளிர் இளநீரும் நொங்கும் பத நீரும் அருளுகின்ற அன்னையின் அன்பே அன்பு!

**நோயில் பொருந்தாதவை**

தோல் பற்றிய எந்த நோயாயிருந்தாலும் தக்காளி, முட்டை, கோழி, பன்றி, மீன் ,புலால் ,கத்தரி , பலா ,பாகல், புகையிலைப் பொருட்கள் ஆகா. நோய் வளரும். தீரா நீரிழிவு நோயுள்ளவர் கிழங்கு வகைகளையும் இனிப்பு உணவுகளையும் நீக்கல் வேண்டும். கைப்பு உணவு ஏற்றது. வாத நோயாளிகள் கைப்பு உணவு நீக்கவும். பெரும் பாடு, மேக நோயாளிகள் புலால் உணவு தவிர்க்கவும். துவர்ப்பான வாழைப்பூ , மாதுளை, நெல்லி உண்ணலாம். கல்லீரல் நோய் உடையோர் புளி, காரம், மிளகு, இஞ்சி ,கராம்பு சேர்த்தல் கூடாது. மாரடைப்பு உடையோர் புலால், புகை, தவிர்க்கவும் செந்தாமரை, முருங்கைக்கீரை, தேன் சாப்பிடலாம். சுரம் உடையவர்கள் செரிமானமற்ற சூடான உணவுகளை நீக்கவும்.

கஞ்சி போன்ற நீர் உணவே சேர்க்கலாம். கருவுற்றோர் பப்பாளி, அன்னாசி, எள் உண்ணுதல் கூடாது. நெல்லி, முள்ளங்கி, முருங் கைக் கீரை சேர்த்தால் நீர்ச் சுரவை வராது. பேறு எளிதாகும். உடல் எடை கூட புளிப்பைக் குறை. இனிப்பு, துவர்ப்பு மிகுதியாகச் சேர்க்கவும். இரவில் தேன் கலந்த பால் அருந்தவும் . பப்பாளி, அன்னாசி அதிகம் உணவில் சேர்க்கவும். ஆண்மைக் குறைபாடு நீங்க அரசு, ஆல், முருங்கை வித்து உணவில் சேர்க்குக. பெண்மைக் குறைபாடு நீங்க வேம்பு, இலந்தைக் கொழுந்து, மாதுளை உணவில் மிகுதியும் சேர்க்கவும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை பொலிஸாரை தூய்மைப்படுத்த பிரித்தானிய பொலிஸ் அதிகாரி வருகை

(கொழும்பு)

இலங்கை பொலிஸ் பிரிவை தூய்மைப்படுத்துவ தற்காக பிரித்தானியாவின் முன்னாள் பொலிஸ் அதி காரி ஒருவர் இலங்கைக்கு விஜயம்மேற்கொள்ளவுள்ளார்.

பிரித்தானிய பொலிஸ் அதிகாரியான ஹியு ஓர்வே என்பவர் எதிர்வரும் மாதம் இலங்கைக்கு வருகைத்தர வுள்ளார்.

பொலிஸ் சேவையை மீள் திருத்தம் செய்வ தற்கான பரிந்துரை சமர்ப்பிக்கும் பொறுப்பு இந்த பிரித்தானிய பொலிஸ் அதிகாரி யிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

சித்திரவதை தொட ர்பில் இலங்கை பொலிஸார் மீது குற்றம் சுமத் தப்பட்டுள்ளது.

இதனால் பொலி ஸாரை மக்களுடன் நெருக்கமாக்கு வதற் காக பிரித்தானிய அதி காரி பரிந்துரைகளை சமர்ப்பிக கவுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது. (இ-7)

# பிரதமர் ரணிலை உடன் பதவி நீக்க வேண்டும்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவை உடனடியாக பதவியில் இருந்து நீக்கு மாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் பியசிறி விஜேநாயக்க ஜனா திபதி மைத்திரிபால சிறிசே னவிடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளதாக கொழு ம்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட் டுள்ளது.

உடனடியாக பிரதமரை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவியில் இரு ந்து நீக்கி, பொருத்தமான ஒருவரை பிரதமராக நிய மிக்குமாறும் அவர் கோரி க்கை விடுத்துள்ளார்.

இலங்கை மத்திய வங் கியின் பிணை முறி மோசடி களுடன் பிரதமருக்கு நேரடி தொடர்பு உண்டு என குற்றம் சுமத்தியுள்ள அவர் முன்னாள் நிதி அமைச்சர் பதவி விலகியது போல பிரதமரை பதிவி யில் இருந்து நீக்க வேண் டும் எனவும் தெரிவித்தார்.

மேலும், இலங்கை வரலாற்றில் பிரதமர் ஒருவர் இவ்வாறு மோசடி களுடன் தொடர்புபட்டதி ல்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ள தாக குறித்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 20 செவ் 4 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L/கனடா குடியுரிமை<br>தொ.இ: B/7313 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 38 செவ் 2 இல்<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்: BSc/தனியார் தொழில் கனடா<br>எதிர்பார்ப்பு: பெண் விவாகரத்தானவர்<br>தொ.இ: G/7482 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 46<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில் BSc/பொறியியலாளர்<br>தொ.இ: B/7315 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 26<br>தகைமை/தொழில்: A/L/அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/7483 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: செவ் 2 இல்<br>உயரம்: 168cm<br>தகைமை/தொழில்:A/L/பிரான்ஸ் PR<br>தொ.இ: B/7316 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 28<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BA<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/7485 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 47 செவ் 7 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L/சொந்ததொழில்<br>தொ.இ: B/7318 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 59 செவ் 8 இல்<br>உயரம்: 162cm.<br>தகைமை/தொழில்: GAQ<br>தொ.இ: G/7494 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## தினகரன் சிறைக்கு செல்லும் காலம் வந்துவிட்டது - ஜெயக்குமார்



(சென்னை)

டிடிவி.தினகரன் சிறைக்கு செல்லும் காலம் நெருங்கி விட்டதாக மீன்வளத்துறை அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க.வில் இருந்து ஓரம்கட்டப்பட்ட டி.டி.வி. தினகரனுக்கும், அ.தி.மு.க. நிர்வாகிகளுக்கும் இடையே நாளுக்குநாள்மோதல் வலுத்து வருகிறது.

ஆர்.கே.நகர் இடைத் தேர்தலில் தினகரன் வெற்றி பெற்ற பின்னர் இந்த மோதல் அதிகமாகியுள்ளது.

ஆர்.கே.நகரில் வெற்றி பெற்றதும் தினகரன் மிதப்பில் இருக்கிறார் என்று அமைச்சர்களும் அ.தி.மு.க. நிர்வாகிகளும் விமர்சித்தனர். ஆர்.கே.நகரில்தினகரன் பணத்தை வாரி இறைத்து வெற்றி பெற்றுவிட்டதாகவும்



குற்றம் சாட்டினர். இதற்கு தினகரனும் பதிலடி கொடுத்து வருகிறார்.

இந்த நிலையில் தினகரன் சிறைக்கு செல்லும் காலம் நெருங்கி விட்டதாக அமைச்சர் ஜெயக்குமார் கூறியுள்ளார். இதுதொடர்பாக சென்னையில் நேற்று அவர் அளித்த பேட்டிவருமாறு.

டிடிவி.தினகரன் சிறைக்கு செல்லும் காலம் வந்து விட்டது. புதிய பஸ்களை வாங்குவதற்காகவே தமிழக அரசு பஸ் கட்டணத்தை உயர்த்தி உள்ளது. அ.தி.மு.க. ஆட்சியில் மக்களுக்கு எந்த குறையும் இல்லை. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் ஆளுநர் ஆய்வு செய்து வருவதில் தவறு இல்லை. சட்டத்துக்குட்பட்டே அவர் ஆய்வு செய்து வருகிறாரென அவர்மேலும் தெரிவித்தார். (இ-8)

## கிழக்கு ஜெருசலேமை பா... தலைநகராக்க ஐரோ.யூ...

(புருசெல்ஸ்)

கிழக்கு ஜெருசலேம்நகரை பாலஸ்தீனம் நாட்டின் தலைநகராக்கும் பாலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் முடிவுக்கு ஐரோப்பிய யூனியன் நேற்று முன்தினம் ஆதரவளித்துள்ளது.

ஜெருசலேம் நகரை.இஸ்ரேல் தலைநகரமாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடந்த 6ஆம் திகதி அறிவித்தார். அதை தொடர்ந்து பாலஸ்தீனத்தில் போராட்டமும், மோதலும் வெடித்தது. 4 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர்.

ஜெருசலேம் நகரின் எதிர்காலம் என்ன? என்பது தொடர்பாக இஸ்ரேலிய தலைவர்களும், பாலஸ்தீன தலைவர்களும் நேருக்குநேர் அமர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி அதன் மூலம் தீர்வு காணப்பட வேண்டும் எனவும் ஐ.நா. சபையின் மத்திய கிழக்கு நாடுகளின் அமைதி திட்டத்துக்கான தூதர் நிக்கோலே மிலடெனோவ் தெரிவித்திருந்தார்.

பாலஸ்தீனத்தின் தலைநகராக ஜெருசலேம் நீடிக்காத வரையில் இந்த பிராந்தியத்தில் அமைதி ஏற்படாது என பாலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் தெரிவித்திருந்தார்.


பாலஸ்தீன நாட்டின் தலைநகராக கிழக்கு ஜெருசலேம் மாற்றப்படும். அங்கு எங்கள் நாட்டின் புதிய தூதரகம் திறக்கப்படும் என ஜனா



திபதி மஹ்மூத் அப்பாஸ் கடந்த மாதம் அறிவித்திருந்தார்.

இந்த முடிவுக்கு ஐரோப்பிய யூனியன் நாடுகள் ஆதரவு தெரி விக்க வேண்டும். பாலஸ்தீனத்தை ஐரோப்பிய யூனியன் ஒரு நாடாக

## சுவிட்சர்லாந்து ஜனாதிபதி பிரதமர் மோடி சந்திப்பு



(டாவோஸ்)

சுவிட்சர்லாந்து ஜனாதிபதி அலைன் பெர்செட்டை பிரதமர் மோடி சந்தித்து பேசினார்.

இந்த சந்திப்பில் இருதரப்பு உறவுகள் குறித்து ஆலோசிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக பொருளாதார மாநாடு ஆண்டுதோறும் நடைபெறுவது வழக்கம். அதன்படி 48ஆவது உலக பொருளாதார மாநாடு சுவிட்சர்லாந்தில் உள்ள டாவோஸ் நகரில் 4 நாட்கள் நடக்கிறது. இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் நரேந்திர மோடி நேற்று முன்தினம் சுவிட்சர்லாந்து புறப்பட்டு சென்றார். அவருடன் மத்திய அமைச்சர்கள் சுரேஷ் பிரபு, பியூஸ்கோயல், தர்மேந்திரபிரதான், மராட்டிய முதலமைச்சர் பட்னா விஸ் மற்றும் முகேஷ் அம்பானி, ஆசிம்பிரேம்ஜி, ராகுல் பஜாஜ் உள்ளிட்ட தொழில் அதிபர்களும் இந்த மாநாட்டில் கலந்து கொள்கின்றனர்.

சுவிட்சர்லாந்து சென்ற மோடியை அந்நாட்டு பிரதமர் ஸ்டீபன் லோப்வென் நேரில் சென்று வரவேற்றார். அப் போது இந்திய தூதரக அதிகாரிகளும் உடனிருந்தனர். இந்த மாநாட்டை யொட்டி டாவோஸ் நகரில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

உலக பொருளாதார மாநாட்டுக்கு இடையே, பிரதமர் மோடி சுவிட்சர்லாந்து ஜனாதிபதி அலைன் பெர்செட்டை சந்தித்து பேசினார்.

இந்த சந்திப்பின் போது, இருதரப்பு உறவுகளைமேலும் பலப்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டதாக பிரதமர் மோடி தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்துள்ளார். (இ-8)

## வடகொரியாவின் தொடர் அச்ச... ஜப்பானில் ஏவுகணை தாக்குதல்...

(டோக்கியோ)

வடகொரியாவின் அச்சுறுத்தல் தொடர்ந்து வரும் நிலையில், ஜப்பானில் நேற்று முன்தினம் ஏவுகணை தாக்குதல் பாதுகாப்பு ஒத்திகை நடந்தது.

ஐ.நா. மற்றும் அமெரிககாவின் எச்சரிக்கையை மீறி தொடர்ந்து அணு ஆயுதங்கள் மற்றும் நீண்ட தூர ஏவுகணைகளை சோதித்து வரும் வடகொரியாவின் நடவடிக்கைகள் கொரிய தீபகற்பத்தில் தொடர்ந்து பதற்றத்தை அதிகரித்து வருகிறது. கடந்த சில மாதங்களுக்கு முன் அந்த நாடு நடத்திய நீண்ட தூர ஏவுகணைகளில் சில, ஜப்பான் வான்பகுதியை கடந்து சென்று கடலில் விழுந்தன.

இதனால் வடகொரியா மீது ஜப்பான் தொடர்ந்து ஆத்திரத்தை வெளிப்படுத்தி வருகிறது. இது தொடர்பாக வடகொரியாவுக்கு ஜப்பான், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் கடும்கண்டனங்களையும் தெரிவித்தன.



இந்த நிலையில் வட மற்றும் தென்கொரிய நாட்டு பிரதிநிதிகள் அமைதி பேச்சுவார்த்தையை தொடர முன்வந்துள்ளனர். மேலும் தென்கொரியாவில் அடுத்த மாதம் நடைபெறும் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் வடகொரியா பங்கேற்கும் எனவும் நம்பப்படுகிறது. இது கொரிய தீபகற்பத்தில் நிலவும் போர் பதற்றத்தை தணிக்க உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் வடகொரியாவின் இந்த ஏவுகணை மற்றும் அணு ஆயுத தயாரிப்பு இன்னும் தீவிரமாகும் என ஜப்பான் நம்புகிறது. அவ்வாறு வட கொரியா ஏவுகணை தாக்குதலை நடத்தினால் அதை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகளை அந்த நாடு தொடங்கி உள்ளது. இதற் காக ஏவுகணைகளை நடு வானில்தாக்கி அழிக்கும் ஏவுகணை

## தகுதி நீக்கம் செய்யப்பட்ட 20ஆம் ஆத்மி எம்.எல்.ஏக்கள் மனுவை திரும்பப் பெற்றனர்

(டில்லி)

தேர்தல் ஆணையத்தின் தகுதி நீக்கத்தை எதிர்த்து ஆம் ஆத்மி எம்.எல்.ஏக்கள் டில்லி உயர்நீதிமன்றில் தாக்கல் செய்த மனுவை நேற்று முன்தினம் திரும்பப் பெற்றனர்.

இரட்டை ஆதாயப் பதவி விவகாரத்தில் ஆம் ஆத்மி எம்.எல்.ஏக்கள் 20 பேரை தகுதி நீக்கம் செய்ய தேர்தல் ஆணையம் ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்ததை இரத்து செய்யக்கோரி தேர்தல் ஆணைய முடிவுக்கு எதிராக உடனடியாக கடந்த 19ஆம் திகதி டில்லி உயா் நீதிமன்றில் ஆம்ஆத்மி கட்சி சார்பில் வழக்குத் தாக்கல் செய்தது.

அக்கட்சியின் 7 எம்.எல்.ஏக்கள் சார்பில் தொடர்ந்த வழக்கை தலைமை நீதிபதி (பொறுப்பு) கீதா மிட்டல் அமர்வு விசாரணைக்கு எடுத்துக் கொண்டது. ஆனால் தேர்தல் ஆணையத்தின் முடிவுக்கு இடைக்கால தடை பிறப்பிக்க உயர் நீதிமன்று மறுத்துவிட்டது.

இதற்கிடையில், தேர்தல் ஆணையத்தின் பரிந்துரைக்கு ஒப்புதல் அளித்து ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் நேற்று முன்தினம் கையொப்பமிட்டார். இதனால் அந்த 20 எம். எல். ஏக்களின் பதவி பறிபோனது.


இந்நிலையில்இவ் வழக்கு நீதிபதி ரேகா பாளி முன்பு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. தேர்தல் ஆணையம் மேற்கொண்ட பரிந்துரைக்கு ஜனாதிபதி ஏற்கனவே ஒப்புதல் வழங்கிவிட்டார் என்பதை குறிப்பிட்டு பழைய மனுக்களை திரும்பப்பெறுவதாக ஆம் ஆத்மி கட்சியின் சார்பில் தெரி விக்கப் பட்டது. இதையடுத்து, அந்த மனுக்களை திரும்பப் பெற்றுக் கொள்ள நீதிபதி அனு மதி வழங்கினார். (இ-8)

## இந்தோனேஷியாவுடன் பாதுகா... வலுப்படுத்தும் நகர்வை நோக்கி ...

(வோஷிங்டன்)

கடல் பாதுகாப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை நோக்கி அமெரிக்காவும், இந்தோனேஷியாவும் நகர்ந்து வருவதாக அமெரிக்க பாது காப்பு அமைச்சர் ஜிம் மட்டிஸ் தெரிவித்துள்ளார். இந்தோனே ஷிய பாதுகாப்பு அமைச்சருடனான சந்திப்பை தொடர்ந்து நேற்று (செவ்வாய்க்கிழமை) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பயங்கரவாதத்திற்கு எதிரான செயற்பாடுகளின் மூலம் அப்பாவி பொது மக்களை பாதுகாப்பதில் இந்தோனேசியா மிகவும் அர்ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...பாலஸ்தீனத்தின் ...யூனியன் ஆதரவு



அங்கீகரிக்க வேண்டும். இதன் மூலம் இஸ்ரேல் நாட்டுடனான அமைதி நடவடிக்கைகளில் எந்த பாதிப்பும் ஏற்பட்டு விடாது என்றும் அவர் தெரிவித்திருந்தார். இந்நிலையில், பெல்ஜியம் நாட்டின் தலைநகரான புருசெல்ஸ் நகருக்கு சென்றிருக்கும் பாலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் ஐரோப்பிய யூனியன் நாடுகளின் வெளியுறவு மற்றும் பாதுகாப்பு கொள்கை தொடர்பான விவகாரங்களுக்கான உயர் பிரதிநிதி ஃபெடெரிக்கா மோகேரினியை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார்.

இந்த சந்திப்பின்போது, கிழக்கு ஜெருசலேம் நகரை பாலஸ்தீனம் நாட்டின் தலைநகராக்கும் பாலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் முடிவுக்கு ஐரோப்பிய யூனியன் நாடுகளின் வெளியுறவு கொள்கை தலைமை நேற்று முன்தினம் ஆதரவு தெரிவித்துள்ளதாக பாலஸ்தீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ-8)

## ...சுறுத்தல் எதிரொலி ...பாதுகாப்பு ஒத்திகை



...களுடன் போர்க்கப்பல்கள் ஜப்பான் கடலில் நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளன. மேலும் நிலத்திலும் அது போன்ற ஏவுகணைகளை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இது ஒருபுறம் இருக்க வடகொரியா ஏவுகணை தாக்குதல் நடத்தினால் அதிலிருந்து மக்களை பாதுகாப்பது எப்படி? என்பது குறித்த ஒத்திகையை முதன்முதலாக அந்த நாடு நேற்று முன்தினம் நடத்தியது. பாதுகாப்பு இடங்களை நோக்கி மக்களை வெளியேற்றுதல், பதுங்கு குழிகளில் தங்க வைத்தல் போன்ற ஒத்திகைகளை தன்னார்வ தொண்டர்கள் நடத்திக் காட்டினர்.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் உள்ள விளையாட்டு மைதானம், பூங்கா உள்ளிட்ட பகுதிகளில் 300-க்கும் மேற்பட்ட தன்னார்வ தொண்டர்கள் இந்த பாதுகாப்பு ஒத்திகையை நடத்தினர். இதைப்போல நாடு முழுவதும் சிறிய நகரங்கள், கிராமங்களிலும் இது போன்ற ஒத்திகைகள் நடந்தன.

இந்த ஒத்திகைக்குப்பின் அரசு அதிகாரி ஒருவர் செய்தியாளர்களிடம் பேசுகையில் 'வடகொரியா செலுத்தும் ஏவுகணை 10 நிமிடங்களுக்குள் இங்கு வந்துவிடும். அங்கு ஏவுகணை ஏவப்பட்ட 3-வது நிமிடத்தில் இங்கு எச்சரிக்கை விடப்படும். ஆனால் சுமார் 5 நிமிடங்களுக்குள் நாங்கள் பாதுகாப்பான இடங்களுக்குள் சென்றாக வேண்டும் என்றார்.

இதைப்போல ஒத்திகையில் பங்கேற்ற தன்னார்வ தொண்டர் ஒருவர் கூறுகையில், வடகொரியாவை பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால் ஏவுகணை வீசப்பட்டால் அது பயங்கரமாக இருக்கும். அந்த நேரத்தில் நான் பணியில் இருந்தால் மக்களை வெளியேற்றுவது எளிதாக இருக்கலாம்.

ஆனால் அப்போது நான் வெளியில் இருந்தால், வெளியேற்றுவது கடினமாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-8)

## ...ப்பு உறவை ...அமெரிக்கா

...ணிப்புடன் செயற்பட்டுள்ளது. அந்த ...கையில் இந்தோனேசியாவிடம் ...ருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டி ...து நிறைய உள்ளன.

இந்நிலையில், பயங்கர வாதத்தை ...றியடிப்பதற்கு, பயங்கர வாத எதிர்ப்பு ...சயற்பாடுகளில் நாம் இணைந்து ...சயற்பட வேண்டும்" அவர் மேலும் ...தரிவித்தார். (இ-8)

## சிரியா மீது துருக்கி தாக்குதல் அமெரிக்கா கடும் கண்டனம்

(வோஷிங்டன்)

சிரியாவின் குர்து பகுதி மீது துருக்கி இராணுவம் தாக்குதல் தொடுத்துள்ளது. இதற்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

சிரியாவின் வடக்குப் பகுதி குர்து இன மக்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. மக்கள் பாதுகாப்புக் குழுக்கள் (ஒய்.பி.ஜி) என்ற பெயரில் செயல்படும் குர்து இராணுவத்துக்கு அமெரிக்கா ஆதரவு அளித்து வருகிறது.

துருக்கி நாட்டின் கிழக்கு, தென் கிழக்கு பகுதிகளில் குர்து இன மக்கள் பெரும்பான்மையாக வசிக்கின்றனர். அங்கு செயல்படும் தீவிரவாத குழுக்களுக்கு சிரியாவின் ஒய்.பி.ஜி. இராணுவம் ஆதரவு அளிப்பதாக துருக்கி அரசு குற்றம் சாட்டி வருகிறது.

இந்தப் பின்னணியில் சிரியாவின் வடக்குப் பகுதி மீது துருக்கி இராணுவம் கடந்த 21ஆம் திகதி தாக்குதல் தொடுத்தது. குர்து பகுதிக்குள் முன்னேறி தரை, வான் வழியாக தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. இதில் 30-க்கும் மேற்பட்டோர் உயி ரிழந்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

துருக்கியின் இராணுவ நடவடிக்கைக்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக நடைபெறும் போரில் ஒய்.பி.ஜி.யும் இணைந்து பணியாற்றி வருகிறது. அந்த படையை குறிவைத்து துருக்கி



இராணுவம் தாக்குதல் நடத்துவது தீவிரவாதத்துக்கு எதிரான போரை பலவீனப்படுத்தும் என்று அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சர் ஜிம் மேத்யூஸ் தெரிவித் துள்ளார்.

துருக்கியில் ஜனாதிபதி ஏர்துவான் தலைமையிலான ஆட்சிக்கு எதிராக 2016 ஜூலையில் இராணுவப் புரட்சி ஏற்பட்டது. எனினும் ஜனாதிபதியின் ஆதரவாளர்கள் புரட்சியை முறியடித்தனர்.

இந்த இராணுவப் புரட்சிக்கு அமெரிக்கா மறைமுகமாக ஆதரவு அளித்ததாக துருக்கி குற்றம் சாட்டியது. அப்போது முதலே அமெரிக்கா- துருக்கி இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டது. தற்போது அமெரிக்காவின் எச்சரிக்கையை மீறி சிரியா மீது துருக்கி இராணுவம் தாக்குதல் நடத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-8)

## ரஷ்யா – இந்தியா ஏவுகணை ஒப்பந்தம்

### பாகிஸ்தானுக்கு 'செக்'

(மொஸ்கோ)

ரஷ்யாவிடம் இருந்து ரூ.39,000 கோடிக்கு இந்தியா ஏவுகணை தடுப்பு கருவிகளை வாங்கவுள்ளது.

கடந்த 2016ம் ஆண்டு ரஷ்யாவிடமிருந்து சீனா 6 எஸ் 400 ரக ஏவுகணை தடுப்பு அமைப்புகளை வாங்கியது.

தற்போது இந்தியா 4 எஸ் 400 அமைப்புகளை வாங்க உள்ளது. இதற்கான ஒப்பந்தம் விரைவில் கையெழுத்தாகவுள்ளது.

எதிரி நாட்டு ஏவுகணைகளை நடுவானிலே கண்டறிந்து வழி மறித்து தாக்கும் வல்லமை கொண்ட எஸ் 400 ரக ஏவுகணைகளை.



பாகிஸ்தானின் அணு ஆயுதங்களை முறியடிக்கும் விதமாக ஏவுகணை தடுப்பு அமைப்புகளை நிலை நிறுத்த இந்தியா முடிவு செய்துள்ளது. (இ-8)

## தற்காலிக நிதி மசோதாவில் கையெழுத்திட்டார் ட்ரம்ப்

### அரசுத் துறைகள் முடக்கம் முடிவுக்கு வந்தது

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் அரசுப் பணிகளுக்கான தற்காலிக நிதி வழங்கும் மசோதாவில் ட்ரம்ப் கையெழுத்திட்டதையடுத்து அரசு துறைகள் முடக்கம் முடிவுக்கு வந்துள்ளது.

அமெரிக்காவில் புதிய வரவு செலவுத் திட்டத்தை செனட் சபை ஏற்றுக் கொள்ளாததால் அரசு பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன. பெப்ரவரி 16ஆம் திகதி வரை அரசு பணிகளை கவனிக்க நிதியளிக்கும் இந்த மசோதாவை நிறைவேறுவதற்கு தேவையான 60 வாக்குகளை செனட் சபையில் பெற இயலவில்லை.

எல்லை பாதுகாப்பு மற்றும் கனவுகளுடன் புதிதாக அமெரிக்காவில் குடியேறியவர்களுக்கான பாதுகாப்பு



தொடர்பான தங்களது விருப்பத்துக்கு அரசு மதிப்பளிக்காத தால் இந்த மசோதாவை எதிர்க்கட்சிகள் தோற்கடித்தன. இதனால் கடந்த வெள்ளிக்கிழமை முதல் அரசுப் பணிகள் முடங்கின.

எனவே, அரசுப் பணிகளை தொய்வின்றி நடத்துவதற்காக தற்காலிக நிதி அளிக்கும் மசோதா நேற்று முன்தினம் கொண்டு வரப்பட்டது. இதற்கு செனட் சபையும் பாராளுமன்றமும் ஒப்புதல் அளித்துள்ளது. இந்த மசோதாவுக்கு ஆதரவாக செனட் சபையில் 81 பேர் வாக்களித்தனர். எதிர்த்து 18 பேர் வாக்களித்தனர். அதே சமயம் இந்த மசோதாவானது நாடாளு மன்றத்தில் ஆதரவாக 266 வாக்குகளும், எதிராக 150 வாக்குகளும் பெற்றது.

இரு அவைகளிலும் மசோதா நிறைவேற்றப்பட்டதையடுத்து ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஜனாதிபதி அந்த மசோதாவில் கையெழுத்திட்டார்.


இதையடுத்து அரசுப் பணிகள் முடக்கம் முடிவுக்கு வந்துள்ளது. என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போதைய நிதி இரண்டரை வாரங்களுக்கு, அதாவது பெப்ரவரி 8ஆம் திகதி வரை மட்டுமே உள்ளது. எனவே, அது வரை அரசுப் பணிகள் எந்த தடங்கலும் இன்றி நடை பெறும்.

அதற்குள் எதிர்க்கட்சிகளை சமாதானம் செய்து நீண்ட காலவரவு செலவு திட்டத்திற்கு ஒப்புதல் பெறும் முயற்சியில் ஆளுங்கட்சியான குடியரசு கட்சி ஈடுபடும் என எதிர் பார்க்கப்படுகிறது. (இ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளாந்த செலவு ரூ.3 பில்லியன் அரசை விமர்சித்து நாமல் டுவிட்



(கொழும்பு)

தற்போதைய அரசாங்கம் கடந்த 3 வருடத்திற்குள் 3000 பில்லியன் ரூபாய் கடனைப் பெற்றுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ விமர்சித்துள்ளார்.

அதற்கமைய, நாளொன்றிற்கு 3 பில்லியன் ரூபாவை அரசாங்கம் கடனாகப் பெற்றுள்ளதாக தனது டுவிட்டர் வலைத்தளத்தில் நாமல் பதிவிட்டுள்ளார்.

மகிந்தவின் 9 வருட ஆட்சிக்காலத்தில் மொத்தமாகப் பெறப்பட்ட கடன் தொகை 5200 பில்லியன் ரூபாய்கள் என்றும்,குறித்த நிதி யுத்தம் மற்றும் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டதென்றும், தற்போதைய அரசாங்கம் பெற்றுக் கொண்ட நிதியில் எவ்வித அபிவிருத்திகளும் மேற்கொள்ளப்படவில்லையெனவும் நாமல் பதிவிட்டுள்ளார். (இ-7)

# இந்த அரசு நிலைக்காது

## முத்து சிவலிங்கம் சுட்டிக்காட்டு



(நுவரெலியா)

இந்த அரசாங்கம் தோணி மேல் செல்லக் கூடிய அரசாங்கமாகத்தான் காணப்படுகின்றது. இந்தத் தோணி மேல் செல்லும் அரசாங்கம் நீண்ட காலத்திற்குச் செல்லாது என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான முத்து சிவலிங்கம் தெரிவித்தார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பாக நுவரெலியா மாவட்டத்தில் உள்ள தோட்டக் கமிட்டி தலைவர், தலைவிமார்களுக்கிடையில் நேற்று முன்தினம் ஹற்றன் டி.கே. டபிள்யூ கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற தெளிவூட்டும் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த மூன்று வருட காலமாக நாம் மானத்துடனும் மரியாதையுடனும் வாழ்ந்து வருகின்றோமா? என சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாம் ஒதுக்கப்பட்ட சமூகமாக தள்ளப்பட்டுள்ளோம். கடந்த ஓர், இரு மாதங்களில் களுத்துறை பகுதிகளில் சுமார் 5 ஆயிரம் ஏக்கர் கொண்ட இறப்பர் தோட்டங்களை அபகரித்துள்ளனர்.

ஏன் அபகரித்துள்ளீர்கள் என்று கேட்டால். எங்களது அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்காக என்று கூறுகிறார்கள்.

இவ்வாறான நிலைமையே தற்பொழுது காணப்படுகின்றது. இது தொடருமானால் எதிர்காலத்தை பற்றி நாம் யோசித்துப் பார்க்க வேண்டும்.

நானும் தம்பி ஆறுமுகனும் அன்றே சொன்னோம். தோட்டங்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். தோட்டங்களை அதிகாரிகள் அபகரித்துக்கொள்வார்கள். அரசியல்வாதியும் காட்டிக் கொடுத்து விட்டு ஓடிவிடுவான் நாம் கஷ்டப்படுவோம் என்று. அன்று சொன்னீர்கள் இதெல்லாம் நடக்காது என்று. அன்று நாங்கள் சொன்னது இன்று நடேந்தேறியுள்ளது.

சிறுசிறு ஆசைகளையும் அபிவிருத்திகளையும் செய்து கொடுத்தால் மலையகம் அபிவிருத்தி அடையாது. எமது சமூகத்தில் நாம் அபிவிருத்தியைக் காண வேண்டுமென்றால் காணிக்கு சொந்தக்காரனாக வேண்டும்.

அது 7 பேர்ச் கிடையாது. கடந்த தேர்தலில் நுவரெலியா மாவட்ட மக்கள் தான் மாற்றம் வேண்டும் என தீர்மானித்தார்கள். மாற்றம் வந்தது. ஆனால் மூன்று வருடமாக நாம் துன்பப்பட்டுத் தான் வந்தோம். தேங்காயின் விலை அதிகரித்துள்ளது. அத்தியாவசியப் பொருட்களின் விலையும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இந்த மாற்றத்தை தான் நீங்கள் தேடிச் சென்றீர்கள். மீண்டும் கஷ்டத்தை நோக்கி செல்லாமல் சிந்திக்க வேண்டும். கடந்த காலங்களில் ஏற்படுத்திய மாற்றத்தை மறுபக்கம் திருப்பிப் போட்டால் தான் எதிர்காலத்தில் நாம் மானத்துடனும், மரியாதையுடனும் வாழ முடியும்.

எமக்கு உரிமைகளை காங்கிரஸ் தான் வாங்கிக் கொடுத்தது. வேறு எவனும் வாங்கிக்கொடுக்கவில்லை. மக்கள் போட்ட பிச்சை தான் இந்த வாக்குகள். இந்த வாக்குகளை வாங்கிக்கொண்டு சிலர் பாராளுமன்றம் சென்றுள்ளார்கள். இதை வைத்துக் கொண்டு தான் இன்று அமைச்சர்களாக இருக்கின்றார்கள்.

காங்கிரஸ் வாங்கிக் கொடுத்த வாக்குரிமைகளை பெற்றுக் கொண்டு காங்கிரஸையே இன்று விமர்சிக்கின்றனர். பாராளுமன்றம் சென்று அபிவிருத்திகளை முன்னெடுக்க வேண்டுமே தவிர, இவ்வாறு காங்கிரஸை விமர்சிப்பது அபிவிருத்தி அல்ல. எந்த அரசாங்கம் வந்தாலும் நாம் தோட்டங்களை விட்டுக்கொடுக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதி தொடர்பு கொண்ட முஹம்மட் ஷரீப் யார்?

## மகிந்த ராஜபக்ஷ கேள்வி





(கொழும்பு)

பாகிஸ்தானில் முஹம்மட் ஷரீப் என பிரதமர் ஒருவர் இல்லையெனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அந்நாட்டிலுள்ள முதலாளி ஒருவருடனேயே தொலைபேசியில் பேசியுள்ளதாகவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள உர தட்டுப்பாட்டை நீக்குவதற்கு பாகிஸ்தான் பிரதமரும் தனது நண்பருமான முஹம்மட் ஷரீபுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டதாகவும் அவர் உடனே உரத்தை அனுப்ப ஏற்றுக் கொண்டதாகவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார்.

நாட்டில் தற்பொழுது குறைந்த விலையில் எப்படிப் போனாலும் [illegible] கொடுத்தும் வாங்குவதற்கு உரம் இல்லாதுள்ளதாகவும் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மகிந்த சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தொடர்பு கொண்டவர் பாகிஸ்தான் பிரதமராக இருந்திருந்தால், நாட்டில் ஓரளவேனும் உரப்பற்றாக்குறை குறைந்திருக்கும் எனவும் நேற்று முன்தினம் குருநாகலில் இடம்பெற்ற பொதுக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் மகிந்த இதனைச் சுட்டிக்காட்டினார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## நேர் எதிராகச் செயற்படுகிறவர்கள்

பெரும்பாலான பிள்ளைகள் சொன்ன சொல்லுக்குக் கட்டுப்படுவதே இல்லை. தொடாதே என்றால் தொடும். ஓடாதே என்றால் ஓடும். எதைச் சொன்னாலும் எதிராகவே செய்வது பிள்ளைகளின் இயல்பு.

இந்தப் பிள்ளைக் குணம் சிலரை எந்த வயதிலும் விட்டுப் போவது இல்லை.

ஒருவர் தன் குடும்ப நண்பர் ஒருவரின் மகனுக்குக் கடனாகப் பணம் கொடுத்தார். இது குடும்ப நண்பருக்குத் (அப்பாவுக்குத்) தெரியாது. பயல் பணத்தை விளையாடிவிட்டான். இவர் அப்பாக்காரருக்கு எழுதினார். உங்கள் மகனுக்குக் கடன் கொடுத்தேன். வரவில்லை அதை நீங்கள் அனுப்புங்கள் என்று. அப்பாக்காரருக்குப் பொத்துக் கொண்டு வந்தது கோபம். காரசாரமாகக் கடிதம் எழுதினார். யாருக்கு? மகனுக்கா? இல்லை நண்பருக்கு!

எப்படிய்யா குடுக்கலாம் என்னைக் கேட்காமல்? என்று கடிதத்தில் தைதை என்று குதித்திருந்தார்.

சுலபமாக முடித்திருக்க் வேண்டிய வேலையைக் கெடுத்துக் கொண்டார் பணம் கொடுத்தவர்.

இவர் என்ன செய்திருக்க வேண்டும்? உங்களைக் கேட்காமல் நான் பணம் கொடுத்தது என் தவறுதான். உங்களை நான் கேட்பது நியாயமல்ல. உங்கள் மகனுக்கு உதவும் நல்லெண்ணத்துடன் தான் பணம் கொடுத்தேன். ஆனால் எதிர்பாராத விதமாக இப்படி ஆகிவிட்டது என்கிற தொனியில் கடிதம் எழுதியிருந்தால் அப்பாக்காரருக்கு மகன் மீது கோபம் பிறந்து நண்பர் மீது இரக்கம் வந்திருக்கும். பணமும் வசூலாகியிருக்கும்.

இப்போது மகனுக்கு அப்பா பரிந்து பேச மகன் எப்படிய்யா நீ என் அப்பாவுக்கு எழுதப் போச்சு? முன்பின் குடுத்திருவேன்ல? என்று குதிக்க அப்பாவும் மகனும் சேர்ந்து கொண்டு விட்டார்கள். பணத்திற்குப் பணமும் போயிற்று. நட்புக்கு நட்பும் போயிற்று!

வீதியில் ஒரு சைக்கிள் விபத்து. அடிபட்டவர், பரவாயில்லை சேர்! நீங்க போங்க! நான் ஆஸ்பத்திரிக்குப் போய்க் கொள்கின்றேன்! என்று சொன்னால் மோதியவருக்கு இரக்கம் வரும். இல்லையில்லை வாங்க ஆஸ்பத்திக்குப் போவோம் என்பார். யோவ்! மரியாதையாக வைத்தியசாலைக்கு வந்து எனக்கு வைத்தியம் பண்ணு! என்று அடிபட்டவர் ஆரம்பித்தால் அதுவே கௌரவப் பிரச்சினையாகி காரியத்தைக் கெடுத்துவிடும்.

இவர் என்ன சொல்வது. நாம் என்ன கேட்பது என்கிற வக்கிரம் எல்லோரிடமும் உண்டு. அதிகாரத் தோரணையில் சொன்னால் அதைப் பின்பற்றக் கூடாது என்கிற உணர்வு மனித சுபாவத்தின் விதை. எது நமக்கு வருத்தத்தை உண்டாக்குமோ அது எதிரிக்கு சந்தோசத்தை உண்டாக்கும் என்பதும் உலக விதி. இந்த மூன்று சமாச்சாரங்களும் நமக்கு எதிராக வேலை செய்யக் கூடியவை என்பதை உணர்ந்து வைத்திருப்பது நல்லது.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் விவாகச் சட்டத் திருத்தம் தொடர்பான அறிக்கை தலதாவிடம்

(கொழும்பு)

முஸ்லிம் விவாகச் சட்டத்தில் திருத்தங்களைச் செய்ய பரிந்துரைகளை முன்வைக்க நியமிக்கப்பட்ட குழு தனது அறிக்கையை நீதியமைச்சர் தலதா அத்துகோரளவிடம் கையளித்துள்ளது.

அந்தக் குழுவின் தலைவரான உயர்நீதிமன்ற நீதியரசர் சலீம் மர்சுக் சம்பந்தப்பட்ட அறிக்கையை அமைச்சரிடம் கையளித்ததாக, நீதி அமைச்சு தெரிவித்துள்ளது.



இந்த விடயம் தொடர்பாக, பரிந்துரைகளை முன்வைக்கும் பொருட்டு கடந்த 2009ஆம்ஆண்டுமுன்னாள் நிதியமைச்சரால் 17 பேர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

இந்த நிலையில், குழு தமது பரந்துரைகளை விரைவாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறு, நீதியமைச்சர் தலதா அத்து கோரள ஆலோசனை வழங்கியிருந்தார்.

இதன்படி, நேற்று முன்தினம் குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (இ-7)



கேலிச்சித்திரம்

# பராசூட் அமைச்சர்கள் அரசை கவிழ்க்க சதி!

# பாதாள குழுக்களுடன் தொடர்புடையவர்களால்

# நல்லாட்சியின் பயணத்தை தடுக்க முடியாது

## அமைச்சர் மனோ கணேசன் உறுதி



(கொழும்பு)

"நாம் கொண்டு வந்த அரசாங்கத்தில் திருடர்கள் பாதாள குழுக்களுடன் தொடர்புடையவர்கள் மற்றும் போதைப் பொருட்களுடன் தொடர்புடையவர்கள் இருக்கின்றனர், அவர்களால் நல்லாட்சியின் பயணத்தை தடுக்க முடியாது. அவர்களை வெளியேற்றி விட்டு நாங்கள் பயணத்தைத் தொடருவோம்" என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மாத்தளை கொங்கா வெல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்ட போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

"நாம் ஐக்கிய தேசியக் கட்சி, கூட்டமைப்பு உள்ளிட்ட அனைத்து கட்சிகளுக்கும் நல்லிணக்கம் தொடர்பாக கற்பிக்கத் தயார். எம்முடன் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என அனைத்து இன வேட்பாளர்களும் ஒற்றுமையுடன் கடமையாற்றுகின்றனர். எம்முடைய கட்சி முச்சக்கர வண்டி கட்சியல்ல பாரவூர்திகட்சி. நான் பராசூட் உறுப்பினரோ, அமைச்சரோ அல்ல. சில பராசூட் அமைச்சர்கள் இந்த அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கான சதி வேலைகளை முன்னெடுக்கின்றனர். நாம் அதற்கு இடமளிக்கமாட்டோம். சிலர் என்னை வீட்டிற்குள் அடைத்து என்னை பயமுறுத்தி தேர்தல் வேலைகளை முன்னெடுக்க நினைக்கின்றனர்.

அதற்கெல்லாம் பயப்படுவன் நானல்ல" என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். (இ-7)

# சுமையாக மாறிய தாய்

# பிள்ளைகளின் கொடூர செயல்!

# இலங்கையில் நடந்த சோகம்



(கொழும்பு)

இலங்கையில்பெற்றதாயை பாரமாக நினைத்து பொலிஸ் நிலையத்தில் விட்டுச் சென்ற பிள்ளைகள் தொடர்பான தகவல் வெளியாகியுள்ளது.

வெலிமடை, நுகத்தலாவ பிரதேசத்தில் வயோதிபத் தாயை பொலிஸ் நிலையத்தில் விட்டுச் செல்ல பிள்ளைகள் முயற்சித்துள்ளனர்.

83 வயதான குறித்த தாயை பார்த்துக் கொள்ள முடியாதென அவரதுமகள்,மகன் மற்றும் மருமகள் பொலிஸ் நிலையத்தில் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தாய் உடல் நிலை சரியில்லாத நிலையில் தனது மகளுடன் வாழ்ந்து வந்துள்ளார். இந்நிலையில் அவரை பார்த்துக்கொள்ள முடியவில்லை எனக் கூறி அவரது மகள், கம்பளை பிரதேசத்திலுள்ள அவரது மருமகளின் வீட்டில் விட்டுச் சென்றுள்ளார். பின்னர் மருமகளாலும் பார்த்துக் கொள்ள முடியவில்லை எனக் கூறி தாயை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வந்துள்ளார்.

பின்னர் பிள்ளைகளை அழைத்து தாயை பொறுப்பேற்குமாறு பொலிஸ் அதிகாரிகள் கூறிய போதிலும் தம்மால் பார்த்துக் கொள்ள முடியாதென பிள்ளைகள் நிராகரித்துள்ளனர்.

இந்த நிலையில் பொலிஸார் அவரை முதியோர் இல்லத்தில் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (இ-7)

# இலங்கை-ஈரானுக்கிடையில் நாடு கடத்தல் ஒப்பந்தம்

## ஈரானிய நாடாளுமன்றில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கும் ஈரானுக்கும்இடையிலான நாடுகடத்தல் தொடர்பான ஒப்பந்தத்தினை ஈரானிய ஜனாதிபதி ஹஸன் ரொஹானி ஈரானிய நாடாளுமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளதாக அந்த நாட்டின் எம்.என்.ஏ செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

"ஈரானிய இஸ்லாமியக் குடியரசுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையே குற்றவாளிகளை நாடுகடத்துவது தொடர்பான சட்டமூலம் ஈரானிய நீதித்துறை அமைச்சின் யோசனைக்கு அமைவாக சட்ட நடைமுறைகளுக்காக இத்தால் சமர்ப்பிக்கப்படுகின்றது" என்ற சபாநாயருக்கான குறிப்புடன் ஈரானிய ஜனாதிபதி இந்த ஒப்பந்தத்தை பாராளுமன்றத்திற்கு சமர்பித்துள்ளார்.

ஈரானுக்கான இலங்கைத் தூதுவர் டெஹ்ரான் அனிஸ் செய்டி மற்றும் ஈரானிய நீதித்துறை அமைச்சர் அலிரேஸா அவாயி ஆகியோருக்கிடையே டெஹ்ரானில் கைச்சாத்திடப்பட்ட இந்த உடன்படிக்கைக்கு கடந்த 3ஆம் திகதி ஈரானிய அமைச்சரவை அங்கீகாரமளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பொருட்கள் மீதான வரி அதிகரிப்பு வெளியான செய்தி உண்மை இல்லை

## நிதி அமைச்சு மறுப்பு


(கொழும்பு)

கடந்த 18 ஆம் திகதி அமைச்சர் மங்கள சமரவீரவினால் வெளியிடப்பட்டுள்ள விசேட வர்த்தக பொருட்கள் சட்டத்தின் கீழான வர்த்தமானி அறிவிப்பின் மூலம் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் வரி அதிகரிக்கப்பட்டுள்ளதாக சில ஊடகங்களில் வெளியான செய்தியில் எந்தவித உண்மையும் இல்லை என்று நிதி அமைச்சு தெரிவித்துள்ளது. மாசிக் கருவாடு, செத்தல் மிளகாய் உள்ளிட்ட பல சரக்கு வகைகளுக்கும் விதிக்கப்பட்டிருந்த விசேட வர்த்தகப் பொருட்களுக்கான வரியை நடைமுறைப்படுத்தும் கால எல்லை மேலும் நீடிக்கப்பட்டுள்ளமை மாத்திரமே வர்த்தமானி அறிவிப்பின் மூலம் குறிப்பிடப்பட்டது.

இதற்கமைவாக வர்த்தமானி அறிவிப்பின் மூலம் பொருட்கள் வரி அதிகரிக்கப்படமாட்டாது. அத்துடன் எதிர்வரும்6 மாத காலப்பகுதிக்கு நிலவும் விலைகளுக்கு அமைய இந்தப் பொருட்களை நுகர்வோர் கொள்வனவு செய்ய முடியும் என்று நிதி அமைச்சு தெரிவித்துள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத்தடைச் சட்டத்தை இலங்கை அரசு நீக்க வேண்டும்



## எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தினால் சர்வதேச சமூகத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளில் ஒன்றான பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்க வேண்டும் எனவும் இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் எனவும் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதுவரிடம் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் அரசியல் பிரிவுத் தலைவருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனுக்குமிடையில் கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. இச் சந்திப்பின் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டமானது நீக்கப்பட வேண்டிய ஒன்று என்பதை வலியுறுத்தியுடன் இது இலங்கை அரசாங்கமானது சர்வதேச சமூகத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளில் ஒன்று என்பதையும் எடுத்துரைத்தார். இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் உள்ளவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டுமெனவும் இது தொடர்பில் மேலும் இழுத்தடிப்புக்கள் இடம் பெறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் வலியுறுத்தினார்.

படையினர் பாவனையிலுள்ள பொதுமக்களின் காணிகள் இன்னமும் மீளளிக்கப்படாமை தொடர்பில் தமது அதிருப்தியை ஐரோப்பிய தூதுவருக்கு வெளிப்படுத்திய இரா. சம்பந்தன் மக்கள் தமது சொந்தக் காணிகளையே விடுவிக்குமாறு போராட்டங்களில் ஈடுபடுகின்றார்கள்.

இதனைக் காலந்தாழ்த்துவது மக்கள் மனதில் விரக்தியையும் ஏமாற்றத்தையும் அளிப்பதாகவும் தெரிவித்தார். இம் மக்கள் காலாகாலமாக தாம் வாழ்ந்து வந்த இருப்பிடங்களை விடுவித்துத் தருமாறு நீண்டகாலமாகப் போராடி வருகின்றார்கள். இந்த நியாயமான கோரிக்கையைப் புறந்தள்ள முடியாது எனவும் தெரிவித்தார்.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகமானது தனது செயற்பாடுகளை விரைவாக ஆரம்பித்து நியாயமான விசாரணைகளை மேற்கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உண்மை நிலையினை வெளிக்காட்ட வேண்டுமெனவும் தெரிவித்தார்.

நீண்ட நாட்களாகப் போராட்டங்களில் ஈடுபட்டு வரும் இந்த உறவுகளுக்கு தங்கள் அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறியும் உரித்து உண்டு எனவும், அந்த உரிமையினை காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் நிலைநாட்ட வேண்டுமெனவும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகமானது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் திருப்தியடையும் வகையில் விசாரணைகளை மேற்கொண்டு அவர்கள் மனதில் ஆறுதலைக் கொண்டு வரும் வகையில் செயற்பட வேண்டுமெனவும் தெரிவித்தார்.(இ-7)

# அருட்பணி.ஜெறோ செல்வநாயகம்

## அதிபர் பணிக்கோர் இலக்கணம்

கல்வியுலகில் தனக்கெனத் தனித்துவ அடையாளங்களைக் கொண்டது யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி. 168 வருடக் கல்விப் பாரம்பரியம் மிக்க இக்கல்லூரி கத்தோலிக்க மிஷனறிக் குருக்களால் ஆரம்பிக்கப்பட்டு இன்று வரை யாழ்.மறைமாவட்ட ஆயரால் நிர்வகிக்கப்படும் தனியார் பாடசாலையாகவே மிளிர்கின்றது. ஆரம்ப காலங்களில் இக்கல்லூரியில் இலங்கையின் பல பாகத்து மாணவர்கள் மட்டுமன்றி ஐரோப்பிய, ஆசிய, ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த மாணவர்களும் கல்வி பயின்றனர் என்பது வரலாறு. இங்கு பயின்றோர் பலர் உலகம்முழுவதும்பல்வேறுதுறைகளில் முதன்மை வகிபாகங்களை வகித்து வருவது குறிப்பிடத்தக்கது. தன் கல்விப் பயணத்தில் இக் கல்லூரி கல்வியிலும் இணைபாடத் துறைகளிலும் ஈட்டிய சாதனைகள் அபரிமிதமானவை.

இத்தகைய பெருமைமிகு யாழ். புனித பத்திரிசியாரார் கல்லூரியின் 26 ஆவது அதிபராக கடந்த 10 வருடங்கள் அரும்பணியாற்றியஅருட்பணி. மனுவற்பிள்ளை ஜெறோ செல்வநாயகம் அவர்கள் இன்று (24.01.2018) பணி ஓய்வுபெறுகின்றார்.

கரம்பொன் மண்ணிலே மனுவற்பிள்ளை-ஜேட்றூட் தம்பதியரின் மகவாக 25.01.1958 இல் மலர்ந்த அருட்பணி ஜெறோ அவர்கள் கரம்பொன் புனித செபஸ்தியார் ஆரம்பப் பாடசாலை, காவலூர் புனித அன்ரனிஸ் கல்லூரி, யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி ஆகியவற்றில் பயின்று யாழ்.பல்கலைக்கழகத்தில் இளங்கலை மாணிப் பட்டத்தைப் பெற்றார். கத்தோலிக்ககுருவாகவேண்டும்என்ற தனது இலட்சியம் வேகம் பெற கண்டி தேசிய குருத்துவக்கல்லூரி, கொழும்புத்துறை தூய சவேரியார் குருத்துவக் கல்லூரி ஆகியவற்றில் குருத்துவப் பயிற்சி பெற்றதுடன் உரோமை ஊர்பானா பல்கலைக்கழகத்தில் மெய்யியல் இறையியல் பட்டங்களைப் பெற்று 06.08.1985 இல் குருவாகத் திரு நிலைப்படுத்தப்பட்டார்.



ஆரம்பத்தில் குருவாக யாழ்.பேராலயம், வட்டக்கச்சி, கரவெட்டி ஆகிய பங்குகளில் ஆன்மீகப் பணியாற்றி பின் 1989 இல் யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியில் ஆசிரியராக இணைந்தார். தன் அர்ப்பணிப்பு மிகு பணியால் கல்லூரியின் பகுதித்தலை வர், உப அதிபர் பதவிகளை வகித்து நிர்வாகத்துறைசார் ஆற்றல், ஆளுமை, அனுபவத்தை மேம்படுத்தினார். தேசிய கல்வி நிறுவகத்தில் கல்வி டிப்ளோமா பட்டயச் சான்றிதழைப் பெற்றதுடன் 1997 இல் லண்டன் பல்கலைக்கழகத்தில் கல்வி முது மாணிப் பட்டத்தையும் பெற்று தன் புலமையை விருத்தி செய்தார்.

2008ஆம் ஆண்டில் யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியின் அந்நாள் அதிபரும் சிறந்த கல்வி நிர்வாகியும் இந்நாள் யாழ். மறைமாவட்ட ஆயருமாகிய அதி வணக்கத்திற்குரிய அருட்கலாநிதி. யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் அதிபர் பணியிலிருந்து ஓய்வுபெற்ற போது அருட்பணி. ஜெறோ செல்வநாயகம் அவர்கள் அதிபர் பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

ஆரோக்கியமான கல்விப் பார்வையும் திட்டமிடல் நிபுணத்துவமும் நிர்வாக நுட்பங்களும் தொடர்பாடல் திறனுமிக்க அருட்பணி ஜெறோ அவர்கள் கடந்த 10 அகவைகளாக கல்லூரியின் கல்விப்பயணத்தை சிறப்பாக முன்னெ[illegible]த்து பல துறைகளிலும் முன்னிலைப்படுத்தினார். இவரது காலத்தில்கல்வியிலும் இணைப் பாடத்துறைகளிலும் குறிப்பாக விளையாட்டுத் துறையிலும் கல்லூரி உச்சங்களைத் தொட்டது. தேசிய சாதனைகள்- விருதுகளை தம்வசமாக்கியது.

அண்மைக்காலமாக ஒவ்வொரு வருடமும் கல்லூரியின்தரம்-5புலமைப்பரிசில்மற்றும் க.பொ.த.(சா/த), க.பொ.த (உ/த) பரீட்சைப் பெறுபேறுகள் சிறப்பாக அமைந்துள்ளதுடன் வளர்ச்சிப் போக்கினையும் சுட்டி நிற்கின்றன.

இவ்வருட க.பொ.த. உ/தப் பரீட்சைப் பெறுபேற்றில் கணிதப் பிரிவு மாணவன் போல் ஜான்சன் தேசிய ரீதியில் 3 ஆம் இடத்தைப் பெற்றார். இப் பிரிவில் ஆங்கில மொழி மூல மாணவரில் அவரே முதலிடம் என்பது குறிப்பிடத்தக்கது.

பல்வேறு திறன்மிக்க இம் மாணவன் பாடசாலையின் பல்வேறு பதவியில் பொறுப் [illegible] க்க அனுமதியளித்து தேசியத்தில் இலக்கு வைக்க உதவியும் ஆலோசனையும் வழங்கியவர் அதிபர் அருட்பணி ஜெறோ அவர்களே.

தன்னிடமுள்ள ஒவ்வொரு மாணவன் மட்டிலும் தனிக் கவனம் செலுத்தி அவர்கள் தம் திறமைகளில் உச்ச நிலையடைய வழிகாட்டுவது அடிகளாரின் தனித்துவமாகும்.

எனக்கு அறிமுகமான மாணவன் ஒருவனை ஒரு தடவை உயர்தரம் பயில கல்லூரியில் இணைத்திருந்தேன். அவன் சில காலமாக கல்லூரிக்கு ஒழுங்காக வருகை தருவதில்லை என்று அருட்பணி ஜெறோ எனக்கு அறிவித்தார். காரணத்தை ஆராய்ந்த போது அவனிடம் சொந்தமாக துவிச்சக்கர வண்டியில்லையென்றும் ஒவ்வொரு நாளும் யாரிடமாவது இரவல் வாங்கியே பாடசாலை செல்வதையும் அறிந்தேன். இதை அருட்பணி ஜெறோ அவர்களுக்கு [illegible] போது தன் [illegible]டம் பணம் வாங்கி அம்மாணவனுக்கு புதிய துவிச்சக்கர வண்டியொன்றை வாங்கிக் கொடுத்து அவனின் கற்றலுக்கான இடரை நீக்கினார்.

இவ்விதமான மாணவரின் தனிப்பட்ட தேவைகளையும் அறிந்து தன் இயலுமைக்கேற்ற வகையில் அதனை நிவர்த்தி செய்யும் பெரும் பணியையும் அவர் ஆற்றினார். குறிப்பாக தூர இடங்களில் இருந்து காலை விளையாட்டுப் பயிற்சிக்காக வரும் மாணவர்களுக்கு கல்லூரி விடுதியில் காலை உணவும் உடை மாற்றும் வசதியும் செய்து கொடுத்தார்.

பல்வேறு போட்டிகளில் தேசத்தை பிரதிநிதித்துவம் செய்து சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்ற மாணவருக்கு பல்வேறு உதவிகளை வழங்கி பக்கபலமாகத் திகழ்ந்தார்.

இக்கல்லூரியின் கால்பந்து மற்றும் கிரிக்கெட் அணிகள் தம் திறமை வெளிப்பாட்டின் காரணமாகவும் ஈட்டிய வெற்றிகளாலும் அகில இலங்கை பாடசாலைகள் பிரிவு-1 மட்டத்தில் போட்டிகளில் பங்கேற்கின்றன. அணி வீரர்கள் சில சமயங்களில் பாடசாலை நாட்கள் சிலவற்றையும் போட்டிக்காக இழக்கின்றனர். இருப்பினும் அவர்களின் கற்றலை அது பாதிக்காத வண்ணம் ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் இழந்த பாட விடயங்களை கற்பதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டார். இளமைக்காலத்தில் மிகச் சிறந்த உதைபந்தாட்ட பின்கள வீரராக பிரகாசித்த அருட் பணி ஜெறோ அவர்கள் போட்டிகளின் போது களத்தில் நின்று வீரர்களுக்கு கொடுக்கும் உற்சாகம் அபரிமிதமானது.

மிகச் சிறந்த பாடகரும் இசைக் கலைஞருமாகிய அருட்பணி ஜெறோ அவர்கள் நீண்ட காலமாக கல்லூரியின் இசைக்குழுவையும் வழிநடத்தியவர். ஆங்கிலம், இலத்தீன், சிங்கள மொழிகளில் பரீட்சயம் மிக்கவர். இவரது தொடர்பாடல் திறன் நல்ல நட்பு வட்டங்களை உருவாக்கியதுடன் பல்வேறு நாடுகளில் உள்ள பழைய மாணவர் அமைப்புக்களையும் கல்லூரியின் அபிவிருத்தியுடன் நெருக்கமாக இணைத்துள்ளது. கல்லூரி தனது 160 ஆவது அகவையை கொண்டாடிய போது பரந்துபட்ட உலகில் வாழும் பத்திரிசியர்களை ஒன்றிணைத்து பத்திரிசிய நடைபவனியை சிறப்பாக ஒழுங்கமைத்து யாழ்.கல்லூரிகளில் விழிப்புணர்வு நடைபவனி பாரம்பரியத்தை தோற்றுவித்தவர்.

இவரது காலத்தில் கல்விப் பெறுபேறுகள், இணைபாடவிதான செயற்பாடுகளின் அடைவுகளில் மட்டுமன்றி பௌதீக வளங்களும் பெரும் விருத்தி ஏற்பட்டது. பழைய மாணவர்கள் மற்றும் பாடசாலை சமூகத்தின் உதவியுடன் ஆரம்பப்பிரிவு வகுப்பறைத் தொகுதி, மைதானத்தின் நவீன வசதிகொண்ட பார்வையாளர் அரங்கு, புற்தரை கிரிக்கெட் ஆடுகளம், களித்தரை ரென்னிஸ் ஆடுகளம், நுழைவாயில் முகப்பு, நிர்மாணத்திலுள்ள தொழில் நுட்ப ஆய்வு கூடம், மாணவருக்கான பேருந்துகள் ஆகிய வளங்களை கல்லூரி பெற்றுக் கொள்ள மூல காரணமானார்.

ஒரு அதிபர் என்ற வகையில் கல்வி அதிகாரிகளுடனும் சக அதிபர்களுடனும் நல்லபுரிந்துணர்வுடன் இணைந்து செயற்பட்டார்.

புனித பத்திரிசியார் கல்லூரி சமூகத்திற்கும் கல்வியுலகிற்கும் 29 வருடங்களாக அளப்பரிய பணி நல்கிய எனது நண்பரும் பத்திரிசியத்தின் உயர் இலக்கணமுமாகிய அருட்பணி ஜெறோ செல்வநாயகம் அடிகளாருக்கு மணிவிழா வாழ்த்துக்களை நயப்பதுடன் அவரது பணிவோய்வு காலம் ஆன்மீக சமூகப்பணிகளின் புதிய பிரவாகத்திற்கு பயனுற வாழ்த்துகின்றேன்.

**எப்.எக்ஸ்.அன்ரன்**
கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிர்காமத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்திற்கு பயிற்சி இன்மையே காரணமாம்

## சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல விளக்கம்

Sagala Ratnayaka
@SagalaRatnayaka

Kataragama incident is not an isolated one. This stems from lack of training & professionalism.Failure to address core issues diligently,will throw us into similar situations time and time again. So,drastic reforms will spoon be introduced to Police with help of foreign experts

11:55 AM - Jan 23, 2018



(கொழும்பு)

பொலிஸாருக்கு உரிய பயிற்சிகள் வழங்கப்படாமையே' கதிர்காமத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்திற்கு காரணம் என சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளதாவது,

பொலிஸாருக்கு முறையான பயிற்சிகள் வழங்கப்படாத நிலை காணப்படுகிறது. இதனால் கதிர்காமத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவம் போன்று தொடர்ந்தும் இடம்பெறும் வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

இதனால் பொலிஸ் அதிகாரிகளுக்கு சரியான பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். இதற்காக எதிர்காலத்தில் வெளிநாட்டு நிபுணர்களின் உதவியுடன் பொலிஸ் திணைக்களத்தை மறுசீரமைக்கவுள்ளதாகவும் அவர் அந்த பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

கதிர்காமத்தில் பொலிஸாரின் கட்டளையை மீறிச் சென்ற நபர் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் அவர் உயிரிழந்தார்.

இதனையடுத்து, துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட பொலிஸ் உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டு, இந்த மாதம் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அமெரிக்க மத்திய நிலையம் மீளத் திறப்பு

(கொழும்பு)

தற்காலிகமாக மூடப்பட்டிருந்த கொழும்பிலுள்ள அமெரிக்க மத்திய நிலையம் மீண்டும் திறக்கப்பட்டுள்ளதாக கொழும்பிலுள்ள அமெரிக்க மத்திய நிலையம் அதிகாரபூர்வ அறிவித்தலை விடுத்துள்ளது.

அமெரிக்க செனட்டில் அந்நாட்டின் புதிய வரவு-செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவதில் ஏற்பட்டுள்ள தோல்வியால் அரசின் பல்வேறு சேவைகள் முடங்கியுள்ளன.

இது தொடர்பில் அரிதான வகையில் செனட் சபை கூட்டம் நடைபெற்றிருந்த போதும், பாதீட்டு விடயத்தில் ஜனநாயக மற்றும் குடியரசு கட்சிகளுக்கு இடையில் இணக்கப்பாடு ஏற்பட்டிருக்கவில்லை.

இதனைத் தொடர்ந்து, அமெரிக்காவின் பெரும்பாலான அரச பணியகங்கள் மூடப்பட்டுள்ளன.

இந்த நிலையில், கொழும்பிலுள்ள அமெரிக்க மத்திய நிலையம் மறு அறிவித்தல் வரும் வரையில் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் கடந்த 21ஆம் திகதி அறிவித்திருந்தது.

எனினும், நேற்று கொழும்பிலுள்ள அமெரிக்க மத்திய நிலையம் மீண்டும் திறக்கப்பட்டுள்ளதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# அம்மாவுக்கு வாழ்த்து தெரிவித்த மகன்

Namal Rajapaksa
@RajapaksaNamal

Happy Birthday to my Amma. We would be nothing without your support, strength and love.

7:05 AM - Jan 23, 2018



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மனைவியான சிராந்தி ராஜபக்ஷ நேற்று தனது பிறந்த தினத்தை கொண்டாடினார்.

இதையடுத்து சிராந்திக்கு அவரது மகனான நாமல் ராஜபக்ஷ (எம்.பி) வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

உத்தியோகப்பூர்வ டுவிட்டர் தளத்தில் தனது வாழ்த்துக்களை நாமல் தெரிவித்துள்ளார்.

"இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள் அம்மா. உங்களுடைய அன்பும், வழிகாட்டலும் இல்லை என்றால் நாமும் இல்லை" என தனது வாழ்த்துக்களை பதிவேற்றியுள்ளார். (இ-7)

# தலைமறைவாகியிருந்த ஆசிரியர் பொலிஸில் ஆஜர்

(ஏறாவூர்)

மட்டக்களப்பு - ஏறாவூரில் உள்ள பிரபல தேசிய பாடசாலையில் கடந்த 13ஆம் திகதி இடம்பெற்றதாகக் கூறப்படும் மாணவன் துஷ்பிரயோக சம்பவம் தொடர்பாக தலைமறைவாகியிருந்த சிரேஷ்ட ஆசிரியர் நேற்று ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் ஆஜராகியுள்ளார்.

ஏறாவூரிலுள்ள பிரபல தேசிய பாடசாலையொன்றில் ஒன்பதாம் வகுப்பில் கல்வி பயிலும் 13 வயது மாணவன் கடந்த சனிக்கிழமை குறித்த ஆசிரியரால் பாலியல் ரீதியான துஷ்பிரயோகத்திற்கு ஆளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

குறித்த சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட சிறுவனின் பெற்றோரால் பொலிஸில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்ட நிலையில் சம்பந்தப்பட்ட ஆசிரியர் தலைமறைவாகியிருந்தார்.

இந்நிலையில் அந்த ஆசிரியர் நேற்று பொலிஸில் ஆஜரானார்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேக நபரை நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1310

Search for people, places and things    Nagendram Home

### அருண்


எல்லா விடயத்திற்கும் விடாமுயற்சி தேவை



ஆனா சிகரெட்டுக்கும் சரக்கிற்கும் மட்டும்தான் விடும் முயற்சி தேவை... எப்படி நம்ம சிந்தனை

### அபி

மென்மையான உன் கை போல சாப்பாத்தி செய்யச் சொன்னேன்



குடுத்து வைத்தவர் மாப்பிள்ளை நீங்கள் என்று என் மாமனார் சொன்னது ஞாபகம் வந்தது. கண் கலங்கிட்டன்.

### கங்கா

ஸ்மார்ம் போன்ல ஒரு நன்மை என்னன்னா... பசங்க/ பொண்ணுங்க எங்க சுத்தினாலும் நேரத்துக்கு வீட்டுக்கு வந்திடுறாங்க



சார்ஜ் போடணுமல்ல

### சீத்தா

கால ஆட்டினா வீட்டுக்கு ஆகாதாம். எதிரிய பழிவாங்க பேசாம அவன் வீட்டுக்குப் போய் கால ஆட்டிட்டு ஓடிவந்திட வேண்டியது தான்...!!!



### மல்லிகா

தன் மனைவியை ராணி போல் வைத்து வாழ்க்கை நடத்துபவன்



ஒரு மகாராணியால் வளர்க்கப்பட்டவன் என்பதை நிரூபிக்கிறான்

### விமலன்

இதுதான் நான் கல்லூரியில் படிக்கும் போது எடுத்த புகைப்படம்



சுவரில் ஜாலியா உட்கார்ந்து இருக்கேன்... பாருங்க அது நான்தான்...

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரக் கட்சி அமைச்சர்களுக்கு எதிராகவும் ஊழல் குற்றச்சாட்டு

## ஆவணங்களுடன் தயாராகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைச்சர்கள் 10 பேர் மற்றும் ஒரு முதலமைச்சருக்கு எதிரான ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுகள் தொடர்பான ஆவணங்களை ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடமும் கையளிக்கவுள்ளனர்.




கூட்டு அரசாங்கத்தில் இடம்பெற்றுள்ள சு.கவுக்கும் ஐ.தே.கவுக்கும் இடையிலான பனிப்போர் தீவிரமடைந்துள்ளது.

ஐ.தே.கவை, சு.க.வினர் தாக்கி வருகின்றனர். ஐ.தே.கவினர் ஜனாதிபதி மீதும் தனிப்பட்ட விமர்சனங்களை முன்வைத்தனர்.

இதனால் அரசாங்கத்துக்குள் குழப்பம் ஏற்பட்ட நிலையில், ஜனாதிபதிக்கு எதிரான விமர்சனங்களை நிறுத்துமாறு ஐ.தே.கவினருக்கு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டிருந்தார்.

எனினும், சுதந்திரக் கட்சியினர் ஐ.தே.கவினரை திருடர்கள் என்று விமர்சித்து வரும் நிலையில், ஐ.தே.கவின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள், சுதந்திரக் கட்சி முக்கிய தலைவர்களின் ஊழல் மோசடிகள் தொடர்பான ஆவணங்களுடன் ஜனாதிபதியைச் சந்திக்கவுள்ளனர்.

இந்தச் சந்திப்பில் 10 அமைச்சர்கள் மற்றும் ஒரு முதலமைச்சர் தொடர்பான ஆவணங்கள் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும் என்று ஐ.தே.கவின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்துள்ளார்.

முன்னைய ஆட்சிக்காலத்தில் அமைச்சர்களாக இருந்தபோது, சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் செய்த மோசடிகள், ஊழல்கள் தொடர்பான ஆவணங்கள் தம்மிடம் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். தற்போதும் இந்த அமைச்சர்களின் ஊழல்கள் தொடர்வதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

அத்துடன் இந்த ஆவணங்களை தாம், இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவிடமும் கையளிக்கவுள்ளதாக சமிந்த விஜேசிறி தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய நேர்காணல் ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-7)

## முதலீட்டு வாய்ப்புக்களை அடையாளம் காண ஜப்பானின் 70பிரதிநிதிகள் இலங்கை வருகை

### 40 ஆண்டுகளுக்குப் பின்னர் இன்று

(கொழும்பு)

ஜப்பானின் முன்னணி வணிக நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளின் பிரதிநிதிகள் 70 பேரைக் கொண்ட உயர்மட்டக் குழுவொன்று இன்று இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளது.

உயர் அதிகாரம் கொண்ட வணிக நிறுவனங்களின் பிரதிநிதிகளின் குழுவொன்று கடந்த 40 ஆண்டுகளில் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்வது இதுவே முதல் முறையாகும்.

இலங்கையில் முதலீட்டு மற்றும் வணிக வாய்ப்புகளை அடையாளம் காண்பதற்காகவே ஜப்பானின் உயர் மட்ட குழு கொழும்பு வருகிறது.

இந்தக்குழுவில், ஜப்பானின் முன்னணி நிறுவனங்களான, ரொயோட்டா, ஹொண்டா, மிற்சுபிசி, சுமிரோமோ, மிட்சுயி ஜப்பான் எயர்லைன்ஸ், ஈஸ்ரேர்ன் வங்கி, ரோக்கியோ மிட்சுபிசி வங்கி, நிப்பொன் ஏயார் வேய்ஸ், நிப்பொன் ஸ்டீல்ஸ் உள்ளிட்டவற்றின் பிரதிநிதிகள் இடம்பெறவுள்ளனர்.

இந்தக் குழுவினர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர்களுடனும் பேச்சுக்களை நடத்தவுள்ளனர்.

2016 ஆம் ஆண்டு ஜப்பான்- இலங்கை இடையிலான இருதரப்பு வணிகம், 1,150 மில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மண்ணெண்ணெய் விநியோகம் மட்டுப்படுத்தப்படவில்லை

(கொழும்பு)

இலங்கையில்மண்ணெண்ணெய் வீண்விரயமாவதைத் தடுப்பதற்காக விடுக்கப்பட்ட சுற்றறிக்கை குறித்த பொய்யான கருத்துக்களை நம்ப வேண்டாமென்று பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பொதுமக்களைக் கேட்டுள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வாகனங்களுக்கும்,தொழிற்சாலைகளுக்கும் பௌசர்களுக்கும் இலங்கை மண்ணெண்ணெய்யை மொத்தமாக விநியோகிப்பதற்கு தடை செய்யப்பட்டுள்ளது. சிலர் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் கூடுதலாக மண்ணெண்ணெயைக் கொள்வனவு செய்து முறையற்ற விதத்தில் இலாபம் சம்பாதிப்பதை தடுப்பது இந்த சுற்றறிக்கையின் நோக்கமாகும்.

எவ்வாறேனும், இதன் மூலம் மீனவ சமூகத்திற்கோ, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கோ மண்ணெண்ணெய் விநியோகம் மட்டுப்படுத்தப்படவில்லை என்று பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

மண்ணெண்ணெய் நிவாரணத்தை தவறாகப் பயனபடுத்தி முறையற்ற விதத்தில் இலாபம் சம்பாதிப்பதை அனுமதிக்க முடியாதென்று கூட்டுத்தாபனம் வலியுறுத்தியுள்ளது. (இ-7)

## ஏ.இ.மனோகரன் மறைவு



(சென்னை)

சுராங்கனி புகழ், பொப்பிசைச் சக்கரவர்த்தி ஏ.இ மனோகரன் சென்னையிலுள்ள திருவான்மையூர், கந்தன் சாவடியில் நேற்று முன்தினம் இரவு 7.20 மணியளவில் இயற்கையெய்தினார்.

இலங்கையில் பொப்பிசைத்துறையில் பிரபல்யமான பாடகராகத் திகழ்ந்த இவர், இலங்கையின் தமிழ் பொப்பிசையை உலக அளவில் எடுத்துச் சென்ற பெருமைக்குரியவராகத் திகழ்ந்தார்.

இவர் சுராங்கனி சுராங்கனி மாலு கெனாவா என்ற பாடலை ஹிந்தி, தெலுங்கு, மலையாளம், சிங்களம், மலே, போர்ச்சுக்கீஸ் உள்ளிட்ட 7 மொழிகளில் பாடியுள்ளார்.

பொப்பிசைத்துறை மட்டுமல்லாது சினிமாத்துறையிலும் கால்பதித்திருந்தார். இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை சென்னையில் நடைபெறும். (இ-7)

## தெற்காசியாவில் அரிய வகை இறால்! இலங்கைக் கடலில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

இலங்கையில் மிகவும் அரிய வகை இறால் இனம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



தங்காலை கடற்படை முகாமிற்கு அருகிலுள்ள கடற்கரையில் இறால் கிடைத்துள்ளதாக, தேசிய நீரியியல் வள ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த 18 ஆம் திகதி மீனவர்களால் இறால் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில், குறித்த இறாலை நாரா நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளதாக நிறுவனத்தின் ஆய்வாளர் உப்புல் லியனகே தெரிவித்துள்ளார்.

இந்த இறால் தெற்காசிய கடலில் அரிய வகையில் கிடைக்கும் எனவும் இவை அழிந்து வரும் உயிரினமாக உள்ளதெனவும் உப்புல் தெரிவித்துள்ளார்.

கடல் அலையில் சிக்கிய நிலையில் இந்த இறால் கடற்பரப்பிற்கு வந்திருக்கலாம் என அவர் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூ.31 கோடி பெறுமதியான பொருட்கள் அழிப்பு





(கொழும்பு)

சட்டவிரோதமாக இலங்கைக்குள் கொண்டு வரப்பட்ட சுமார் ரூபா 31 கோடி பெறுமதியான பொருட்கள் இலங்கை சுங்க திணைக்களத்தால் நேற்று முன்தினம் அழிக்கப்பட்டன. ஜனவரி 26 ஆம் திகதி கொண்டாடப்படும் சர்வதேச சுங்கதின கொண்டாட்டத்தை முன்னிட்டு இலங்கை சுங்கம், நுகர்வோர் பாதுகாப்புப் பிரிவு, கொள்கைகள் திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி பிரிவுடன் இணைந்து ஏற்பாடு செய்த இந்நிகழ்வு, சுங்கத் திணைக்களத்தில் பணிப்பாளர் நாயகம் சாள்ஸ் முன்னிலையில் இடம் பெற்றது.

போலியாக தயாரிக்கப்பட்டு இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட நிலையில், இலங்கை சுங்கத் திணைக்களத்தால் கைப்பற்றப்பட்ட பொருட்கள் இவ்வாறு அழிக்கப்பட்டதாக சுங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது. இப்போலியான பொருட்கள் குறித்து மக்களுக்கு தெளிவூட்டுவதும் இந்நடவடிக்கையில் மற்றுமொரு நோக்கமாகும் என திணைக்களம் தெரிவித்துள்ளது.

சர்வதேச சந்தையில், போலியான பொருட்கள் பாரியளவில் நாட்டுக்கு நாடு பரிமாற்றமடைகின்றன. சுற்றாடல் பாதுகாப்புக்கு கேடு விளைவிக்கக்கூடிய குறித்த பொருட்களால், சுற்றாடலுக்கு மாத்திரமன்றி சுகாதாரம் மற்றும் பாதுகாப்பிற்கு மாத்திரமன்றி நாட்டின் பொருளாதாரத்திற்கும் பாரிய பாதிப்பை ஏற்படுத்துவதாக இலங்கை சுங்கத் திணைக்களத்தில் நிறுவப்பட்டுள்ள சமூக பாதுகாப்பு பிரிவு அறிவித்துள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டு, இலங்கை சுங்கத் திணைக்களத்தில் நிறுவப்பட்டுள்ள சமூக பாதுகாப்பு பிரிவில் புலமைச் சொத்து பிரிவு உருவாக்கப்பட்டது. இப்பிரிவினால், போலியான, சட்டவிரோதமான பொருட்கள் கைப்பற்றப்பட்டு அரசுடைமையாக்கப்படும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எவ்வித தர நிர்ணயமும் கருதாமல், தரம் குறைந்த மூலப் பொருட்கள் மூலம் தயாரிக்கப்படும் இவ்வாறான போலியான பொருட்கள், சிறுவர்களுக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தக் கூடியன, என ஆராய்ச்சிகளின் மூலம் உறுதிப் படுத்தப்பட்டுள்ளன.

2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்து சட்டத்தின் கீழ், அனைத்து விதமான போலியான பொருட்களும், சுங்க கட்டளைச் சட்டத்தின் கீழ் ஏற்றுமதி செய்வதற்கோ, இறக்குமதி செய்வதற்கோ தடை செய்யப்பட்ட பொருளாக கருதப்படுகின்றது. இவ்வருடத்தின் சர்வதேச சுங்க தின எண்ணக்கருவான "பாதுகாப்பான வர்த்தக சூழலில் பொருளாதார அபிவிருத்தி" என்பதன் அடிப்படையில் பொருட்களின் போலி உருவாக்கத்திற்கு எதிராக செயற்படுவதும் உள்ளடக்கப்படுகின்றது.

ரூபா 31 கோடி (ரூ. 30, 229,345) பெறுமதியான போலியாக தயாரிக்கப்பட்ட சிறுவர்களின் விளையாட்டுப் பொருட்கள், மருந்துகள், வாகன உதிரிப்பாகங்கள், கையடக்கத் தொலைபேசியின் பகுதிகள், காகிதாதிகள், மற்றும் உடைகள் உள்ளிட்ட 121,187 பொருட்கள் இவ்வாறு இவ்வாறு அழிக்கப்பட்டன. குறித்த பொருட்கள், புலமைச் சொத்து சட்டம் மற்றும் சுங்கத் கட்டளைச் சட்டம் ஆகியவற்றை மீறும் வகையில் சட்டவிரோதமாக இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

அழிக்கப்பட்ட பொருட்களின் மீதங்கள், சுற்றாடலுக்கு தீங்குவிளைவிக்காத வகையில் அகற்றப்படவுள்ளதோடு, ஒரு சில பொருட்கள் மீள்சுழற்சிக்கும் உட்படுத்தப்படவுள்ளன. (இ-7)

# அனுமதியின்றி ஒரு தொகை சங்கு வைத்திருந்தவர் கைது



(கொழும்பு)

தங்காலை நகருக்கு அருகில் நேற்றுக்காலை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களின் போது, உரிய அனுமதியின்றி ஒருதொகை சங்குகளை தன்னகத்தே வைத்திருந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் அம்பாந்தோட்டை வனஜீவராசிகள் காரியாலய அதிகாரிகளால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், சந்தேகநபர் உரிய அனுமதியின்றி பல்வேறு வகையான சங்குகளை தனது வீட்டில் வைத்திருந்ததாக தெரிய வந்துள்ளது. இதே வேளை, கைது செய்யப்பட்ட நபர் வன ஜீவராசிகள் காரியாலய அதிகாரிகளால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (இ-7)

# மகிந்த அணி மனு தள்ளுபடி

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக சில பகுதிகளில், தமது கட்சி சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தாக்கல் செய்த மனுவை உயர்நீதிமன்றம் நேற்று தள்ளுபடி செய்துள்ளது.

இதன்படி, பாணதுறை, அகலவத்தை, மஹியங்கனை மற்றும் திறப்பனை ஆகிய பகுதிகளுக்கான வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமை தொடர்பிலேயே, குறித்த மனுதாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பள்ளிவாசலின் மதில் உடைப்பு கண்டித்து மக்கள் போராட்டம்




(ஏறாவூர்)

வாழைச்சேனை - பிறைந்துரைச்சேனை கிராமத்தில் பதுறியா பள்ளிவாசல் மதில் உடைக்கப்பட்டதை கண்டித்து அந்தப் பகுதி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த போராட்டம் நேற்று வாழைச்சேனை நீதிமன்றத்திற்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பிறைந்துரைச்சேனை கிராமத்தில் பதுறியா பள்ளிவாசல் அமைந்துள்ள காணியுடன் இணைந்த காணி தனக்குரியது என தனிநபர் உரிமை கோரியுள்ளார்.

கடந்த 2014ஆம் ஆண்டு அவருக்கு எதிராக வாழைச்சேனை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வரும் நிலையில், அதற்கான தீர்ப்பு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி வழங்கப்படவுள்ளது.

இந்த நிலையில், வழக்காளி நேற்று முன்தினம் தொழிலாளிகளைக் கொண்டு பள்ளிவாசலின் மதிலை உடைத்துள்ளார்.

பள்ளிவாசல் மதில் உடைக்கப்படுவதை அவதானித்த பிரதேச மக்கள் அதை தடுத்ததுடன், வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதுடன் நேற்று நீதிமன்றத்திற்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தினையும் நடத்தினர்.

அத்துடன், பள்ளிவாசலின் மதிலை உடைத்தவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் நீதித்துறையை நாங்கள் மதிக்கின்றோம் எனவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, போராட்ட இடத்திற்குச் சென்ற வாழைச்சேனை பொலிஸ் நிலை பொறுப்பதிகாரி தனஜய பெரமுன, சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டு, சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என ஆர்ப்பாட்டக்காரர்களிடம் கூறியதையடுத்து போராட்டக்காரர்கள் கலைந்து சென்றனர். (இ-7)

# ஊவா மாகாண முதலமைச்சருக்கு எதிராக இ. தொ. கா. போர்க்கொடி

(ஹற்றன்)

ஊவா மாகாணத்திலுள்ள தமிழ் மகளிர் பாடசாலை ஒன்றின் பெண் அதிபரை ஊவா மாகாண முதலமைச்சர் மண்டியிட வைத்த சம்பவத்திற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரசும், மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சும் வன்மையாக கண்டிப்பதாக மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சர் மருதபாண்டி ரமேஷ்வரன் தெரிவித்தார். ஹற்றனில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாங்கள் இந்த நாட்டில் சிறுபான்மை மக்களாக வாழலாம். ஆனால் நாம் யாரிடமும் மண்டியிடத் தேவையில்லை. யாரிடமும் எதையும் கெஞ்சிக் கேட்பதற்கும் தயாராக இல்லை. எமது உரிமைகளை நாம் தட்டிக் கேட்டே பெற்றிருக்கின்றோம்.

குறித்த பெண் அதிபர் ஊவா மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமானிடம் முறையிட்டிருந்தால் அன்றே இதற்கு தகுந்த நடவடிக்கையை எடுத்திருப்போம். இருந்தாலும், பரவாயில்லை இவ்வாறான செயல்களை வன்மையாக கண்டிக்கின்றோம். ஊவா மாகாண முதலமைச்சருக்கு எதிராக நாங்களும் இன்று போர்க்கொடி தூக்கியுள்ளோம்.

ஏனென்றால் இவ்வாறான ஒரு அதிபரை இழிவுப்படுத்தி வழி நடத்துகின்ற பொழுது அதிபர்களுக்கு சுதந்திரமாகச் செயலாற்ற முடியாது.

மத்திய மாகாணத்தைப் பொறுத்தவரையில் தமிழ் பாடசாலைகளில் இருக்கின்ற எந்தவொரு தமிழ் அதிபர்களையும் முதலமைச்சருக்கு கீழ் அடிப்பணிய வைப்பதில்லை. தமிழ் கல்வி தொடர்பில் மத்திய மாகாண முதலமைச்சர் முழு அதிகாரத்தையும் எங்களிடம் தந்துள்ளார்.

நாங்கள் எந்தவொரு அதிபர்களையும், கல்வி அதிகாரிகளையும், ஆசிரியர்களையும் அரசியல் ரீதியாக பழி வாங்குவதில்லை. பாடசாலைகளை நல்ல முறையில் வழிநடத்துவதற்கு அவர்களுக்கு நாங்கள் முழு சுதந்திரத்தையும் கொடுத்துள்ளோம்.

எங்களது நோக்கம் கல்வியில் வளர்ச்சி அடைய வேண்டும் என்பது தான் என அவர் மேலும் தெரிவத்தார். (இ-7)

# மகிந்தவை பகிரங்க விவாதத்திற்கு அழைக்கிறார் கம்மன்பில



(கொழும்பு)

எனது அரசியல் வாழ்க்கையில் நான் பொய் கூறியிருந்தால் அதை நிரூபித்து காட்டுங்கள் என அமைச்சர் மகிந்த அமரவீரவுக்கு சவால் விடுவதாக பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே அவர் இனைத் தெரிவித்தார்.

எனது அரசியல் வாழ்க்கையில் நான் கூறிய ஒரு பொய்யை சரி நிரூபித்து காட்டுங்கள்.

நான் பொய்க்காரனா? அல்லது நீங்கள் பொய்க்காரனா? என்பதை நாட்டு மக்களுக்கு தெரியப்படுத்துவதற்கு என்னுடன் பகிரங்க விவாதத்திற்கு வாருங்கள் எனவும் அவர் சவால் விடுத்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைந்தால் தமிழருக்கு சாதகம் முஸ்லிம்களுக்கு பாதகம்

## இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் தெரிவிப்பு



(ஏறாவூர்)

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைய வேண்டும் என தமிழர் தரப்பு கோருகின்றனர் அது அவர்களுக்கு சாதகம் எனினும், முஸ்லிம்களுக்கு பெரிய பாதிப்பாகும் என இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளார்.

நாங்கள் செலவு செய்து அரசியலுக்கு கொண்டு வந்து அரசியல் அடையாளத்தைப் பெற்றுக்கொடுத்ததன் பின்னர் எமக்குத் துரோகம் செய்து விட்டுச் சென்றவர்களுக்கு பாடம் புகட்டுவதற்கு இந்தத் தேர்தல் சிறந்த சந்தர்ப்பம் எனவும் அவர் தெரிவித்தார்.

காத்தான்குடி பதுறியா பள்ளி சதுக்கத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பிரச்சாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

வடக்கும், கிழக்கும் இணைக்கப்பட வேண்டும் என்று தமிழர் தரப்பு கோருகின்றனர், அது அவர்களுக்கு சாதகமாக அமையும் எனினும், முஸ்லிம்களுக்கு அது பெரிய பாதிப்பாகவே அமையும்.

இந்த விடயம் பற்றி தெளிவாக பேச வேண்டிய ஹக்கீம் மௌனமாகவே இருக்கின்றார், இது எதிர் காலத்தில் முஸ்லிம்களுக்கு பாதிப்பான சூழலை ஏற்படுத்தும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஊவா மாகாண முதலமைச்சருக்கு எதிராக ஜனாதிபதி வாளைப் பயன்படுத்த வேண்டும்

## ரில்வின் சில்வா கோரிக்கை

(கொழும்பு)

ஊவா மாகாணச முதலமைச்சருக்கு எதிராக ஜனாதிபதி தனது வாளை பயன் படுத்த வேண்டுமென ஜே.வி. பி கட்சி கோரியுள்ளது.

ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா இது தொடர்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்டுள்ளார்.



ஜனாதிபதியிடம் இருப்பதாகக் கூறப்படும் வாளை உண்மையாகவே பயன்படுத்த வேண்டுமாயின் அதனை ஊவா மாகாண முதலமைச் சருக்கு எதிராகப் பயன்படுத்த வேண்டும்.

பாடசாலை அதிபர் கூறுவதற்கு அமைய முதலமைச்சரை அழைத்து மண்டியிட்டு மன்னிப்பு கோருமாறு முதலமைச்சர் பணித்துள்ளார்.

இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்ட ஒரு நபர் மாகாண முதலமைச்சராக பதவி வகிக்கத் தகுதியற்றவர். இந்த சம்பவத்தை மூடி மறைப்பதற்கு பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

எனினும் ஆசிரியர் சங்கங்கள் மற்றும் பொது மக்களை இணைத்துக் கொண்டு இந்த அநீதிக்கு எதிராக போராடுவோம் என ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். (இ-7)

# சுவிட்சர்லாந்தில் அடைக்கலம் கோரும் இலங்கையர்களின் எண்ணிக்கை வீழ்ச்சி

(கொழும்பு)

சுவிட்சர்லாந்தில் அடைக்கலம் கோருவோர் எண்ணிக்கை கடந்த ஆண்டு வெகுவாக குறைந்துள்ளதாக, சுவிஸ் அரச குடிவரவுச் செயலகத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2017ஆம் ஆண்டு சுவிட்சர்லாந்தில் அடைக்கலம் கோரியவர்களின் எண்ணிக்கை, 33.5 வீதத்தினால்குறைந்திருக்கிறது. 2010ஆம் ஆண்டுக்குப் பின்னர் அடைக்கலம் கோருவோர்களிடம் இருந்து ஆகக் குறைந்த விண்ணப்பங்கள் கடந்த ஆண்டிலேயே கிடைத்துள்ளன.

கடந்த ஆண்டு எதிரோப்பியா வைச் சேர்ந்தவர்களே (3,375) அதிகளவில் சுவிசில் அடைக்கலம் கோரியுள்ளனர் எனினும் இதுமுன்னைய ஆண்டை விட 35 வீதம்குறைவாகும். அடுத்து சிரியாவில் இருந்து 1,951 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. இது 9 வீதம் குறைந்துள்ளது.

ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த 1,217 பேர் அடைக்கலம் கோரியுள்ளனர். இது 62 வீத வீழ்ச்சியாகும்.

துருக்கியில் இருந்து 852 பேர் சுவஸில் அடைக்கலம் கோரியுள்ளனர் கடந்த ஆண்டை விட இது 62 வீதம் அதிகரித்துள்ளது. சோமாலியாவில் இருந்து 843 பேர் அடைக்கலம் கோரியுள்ளனர்.

அதையடுத்து. இலங்கையில் இருந்து 840 பேர் சுவிஸில் அடைக்கலம் கோரியுள்ளனர். இது 38.8 வீத வீழ்ச்சியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# கனவுலகில் மிதக்கிறார் மகிந்த

## பிரதமர் ரணில் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

கடன் சுமையுடன் கூடிய பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்ய முடியாமல் தேசிய அரசாங்கம் கவிழ்ந்து விடும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கனவு கண்டவண்ணமுள்ளார். அந்தக் கனவை நனவாக்க முடியவில்லை. எவ்வாறாயினும் 2020 ஆம் ஆண்டு வரைக்கும் நாம் ஆட்சியில் இருப்போம் என்பதனை நான் நம்பிக்கையுடன் கூறுகின்றேன் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க திட்டவட்டமாக தெரிவித்தார்.

குருநாகல், நிக்கவரட்டிய தொகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குருநாகலில் அதிகளவிலான ஆடைத் தொழிற்சாலைகளை நிர்மாணித்து முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸ பாரிய அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்தார். அதன் பின்னர் இந்த பிரதேசத்திற்கு எந்தவொரு அபிவிருத்தியும் வந்து சேரவில்லை. யுத்தம் நிறைவு செய்யும் வரை பொறுமையாக இருக்குமாறு கூறிய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ யுத்தம் நிறைவு செய்த பின்னர் எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை.

முன்னைய ஆட்சியின் போது போதியளவு வருமானம் இல்லாத காரணத்தினால் கடன் பெற்றனர். அதன் பின்னர் கடன் சுமை அதிகரித்தது. கடன் தொகையை செலுத்தும் அளவிற்கு நாட்டின் வருமானம் போதியதாக இருக்கவில்லை. இதனால் நாட்டின் பொருளாதாரம் அதளபாதாளத்திற்கு தள்ளப்பட்டது. இதன்படி பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாது என்பதனை அறிந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இரண்டு வருடத்தில் தேர்தலை நடத்தினார். அதன் பின்னர் நாம் ஆட்சியை பொறுப்பேற்றோம்.

எனினும் கடன் சுமையுடன் கூடிய பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்ய முடியாமல் நல்லாட்சி அரசாங்கம் திணறும் என்பதனை அறிந்து கொண்டு மூன்று வருடத்தில் இந்த அரசாங்கத்தைக் கவிழ்க்க கனவு கண்டார். தற்போது கனவு கண்டவண்ணமுள்ளார். இதன் பிரகாரமே ஆட்சியை கவிழ்ப்பேன் என சூளுரைத்த வண்ணமுள்ளார்.

என்றாலும் அவரது கனவையும் தாண்டி நெருக்கடிமிக்க பொருளாதாரத்தை சாதகமான நிலைமைக்கு தற்போது கொண்டு வந்துள்ளோம். கடன் சுமையை குறைத்து வருகின்றோம். இந்நிலையில் 2020 ஆம் ஆண்டு வரைக்கும் நாம் ஆட்சியில் இருப்போம் என்பதனை நம்பிக்கையுடன் கூறுகின்றேன்.

தற்போது நாம் பாராளுமன்றத்தை பலப்படுத்தியுள்ளோம். 2016 ஆம் ஆண்டளவில் வருமானத்தை தேடும் பொருளாதாரத்தை எம்மால் தோற்றுவிக்க முடிந்தது.

அத்துடன் கப்பல் வராத துறைமுகத்தை 130 கோடி டொலர் கடன் பெற்று நிர்மாணித்தனர். எனினும் கப்பல் வரும்துறைமுகமாக அதனை மாற்றினோம். இதன்படி சீன நிறுவனத்திற்கு குத்தகைக்கு வழங்கியதன் ஊடாக பெற்ற கடனில் 110 கோடி டொலரை எம்மால் செலுத்த முடிந்தது.

அத்துடன் நாடளாவிய ரீதியில் கைத்தொழில் வலயங்களை உருவாக்க வுள்ளோம். இதன்படி அம்பாந்தோட்டையில் மாத்திரம் 5 வலயங்களை உருவாக்குவோம். குருநாகலிலும் கைத்தொழில் வலயங்களை உருவாக்குவோம். மத்திய அதிவேக பாதையை துரிதமாக நிர்மாணிப்போம். இதன் ஊடாக கண்டி முதல் அம்பாந்தோட்டை வரைக்கும் அதிவேக வீதி கட்டமைப்பை உருவாக்குவோம். இதனை நாம் 2002 ஆம் ஆண்டு திட்டமிட்டோம். எனினும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின் போது வேலைத்திட்டத்தை ஆரம்பித்தாலும் எவ்வித நிதியும் ஒதுக்கீடும் செய்யவில்லை.

முன்னைய ஆட்சியின் போது உள்ளூராட்சி மன்றங்களின் ஊடாக எந்தவித அபிவிருத்தியும் முன்னெடுக்கவில்லை. அந்த ஆட்சியில் எவ்வித பிரயோசனமும் இருக்கவில்லை. ஆகவே கிராமத்தின் அபிவிருத்தியை முன்னெடுக்க கிராமத்தின் தனி அதிகாரத்தை ஐக்கிய தேசியக் கட்சி பெற்றுத்தர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 60 | 100 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 200 | 120 |
| தக்காளி | 80 | 100 | 100 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 20 | 40 | 40 |
| கோவா | 50 | 40 | 60 | 80 |
| கரட் | 80 | 80 | 160 | 100 |
| பூசணி | 50 | 60 | 50 | 120 |
| புடோல் | 60 | 60 | 80 | 100 |
| வாழைக்காய் | 80 | 60 | 100 | 80 |
| சின்ன வெங்காயம் | 150 | 300 | 240 | 300 |
| பெரிய வெங்காயம் | 140 | 200 | 160 | 180 |
| பாகற்காய் | 200 | 200 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 140 | 100 | 160 | 140 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 80 | 50 |
| பயற்றங்காய் | 180 | 100 | 120 | 200 |
| லீக்ஸ் | 200 | 100 | 240 | 180 |
| பீற்றூட் | 60 | 100 | 80 | 80 |
| கறிமிளகாய் | 200 | 100 | 200 | 150 |
| முருங்கைக்காய் | 800 | - | 600 | 1400 |
| போஞ்சி | 80 | 100 | 120 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 50 | 80 | 100 |
| கீரை -1பிடி | 30 | 20 | 40 | 20 |
| தேசிக்காய் | 30 | 20 | 60 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 100 | 75 | 100 |
| இராசவள்ளி | 160 | 100 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 150 | 100 | 200 | 250 |
| முள்ளங்கி | 60 | 100 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 40 | 25 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | 100 | 80 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா மக்களையும் சில நாட்களுக்கும் சில மக்களை எல்லா நாட்களுக்கும் முட்டாளாக ஆக்க முடியும்; ஆனால் எல்லோரையும் எப்போதும் முட்டாளாக்க முடியாது. – ஆபிரகாம் லிங்கன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ரூபாய் 2 கோடி விவகாரம்... உண்மையைச் சொல்லுங்கள்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்திடமிருந்து தலா இரண்டு கோடி ரூபாய் பணத்தை வாங்கியுள்ளனர் என்று பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்திஆனந்தன் வெளிப்படையாகக் குற்றஞ் சாட்டியுள்ளார்.

தேர்தல் காலத்தில் கூறப்பட்ட இக்குற்றச் சாட்டால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தொடர்பில் பல்வேறு சந்தேகங்களை மக்கள் எழுப்பியுள்ளனர்.

உண்மையில் அரசாங்கத்திடம் இருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரண்டு கோடி ரூபாய் பணத்தை இலஞ்சமாக வாங்கியிருந்தால் அது தமிழினத்துக்குச் செய்த மிகப் பெரும் துரோகத்தனமாகும்.

அதேவேளை அரசாங்கத்திடமிருந்து கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இரண்டு கோடி ரூபாய் பணத்தை உண்மையிலேயே வாங்கவில்லை என்றால், அவர்கள் மீதான குற்றச்சாட்டு அபாண்டமானது என்றாகிவிடும்.

ஆக, இரண்டு கோடி ரூபாய் விவகாரம் தொடர்பில் சரியான – தெளிவான விளக்கத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவும் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரும் தமிழ் மக்களிடம் முன்வைக்க வேண்டும்.

ஏனெனில் யுத்தத்தில் அகப்பட்டு உறவுகளைப் பறிகொடுத்து, அங்கவீனமாகி இந்த உலகை வெறுத்து வாழுகின்ற தமிழ் மக்கள் மத்தியில்; அரசாங்கத்திடம் கைநீட்டி இலஞ்சம் வாங்குகின்றவர்களாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருப்பார்களாயின் இவர்கள்; வன்னி யுத்தத்தில் தமிழினத்தை அழித்தவர்களை விட மோசமானவர்களாக இருப்பர்.

எது எவ்வாறாயினும் இரண்டு கோடி ரூபாய் விவகாரத்தை பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்திஆனந்தன் வெளிப்படுத்திய பின்னர்,

கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வைக்கின்ற கருத்துக்கள் முன்னுக்குப் பின் முரணானதாக இருப்பதை மக்கள் அவதானித்துள்ளனர்.

நாங்கள் பணம் வாங்கியதை எங்கே நிரூபிக்கட்டும் பார்க்கலாம் என்று ஒரு பாராளுமன்ற உறுப்பினர் கூறுகின்றார்.

அதேநேரம் இன்னொரு பாராளுமன்ற உறுப்பினர் இரண்டு கோடி ரூபாயை நாங்கள் வாங்கியுள்ளோம். அதற்கு மேலாகவும் வாங்குவோம். எல்லாம் அபிவிருத்திக்காக என்று கூறியுள்ளார்.

அதேவேளை இன்னொரு பாராளுமன்ற உறுப்பினர், எங்கள் மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுத் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்போம் என்கிறார்.

சரி, அபிவிருத்திக்காக இரண்டு கோடி ரூபாய் வாங்கியது என்றால் செய்த அபிவிருத்தி என்ன என்பதை மக்களுக்குப் பட்டியல் படுத்துவதே நியாயமானதாகும்.

பாராளுமன்ற உறுப்பினருக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் செய்த அபிவிருத்தி என்ன? அரசாங்கத்திடம் வாங்கிய இரண்டு கோடி ரூபாயில் செய்த அபிவிருத்தித் திட்ட வேலைகள் என்ன? என்பதைப் பட்டியல்படுத்தி இரண்டையும் ஒன்றோடு ஒன்று கலக்காமல் தெளிவாக மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

இல்லையேல் இரண்டு கோடி ரூபாய் விவகாரம் கூட்டமைப்பை உய்யவிடாது.

## வடக்கு மாகாணத்தை வலுப்படுத்தும் நோக்கோடு
# யாழில் சர்வதேச வர்த்தக கண்காட்சி
### யாழ்.வர்த்தக தொழிற்றுறை மன்ற தலைவர் விக்னேஷ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தை வலுப்படுத்தும் நோக்காக கொண்டதே யாழ்.சர்வதேச வர்த்தக கண்காட்சியாகும்.

அதனாலேயே வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை பிரதம விருந்தினராக அழைத்திருக்கிறோம்.

இந்த சர்வதேச வர்த்தக கண்காட்சி 8 வருடங்களாக நடைபெற்ற ஒன்று. இது நேற்று நடந்தது அல்ல என்பது அனைவருக்கும் தெரியும் எனயாழ்.வர்த்தக தொழிற்றுறை மன்றத்தின் தலைவர் கே.விக்னேஷ் கூறியுள்ளார்.

யாழ்.வர்த்தக தொழிற்றுறை மன்றத்தினால் யாழ். சர்வதேச வர்த்தக கண்காட்சி ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

இந்த கண்காட்சி தொடர்பாக தம்முடன் ஒன்றும் பேசப்பட வில்லை என மாகாண தொழிற்றுறை அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் நேற்று காலை ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றை நடத்தி கூறியிருந்தார்.

அமைச்சருடைய இந்த கூற்று தொடர்பாக கேட்ட போதே வர்த்தக தொழிற்றுறை மன்றத்தின் தலைவர் மேற்கண்டவாறு கூறியிருந்தார்.

இதன்போது மேலும் அவர் கூறுகையில், அரசியல் கட்சிகள் சார்ந்து அல்லது தனிநபர் சார்ந்து இந்த கண்காட்சி நடத்தப்படவில்லை. வடமாகாண சபையை வலுப படுத்துவதே இதன் நோக்கம்.

அதனாலேயே வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை பிரதம விருந்தினராக அழைத்திருக்கின்றோம்.

எனவே வட மாகாண சபையை பலவீனப்படுத்தும் எண்ணம் எங்களுக்கு இல்லை. மேலும் தென் பகுதி அரசியல்வாதிகளின் தலையீடும் இதற்குள் இல்லை. எங்கள் பகுதியை சேர்ந்த சகல அரசியல்வாதிகளுக்கும் நாங்கள் அழைப்பு விடுத்திருக்கின்றோம்.

எனவே இந்த நிகழ்வு 8 வருடங்களாக நடைபெறும் நிகழ்வு. இது அனைவருக்கும் தெரியும் என்றார். (ம-4)

### அரியாலை இளைஞன் படுகொலை
## விசேட அதிரடிப்படையினரது விளக்கமறியல் நீடிக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

அரியாலை பகுதியில் இளைஞன் ஒருவரை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் சுட்டுக்கொன்ற வழக்கில் கைது செய்யப்பட்ட இரண்டு விசேட அதிரடிப் படையினரது விளக்கமறியலானது மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் காலை குறித்த வழக்கானது யாழ். நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே மேற்படி விளக்கமறியலானது நீடிக்கப்படுவதாக யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவான் எஸ். சதீஸ்கரன் உத்தரவிட்டார்.

நேற்றைய வழக்கு விசாரணையின்போது சந்தேகநபர்கள் தரப்பு சட்டத்தரணி மோகனதாஸ்பிணை விண்ணப்பம் செய்திருந்த போதும் இச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் இன்னமும் பூரணப்படுத்தப்படாதுள்ளதாக குற்றப் புலனாய்வு பிரிவானது மேலதிக அறிக்கையூடாக மன்றுக்கு தெரியப்படுத்தியது.

இதனையடுத்து நீதவான் குறித்த இரு பொலிஸ் விசேட அதிரடிப்படையினரதும் விளக்கமறியலை எதிர்வரும் மாதம் 6ஆம் திகதி வரை நீடித்து உத்தரவிட்டார். (ம-4)

## அரசின் பொறுப்புக்கூறலுக்கு தமிழ்த் தலைமைகள் அழுத்தம் வழங்க வேண்டும் – அனந்தி சசிதரன்

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித வுரிமை பேரவையிலாவது தமிழ் மக்கள் மீதான இனப் படுகொலைக்கு இலங்கை அரசை பொறுப்புக்கூறலை வழங்க வைப்பதற்கு தமிழ்த் தலைமைகள் அழுத்தம் வழங்க வேண்டுமென வடக்கு மாகாண கூட்டுறவுத் துறை அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

அவரது அலுவலகத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார். தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு இதுவரை நீதி கிடைக்காத நிலையில்தான் தேர்தல்கள் நடைபெற்று கொண்டிருக்கின்றன.

தேர்தல் காலங்களில் தெற்கில் உள்ள கட்சிகளை சேர்ந்தவர்கள் இங்கு சுதந்திரமாக அபிவிருத்தி திட்டங்களை தேர்தல் காலங்களிலும் முன்னெடுத்து வருகின்றனர். ஆனால் எங்களுக்கு தான் பல தடைகளை விதிக்கின்றார்கள். இவ்வாறு அனைத்து விடயங்களிலும் எம்மீது பாகுபாடு காட்டப் படுகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமை பேரவை எதிர்வரும் மார்ச் மாதம் கூடவுள்ளது. இதில் பாதிக்கப்பட்ட பெண் சார்பாக நான் கலந்து கொள்ளவுள்ளேன். வடக்கு மாகாண அமைச்சர் என்ற ரீதியில் நான் கலந்து கொள்ள மாட்டேன். சில வேளைகளில் முதலமைச்சர் அனுமதியளித்தால் வடக்கு மாகாண பிரதிநிதியாக கலந்து கொள்ள முடியும்.

ஐ.நா மனிதவுரிமை பேரவையின் இந்தமுறை அமர்விலாவது இலங்கை அரசை தமிழ் மக்கள் விடயத்தில் பொறுப்புக்கூறலை வழங்க அழுத்தம் கொடுக்கும் வகையில் தமிழ்த் தலைமைகள் செயற்படல் வேண்டும். முன்பு போல்இந்த முறையும் மௌனமாக தமிழ்த் தலைமைகள் இருந்துவிட கூடாது என அனந்தி மேலும் தெரிவித்தார். (ம-4)

## உடுவில் ஞானபைரவர் கோயில் மகா கும்பாபிஷேகம்

யாழ்.உடுவில் திருவருள்மிகு ஞானபைரவர் கோயில் சம்புரோஷண மகா கும்பாபிஷேகம் எதிர் வரும் 29ஆம் திகதி திங்கட் கிழமை நடைபெறவுள்ளது.

அதற்கு முன்னதாக கர்மாரம்பம் எனப்படும் கணபதி ஹோமம் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் 11 மணிவரை எண்ணெய்க் காப்பு சாற்றுதலும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7.33 மணி தொடக்கம் 8.02 மணிவரை மகா கும்பாபிஷேகமும் இடம்பெறவுள்ளது. (ம-87)

## மின்சாரம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை மின் தடைப படும். வியாழன் காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை வவுனியா பிரதேசத்தில் தாண்டிக்குளத்திலிருந்து சின்ன வலயாங்கட்டு வரை, மறக்கறம் பளையிலிருந்து மணிபுரம் வரை, முள்ளிக் குளம், கீரிசுட்டான், நொதேர்ண் பாம், ஆசிரியர் தொழிநுட்பக் கல்லூரி புதுக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களம், சாந்தசோலை கிராமம், கொக்கிளிய, அக்போபுர, கோவில்குளம், ஆச்சிபுரம், சமணன் குளம், மகாமயிலங் குளம், மருதநகர், எஸ்லப்பமருதங்குளம் பெரியகூமரசங்குளம், ஆசிககுளம், சிதம்பரபுரம் ஆகிய பிரதேசங்களிலும். (இ-9)


## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




### நகம் கடிப்பது கெட்ட பழக்கம் என்பது ஏன்?

நகத்தைக் கடிப்பதால் அதன் துகள்கள் சிறிது சிறிதாக வயிற்றுக்குள் செல்லும். அது நோயை உருவாகக் காரணமாகும். நகம் வயிற்றுக்குள் போனால் செரிமானமாகாது. நகத்திற்கு சிறிய அளவில் விஷத் தன்மையுமுண்டு. எனவே அது நோய்களை உருவாக்கும். மேலும் நகத்தைக் கடிப்பதனால் அதன் அடிப்பகுதி பழுதடைவதற்கு வாய்ப்புள்ளது. அதனால் நகத்தைக் கடிக்கக்கூடாது என்றும், அது கெட்ட பழக்கம் என்றும் கூறப்படுகிறது. (தொடரும்)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்
### என்றும் உண்மையே பேசுங்கள்



✦ எப்பொழுதும் உண்மையே பேச வேண்டும். அப்பொழுதுதான் உண்மையின் ரூபமாகிய இறைவனை காண முடியும். இறைவனிடம் உள்ளப் பூர்வமான பக்தி கொள்ள வேண்டும். அலுவலகத்திலும், வியாபாரத்திலும் உண்மை நெறி தவறக்கூடாது. கபட வேஷத்தையும், ஏமாற்றுவதையும் விட்டுவிட்டு உண்மையே பேசினால் கடவுளைக் காணலாம்.

✦ ஒரு மனிதனுக்குக் கடன் அதிகமாகிவிட்டது. அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக அவன் பைத்தியம் பிடித்தவன் போல் நடிக்க ஆரம்பித்துவிட்டான். வைத்தியனால் குணமும் அடையவில்லை. கடைசியில் கெட்டிக்கார வைத்தியன் ஒருவன் உண்மையைத் தெரிந்து கொண்டான். அந்த போலிப் பைத்தியத்தைத் தனியாக அழைத்துச் சென்று "அடேய்! நீ என்ன காரியம் செய்து கொண்டிருக்கிறாய்! பைத்தியமாக நடித்துக் கொண்டிருந்தால், உண்மையாகவே உனக்குப் பைத்தியம் பிடித்துவிடும். இப்பொழுது உன்னிடம் பைத்தியத்திற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. ஜாக்கிரதையாக இரு!" என்று எச்சரித்தான். இதைக் கேட்ட அந்த மனிதன் பயந்துபோய் பைத்தியமாக நடிப்பதை விட்டுவிட்டான். எவ்வளவுதான் மூடி மறைத்தாலும் உண்மை ஒருநாள் வெளிவந்தே ஆகவேண்டும்.

✦ பொய், அனைத்தையும் விட கெட்டது. பொய் வேஷம் போடுவதும் கெட்டதே. ஒருவன் பொய் பேசுவதில் விருப்பம் கொண்டால், பொய்யின் மேலுள்ள பயம் அவனுக்குப் போய்விடும். வாய்மையே வெல்லும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண பிரதேச செயலக விளையாட்டுப் போட்டி இறுதியாட்டத்தில் சென்.நீக்கிலஸ் - சென்.அன்ரனிஸ்

யாழ்ப்பாண பிரதேசசெயலக விளையாட்டுப் போட்டி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

அதன் ஓர் அம்சமாக ஆண்களுக்கான உதைப் பந்தாட்டப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த திங்கட்கிழமை பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற முதலாவது போட்டியில் குருநகர் விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து சென்.நீக்கிலஸ் அணி மோதியது.

ஆட்டநேர முடிவில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோலைப்போட்டு சமபலத்துடன் இருக்க பனாட்டி உதை மூலம் வெற்றி தீர்மானிக்கப்பட்டது.

இதில் 4 : 2 என்ற கோல்க் கணக்கில் சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழகம் வெற்றிப்பெற்று இறுதிப் போட்டிக்குச் செல்லும் வாய்ப்பைத் தக்க வைத்துக் கொண்டது.

மற்றுமொரு அரையிறுதி ஆட்டம் பாசையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் கலைவாணி விளையாட்டுக் கழகத்திற்கும் நடைபெற்றது.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் 2 : 0 என்ற கோல்க்கணக்கில் சென். அன்ரனிஸ் அணி வெற்றிபெற்று இறுதியாட்டத்திற்குத் தெரிவானது.

இறுதிப் போட்டியில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணியும் பாசையூர் சென் அன்ரனிஸ் அணியும் பலப்பரீட்சை நடத்த இருப்பது பெரும் எதிர்பார்ப்பை உருவாக்கியுள்ளது. (க-106)





அமரர்களான பார்த்தீபன், கேசிகன் ஆகியோரின் ஞாபகார்த்தமாக துன்னாலை வல்லியானந்தம் விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்பட்ட மென்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் அரையிறுதியில் ஸ்பேஸ் அணியை தோற்கடித்து கரவெட்டி ஞானம்ஸ் அணியும், இணுவில் கலை ஒளி அணியை தோற்கடித்து ஆனைக்கோட்டை யூனியன் அணியும் இறுதி போட்டிக்கு முன்னேறியது. இறுதி போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 2 மணியளவில் வல்லியானந்தம் விளையட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. (க)

# 49 பந்துகளில் சதம்; ரெய்னா அதிரடி



ரஞ்சி டிராபியில் விளையாடும் அணிகளுக்கு இடையில் சையத் முஷ்டாக் அலி இருபது - 20 கிரிக்கெட் தொடர் நடை பெற்று வருகிறது. கொல்கத்தா ஈடன் கார்டனில் நேற்று நடைபெற்ற போட்டியில் உத்தர பிரதேசம் - பெங்கால் அணிகள் மோதின.

உத்தர பிரதேசம் அணி தலைவர் சுரேஷ் ரெய்னா நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

அதன்படி உத்தர பிரதேச அணியின் சமர்த் சிங், சவுத்ரி ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். ஆட்டத்தின் 3ஆவது பந்தில் சமர்த் சிங் ஓட்டம் ஏதும் எடுக்காமல் ஆட்டமிழந்தார். சவுத்ரி 8 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து ரெய்னாவுடன் விக்கெட் கீப்பர் நாத் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி பெங்கால் அணியின் பந்து வீச்சை துவம்சம் செய்தது. குறிப்பாக ரெய்னா வான வேடிக்கை நிகழ்த்தினார்.

அவர் 49 பந்தில் சதம் அடித்தார். நாத் 43 பந்தில் 7 பவுண்டரி, 4 சிக்சர்களுடன் 80ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழந்தார்.

சதம் அடித்த ரெய்னா தொடர்ந்து அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்த உத்தர பிரதேசம் 20 ஓவர் முடிவில் 3 விக்கெட் இழப்பிற்கு 235 ஓட்டங்களை குவித்தது. ரெய்னா 59 பந்தில் 13 பவுண்டரி, 7 சிக்சர்களுடன் 126 ஓட்டங்கள் குவித்தும், சர்பராஸ் கான் 3 பந்தில் 10 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பின்னர் 236 ஓட்டங்களும் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பெங்கால் அணி 16.1 ஓவரில் 160 ஓட்டங்களை எடுத்து சகலவிக்கெட்டுக்களையும் இழந்தது.

இதனால் உத்தர பிரதேசம் 75 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (க)





அமரர்களான பார்த்தீபன், கேசிகன் ஆகியோரின் ஞாபகார்த்தமாக துன்னாலை வல்லியானந்தம் விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்படும் கரப்பந்தாட்ட சுற்றில் அரையிறுதியில் மாலைசந்தை மைக்கல் அணியை தோற்கடித்து உபயகதிர்காமம் U.K அணியும் U.K-B அணியை தோற்கடித்து மாதனை அணியும் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளன. இறுதிப் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுகிழமை மாலை 6 மணியளவில் வல்லியானந்தம் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. (க)

# 19 வயதிற்குட்பட்ட உலகக்கிண்ண போட்டி
## புதிய சாதனை படைத்த வீரர்

19 வயதுக்குட்பட்டோருக்கான உலக கிண்ண போட்டியில் இலங்கை வீரர் ஹசித போயகொட 191 ஓட்டங்கள் குவித்து புதிய உலக சாதனை படைத்துள்ளார்.



19 வயதிற்குட்பட்ட உலக கிண்ண தொடரின் காலிறுதி ஆட்டத்தில், இலங்கை அணி கென்யாவுடன் மோதியது. முதலில் துடுப்பாட்டத்தை துவங்கிய இலங்கை அணியில், ஹசித போயகொட அற்புதமான ஆட்டத்தினை வெளிப்படுத்தினார்.

மிகவும் நேர்த்தியாகவும், நிதானமாகவும் ஷாட்டுகளை அடித்து விளையாடிய ஹசித, 39 பந்துகளில் அரை சதம் கடந்தார்.

அதன் பின்னர் அதிரடி ஆட்டத்தினை தொடங்கியவர், 19 வயதினருக்குட்பட்ட போட்டியில் புதிய வரலாறு படைத்தார். 152 பந்துகளை சந்தித்து 191 ஓட்டங்கள் குவித்து அசத்தினார். இதில், இரண்டு சிக்ஸர்கள் மற்றும் 28 பவுண்டரிகள் அடங்கும்.

இதன் மூலமாக, ஒரு போட்டியில் அதிக ஓட்டங்கள் குவித்த வீரர் என்ற பெருமையைப் பெற்றார். மேலும், Jakob Bhula-வின்சாதனையையும் முறியடித்தார்.

இந்த போட்டியில் இலங்கை அணி 50 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 419 ஓட்டங்களை குவித்தது. மேலும், கென்ய அணியை 108 ஓட்டங்களில் சுருட்டி அபார வெற்றி பெற்றது. (க)

## வெள்ளையடிப்புக்கு தயார் - தென்னாபிரிக்கா

# ஆறுதல் வெற்றி பெற்றே தீருவோம் - இந்தியா

## மூன்றாவது டெஸ்ட் இன்று ஆரம்பம்

வீராட்கோலி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது.

இரு அணிகள் இடையேயான 3 டெஸ்ட் போட்டித் தொடரில் கேப்டவுனில் நடந்த முதல் போட்டியில் 72 ஓட்ட வித்தியாசத்திலும், செஞ்சூரியனில் நடந்த 2-வது டெஸ்டில் 135 ஓட்டங்கள் வித்தியாசத்திலும் தென்னாபிரிக்கா வெற்றி பெற்று 2-0 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றியது.

இந்தியா- தென்ஆப்பிரிக்கா அணிகள் மோதும் 3-வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி ஜோகன்ஸ்பர்க் மைதானத்தில் இன்று புதன் கிழமை தொடங்குகிறது.

தொடரை இழந்துவிட்ட இந்திய அணி கடைசி டெஸ்டிலாவது வெற்றி பெற்று ஆறுதல் அளிக்குமா? என்று ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். ஆனால் தொடரை முழுமையாக இழக்கும் நிலையில் இருந்து தப்புவது என்பது மிகவும் சவாலானது. வெற்றி பெற முடியா விட்டால் சமநிலை செய்ய கடுமையாக போராட வேண்டும்.

அதுவும் கடினமானதே. தென்ஆப்பிரிக்காவிடம் இந்தியா இதுவரை ஒயிட வொஷ் ஆனது கிடையாது. இதனால் ஹாட்ரிக் தோல்வியை தவிர்க்க வீரர்கள் முழு முயற்சியுடன் ஆட வேண்டும்.

தென்ஆப்பிரிக்க ஆடுகளங்களில் தலைவர் வீராட்கோலியை தவிர எந்த ஒரு வீரராலும் நிலைத்து ஆட முடியவில்லை. டுபெலிசிஸ் தலைமையிலான தென் ஆப்பிரிக்க அணி இந்த டெஸ்டிலும் வென்று 3-0 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றி 'ஒயிட்வாஷ்' ஆர்வத்துடன் உள்ளது.

துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சில் அந்த அணி சமபலத்துடன் இருக்கிறது. டிவில்லியர்ஸ், தலைவர் டுபெலிசிஸ், எல்கர், மர்கிராம் ஆகியோர் பந்துவீச்சில் பிலாண்டர், ரபடா, நிகிடி, மார்னே மார்கல் ஆகியோரும் நல்ல நிலையில் உள்ளனர்.

நாளைய டெஸ்ட் போட்டி இந்திய நேரப்படி பிற்பகல் 1.30 மணிக்கு தொடங்குகிறது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை வருகிறார்...

கிழமை இலங்கை வரவுள்ளார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அழைப்பிற்கிணங்க இந்தோனேஷிய ஜனாதிபதி இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

இவ்விஜயத்தின் போது இலங்கை மற்றும் இந்தோர்னேஷியா ஆகிய இரு நாட்டு தலைவர்களுக்கிடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு இடம்பெறவுள்ளது. அத்தோடு பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோரையும் இந்தோனேஷிய ஜனாதிபதி சந்திக்கவுள்ளார்.

இச் சந்திப்பின் போது, இந்தோனேஷியா இலங்கைக்கிடையிலான இரு தரப்பு உறவுகள் பற்றி கலந்துரையாடப்படவுள்ளதோடு இவ் விடயம் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை இரு தரப்பு உறவுகள் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்படவுள்ளன. இரு தரப்பு புரிந்துணர்வு விடயங்கள் தவிர்ந்து பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் முதலீடு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படவுள்ளன. (ம)

## ஊவா முதலமைச்சர்...

பில் பொலிஸில். சரணடைந்த ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க, சட்டத்தரணி ஒருவர் ஊடாக பதுளை பொலிஸ் நிலையத்தில் நேற்று காலை சரணடைந்தார்.

பதுளை நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டதை அடுத்து, இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப்பிணையில் அவர் விடுவிக்கப்பட்டார்.

அத்துடன், எதிர்வரும் 16ஆம் திகதி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு இதன் போது நீதவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, ஊவா மாகாண முதலமைச்சருக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று சில பகுதிகளில் கவனயீர்ப்புப் போராட்டங்கள் நடத்தப்பட்டன. (ம)

## பிணை முறி மோசடி...

வின் அறிக்கை கடந்த டிசம்பரில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், மோசடிகள் தொடர்பாக நாடாளுமன்றத்தில் விவாதமொன்றை நடத்த வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வரும் நிலையில் குறித்த அறிக்கை நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பாரிய மோசடிகள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையும் நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த அறிக்கை தொடர்பிலான விவாதத்தை எதிர்வரும் பெப்ரவரி 19ஆம் திகதி நடத்த எதிர்பார்த்துள்ளதாக சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## சர்வதேச நீதிபதிகள்...

மேலும் எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவா கூட்டத்தொடர் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் எமது சார்பில் இந்தக் காரணிகளை நாம் உறுதியாக முன்வைக்க முடியும். எமது நீதிமன்றம் மீதான சுயாதீனத்தை சுட்டிக்காட்டி உறுதியான விவாதத்தை முன்னெடுக்க முடியும். அதனை அரசாங்கமாக நாம் முன்னெடுப்போம். நேரடியாக எமது காரணிகளை நாம் தெரிவிப்போம். அத்துடன் இன்று நாம் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளோம். நல்லிணக்க செயற்பாடுகளை நாம் முன்னெடுத்து வருகின்றோம். ஆகவே இவை அனைத்துமே எமக்கு சாதகமாக அமைந்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் செய்தியாளர் சந்திப்பு நேற்று கட்சி தலைமையகத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். (ம)

## இலங்கை-சிங்கப்பூர்...

மேலும் வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று சிங்கப்பூர் பிரதமர் லீ ஷியன் லூங்கி தெரிவித்தார்.

உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள சிங்கப்பூர் பிரதமர் நேற்று காலை ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்த வேளையில் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

ஜனாதிபதி செயலகத்திற்கு வருகைதந்த சிங்கப்பூர் பிரதமர் மற்றும் அவரது பாரியாரை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் அவரது பாரியார் திருமதி ஜயந்தி சிறிசேவும் அன்புடன் வரவேற்றனர்.

இராணுவ மரியாதை வேட்டுக்களுக்கு பின்னர் சிங்கப்பூர் பிரதமருக்கான வரவேற்பு நிகழ்வு இடம்பெற்றது.

இருவரும் நட்புறவுடன் உரையாடிய பின்னர் இருதரப்பு பேச்சுவார்த்தை ஆரம்பமானது. இதன் பின்னர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

இந்த உடன்படிக்கை தொடர்பாக சிங்கப்பூர் வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் சிங்கப்பூர் மற்றும் இலங்கை நிறுவனங்கள் ஒவ்வொன்றும் சந்தைகளில் பல துறைகளில் அதிக அனுகூலங்கள் பெற்றுக்கொள்ள வாய்ப்பாக அமைந்துள்ளது.

இலங்கை தெரிவு செய்யப்பட்ட சிங்கப்பூரின் 80 ஏற்றுமதி பொருட்களுக்கு வரி சலுகையை பெறும். இதனூடாக வரித்துறையின் ஒவ்வொரு வருடமும் சுமார் 10 மில்லியன் டொலர்களை வரியாக சேமிக்க முடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

குறைந்த வரி சலுகையில் சிங்கப்பூரிலிருந்து தரமான பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு வசதிகள் கிடைத்துள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த உடன்படிக்கை தொடர்பாக கருத்து தெரிவித்த சிங்கப்பூரிலுள்ள இலங்கைக்கான தூதுவர் நிமல் வீர ரத்ன இரு நாட்டு அரசாங்கங்களும் நவீன பூரணமானதும் உயர் பெறுமதி கொண்ட சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கு இரண்டு அரசாங்கமும் உடன்பட்டு இருப்பதாக தெரிவித்தார்.

இந்த உடன்படிக்கை மூலம் தாராள பொருளாதாரம் மற்றும் சேவைகள் தொடர்பிலான இலங்கை மூதலீடுகள் அதிகரிக்கும் என்றும் இதன் ஊடாக உற்பத்தி மற்றும் சேவைகளும் அதிகரிக்கும் என்றும் கூறினார்.

இந்த உடன்படிக்கை உண்மையிலேயே சிறு மற்றும் நடுத்தர தொழிற்துறையில் இலங்கையில் கூடுதலான முதலீடுகளுக்கு வழிவகை செய்யும் என்று தெரிவித்தார்.

இதில் அடங்கியுள்ள சரத்துக்களின் பெறுபேறாக முதலீட்டாளர்களுக்கு தேசிய ரீதியிலான கௌரவம் மற்றும் இதன் ஊடாக இலங்கை வர்த்தக சமூகத்தின் பங்குதாரர் என்ற உணர்வும் ஏற்படும் என்றும் சுட்டிக்காட்டினார்.

அந்த உடன்படிக்கை மூலம் இரட்டை வரி தவிர்ப்பும் ஜனவரி மாதத்தில் உறுதி செய்யப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## கூட்டமைப்பு உறுப்பி...

யாழ்.ஊடக அமையத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரவு செலவு திட்டத்திற்கு ஆதரவு தெரிவிப்பதற்காக அரசாங்கம் 2 கோடி ரூபா வழங்கப்பட்டது என கூட்டமைப்பு நாடளுமன்ற உறுப்பினர் நாடாளுமன்றத்தில் முன்னரே சுட்டிக்காட்டியிருந்தார்.

எனினும் அப்போது நாடாளுமன்றத்தில் அமர்ந்திருந்த கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்த்தோ அல்லது மறுப்போ தெரிவிக்கவில்லை. தற்போதைய குறித்த விடயம் ஊடகங்களில் வெளியானதை தொடந்து ஒவ்வொருவரும் அது பொய் என கூற ஆரம்பித்துள்ளனர்.

குறித்த 2 கோடி ரூபா அபிவிருத்திக்காகவே வழங்கப்பட்டதாகவும், அந்த நிதியில் மேற் கொள்ளப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் என்ன என்ன என்பது தொடர்பில் வெளிப்படுத்தியும் வருகின்றனர். அபிவிருத்திக்காக வழங்கப்பட்டிருந்தால் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் வரவு செலவு திட்டத்திற்கு ஆதரவு வழங்காத நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனை தவிர்த்து ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே வழங்கப்பட்டுள்ளது. ஆகவே 2 கோடி வ்ழங்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசின் தேவைகளை ஏதோ ஒரு வகையில் பூர்த்தி செய்துள்ளனர். அதனால் தான் அரசு இவர்களுக்கு மேலதிகமான நிதியை வழங்கியுள்ளது.

இந்த குற்றச்சாட்டு இப்போது முன்வைக்கப் படவில்லை. நாடாளுமன்றத்திலேயே இது கூறப்பட்டது. எனினும் அப்போது எதனையும் கூறாத நாடாளுமன்ற உறுப்பினர்கள் இப்போது அது பொய் என வரிந்து கட்டிடுக் கொண்டு நிற்பதற்கான காரணம் என்ன? மாகாண சபை உறுப்பினர் கஜதீபன், நான் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த போது அரசிடமிருந்து பணம் வாங்கவில்லையா? என கேள்வியெழுப்பியுள்ளார்.

நான் யாருக்கும் கை உயர்த்தியோ? அல்லது எமது மக்களுக்கு துரோகம் செய்தோ யாரிடமும் பணம் பெறவில்லை. எனது கோப்பாய் தொகுதியில் எனது மக்களுடைய தேவைகள் அடங்கிய கடிதம் ஒன்றை பிரதமரிடம் கொடுத்திருந்தேன். அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்ட திட்டங்களை நிறைவேற்றி தருமாறு பிரதமருக்கு நெருக்குதல் கொடுத்திருந்தேன்.

அதனை தொடந்தே எனது திட்டங்களுக்கு 4 கோடி ரூபாய் பணம் ஒதுக்கப்பட்டது. இவை பற்றி எல்லாம் அறிந்து கொள்ளாமல் கஜதீபன் சிறுபிள்ளை தனமாக பேசுவதை நிறுத்த வேண்டும். மேலும் தற்போது உள்ளூராட்சி தேர்தலை மையமாக வைத்து தமிழ்த்தேசிய கூட்டமைப்பு மக்களுக்கு பொய் கூற ஆரம்பித்துள்ளனர். அரசியல் கைதிகளின் விடுதலைக்கு தாம் தான் காரணம் எனவும், காணி விடுவிப்பும் தம்மால் தான் நடைபெறுகின்றது எனவும் கூறி வருகின்றனர்.

அரசியல் கைதிகளுடைய விடுதலை கூட்டமைப்பின் அழுத்தத்தால் இடம்பெறவில்லை. வழமையாக எவ்வாறு ஒரு கைதி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு விடுதலை செய்யப்படுகின்றாரோ அவ்வாறே விடுதலை செய்யப்படுகின்றனர். இப்போதும் இராணுவத்தின் வசம் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் உள்ளன. இந்த நிலையில் வழமை போன்று கூட்டமைப்பினர் மக்கள் முன்பு பொய் கூற ஆரம்பித்துள்ளனர்.

இது தொடர்பில் மக்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். உள்ளூராட்சி தேர்தல் தொடர்பில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் வெளியிட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனமும் மக்களை ஏமாற்றும் வகையிலேயே உள்ளன. யாழ்.மாநகர சபையை பழைய இடத்திலேயே கட்டவுள்ளதாக கூறியிருக்கின்றார்கள். இது ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்ட ஒன்று. யார் ஆட்சிக்கு வந்தாலும் பழைய இடத்தில் யாழ்.மாநகர சபை கட்டப்படத்தான் போகின்றது.

குறிப்பாக ஒரு விடயத்தை இங்கு குறிப்பிட வேண்டும். தற்போது இலஞ்ச குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்ட பின்னர் மாறி மாறி கருத்துக்களை கூறி வருகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுன்னாகம் கழிவெண்ணை பிரச்சினையின் போது ஒருத்தரும் வாய் திறக்காமைக்கான காரணம் என்ன? குறித்த எண்ணெய் கலப்புக்கு காரணமான நிறுவனம் வடக்கிற்கு வருவதற்கான காரணம் நாடாளுமன்ற உறுப்பினர் தான். ஆகையால் தான் ஒருவரும் ஒன்றும் பேசவில்லை. இதே போன்றுதான் ஐஸ்கிறீம் பிரச்சினையிலும் நடந்து கொண்டார்கள். ஆகவே மக்கள் இவற்றை கவனத்திலெடுத்து செயற்பட வேண்டும் என்றார். (ம-4)

# காணாமல்போன உறவுகள் வவுனியாவில் போராட்டம்

(வவுனியா)

வவுனியாவில் காணாமல்போன உறவுகளினால் மேற்கொள்ள ப்பட்டு வரும் போராட்டத்திற்கு நேற்று 334ஆவது நாளாகும். இதையடுத்து வவுனியாவில் முதன்முறையாக உறவுகளினால் மேற் கொள்ளப்பட்ட சாகும் வரையிலான உணவு தவிர்ப்புப் போராட்டம் கடந்த 2017.01.23 ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்திற்கு நேற்று ஒரு வருடமானதை முன்னிட்டு நேற்றைய கவனயீர்ப்புப் போராட்டத்தினை மேற்கொண்டனர்.

தமது போராட்டத்திற்கு இலங்கை அரசானது தீர்வினைப் பெற்றுத்தராது என்றும் தமது போராட்டத்தினை தொடர்ந்து முன்னெடுக்கவுள்ளதாகவும் சர்வதேசத்திடம் தமது உறவுகளை மீட்டுத்தரு மாறு கோரியுள்ளதாகவும் தெரிவித்து காணாமற்போனவர்களின் உறவுகள் போராட்டத்தினை மேற்கொண்டனர்.

நேற்றுக் காலை 11.30மணியளவில் வவுனியா கந்தசாமி ஆலயத்திற்குச் சென்று வழிபாடுகளை மேற்கொண்ட பின்னர் போராட்ட களத்திற்குச் சென்ற உறவுகள் அங்கிருந்து தமது கவனயீர்ப்பினை மேற்கொண்டனர். பெருமளவான உறவுகள் நேற்றைய போராட்டத்தில் கலந்துகொண்டனர். (ம-250,281)

## பிக்கப்-மோ.சைக்கிள்...

பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் புன்னாலைக்கட்டுவனை சேர்ந்தவர்களான நாகேந்திரம் நிசாந்தன் (வயது 26) அரியக்குட்டி தனீஸ்வரன் என்பவர்களே உயிரிழந்தவர்களாவர்.

இது தொடர்பாக தெரியவருவதாவது, யாழ்ப்பாணத்திலிருந்து புன்னாலைக்கட்டுவனை நோக்கி வந்த பிக்கப் வாகனமும் புன்னாலைக்கட்டுவனிலிருந்து யாழ்.நோக்கி சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர்கள் பயணிகள் பேருந்தை முந்திச் செல்ல முற்பட்ட வேளை எதிரே வந்த பிக்கப் வாகனத்துடன் மோதுண்டதில் விபத்து ஏற்பட்டுள்ளது.

இச் சம்பவத்தில் பலியாகிய இளைஞன் விபத்துக்குள்ளாகி சுமார் அரை மணி நேரத்துக்கும் மேலாக உயிர் துடித்ததுடன் வீதியில் குருதி வழிந்தோடிய நிலையில் உயிருக்கு போராடிய நிலையில் இருந்துள்ளார். விபத்து இடம்பெற்ற இடத்தில் நின்றவர்கள் இளைஞன் பலியாகியதாக எண்ணி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லாமல் விட்டுள்ளதுடன் படுகாயமடைந்த இளைஞனையே வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றுள்ளனர். பின்னர் விபத்து நடைபெற்று சுமார் அரை மணி நேரத்திற்கு பிறகு சம்பவ இடத்தக்கு வருகை தந்த கோப்பாய் பொலிஸாரே தமது வாகனத்தில் உயிருக்கு போராடிய இளைஞனை மீட்டு வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர். எனினும் இளைஞன் ஏற்கெனவே பலியாகியதாக வைத்தியசாலை தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவத்தில் பிக்கப் சாரதி தப்பிச் சென்று கோப்பாய் பொலிஸில் சரணடைந்துள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளதுடன் விபத்துக்குள்ளான வாகனங்களையும் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றுள்ளனர். (ம-4,78,281)

## பிரபல போதைபொருள்...

ஜுலை மாதம் 03ஆம் திகதி கொழும்பு முகத்துவாரத்தில் வைத்து ஹெரோயின் போதைப்பொருள் தன்வசம் வைத்திருந்த நிலையில் வாழைச்சேனையை சேர்ந்த செய்க் இஸ்மாயில் அக்பார் அல்லது மாஸ்டர் என்பவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தார்.

சந்தேகநபர் கொழும்பு நகரம் பூராகவும் போதைப்பொருள் வலையமைப்பை கொண்டிருந்ததாக பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்திருந்தது.

நீண்ட வழக்கு விசாரணையின் பின்னர் சந்தேகநபரின் குற்றச்சாட்டு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்ட நிலையில், போதைப் பொருளின் தாக்கத்திலிருந்து சமூகத்தை விடுவிக்கும் நோக்கில் குற்றவாளிக்கு மரண தண்டனை விதிப்பதாக நீதிபதி அறிவித்துள்ளார். (ம)

## 2018ம் ஆண்டுக்கான...

அமைப்பின் நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

உலகளாவிய சுகாதாரப் பாதுகாப்பு (Universal Health Coverage) என்ற தொனிப் பொருளில் இவ்வருடத்திற்கான சுகாதார தினம் நடைபெறவுள்ளது.

இதேவேளை இலங்கை சுதந்திரம் அடைந்து 70 வது ஆண்டு நிறைவை கொண்டாடுவதையிட்டு உலக சுகாதார அமைப்பின் பணிப்பாளர் நாயகம் டெட்ராஸ் அதனோம் ஜிஹெப்ரேயெஸஸ் (Dr.Tedros Adhanom Ghebreyesus ) தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மக்களுக்கான இலவச சுகாதாரம் தொடர்பாக நீண்டகால வரலாற்றை கொண்டு இருப்பதாகவும் சுகாதார தினத்தை நடத்துவதற்கு இலங்கையே பொருத்தமான இடம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை உலக சுகாதார தினத்தை நடத்துவதற்கு இலங்கையை தெரிவு செய்தமைக்கு நன்றியை தெரிவித்துக்கொள்வதாக போஷாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் **FRENCH EMBASSY**யின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் **ALLIANCE FRANÇAISE** மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட **CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)**
- யாரும் படிக்கலாம்.**www.ambafrance-lk.org**

(2522)

**021 222 8093** 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்



## Job + Courses = Career Opportunities
## பயிற்சி நெறியுடன் கூடிய தொழில் வாய்ப்பு

எமது நிறுவனமானது புதிய கிளைகளுக்குரிய கீழ்க் காணும் பதவி வெற்றிடங்களை பூர்த்தி செய்யவுள்ளது.

| பதவிகள் | பயிற்சிக்காலம் | தகைமைகள் |
|---|---|---|
| விற்பனையாளர் | இல்லை | Gr10 / O/L |
| மேற்பார்வையாளர் | 01 மாதம் | O/L, A/L |
| உதவி முகாமையாளர் | 03 மாதம் | O/L (Pass), A/L |
| முகாமையாளர் | 06 மாதம் | A/L (Pass), Diploma |
| அலுவலகர் | 01 மாதம் | A/L (Pass) |

O/L,A/L முடித்தவர்கள் மட்டுமல்லாது ஏனையவர்களுக்கும் அடிப்படைப்பயிற்சியுடன் வேலைவாய்ப்பு பெற்றுத்தரப்படும்.

புதிய கிளைகள் ஆரம்பிக்கப்படவுள்ள இடங்கள்

மாவட்டங்கள் :கிளிநொச்சி - பரந்தன்.கிளிநொச்சி. முல்லைத்தீவு-மாங்குளம். மன்னார்- பேசாலை, மன்னார். வவுனியா-வவுனியா, செட்டிகுளம். யாழ்ப்பாணம்-சாவகச்சேரி

- பயிற்சியின் போது 12000/= தொடக்கம் 18000/= வரை, பின்னர் 30000/= தொடக்கம் 60000/= வரை. தங்குமிடம் உணவு வசதி உண்டு
- EPF,ETF,மருத்துவ வசதி. வெளிநாட்டு சுற்றுப்பயணம் போன்ற வசதி வாய்ப்பு பெற்றுத்தரப்படும்.

(2520)

**தொடர்பு: 0779858580, 0787698057**



## 2018ஆம் ஆண்டுக்கான நிரந்தரமான வேலைவாய்ப்பு

### நீங்கள் O/L, A/L தோற்றி தொழில் தேடுகிறீர்களா?





உங்களுக்கான அரிய வாய்ப்பு, சர்வதேச ரீதியில் மிக வேகமாக வளர்ந்து வரும் MNC நிறுவனத்தில் மேற்பார்வையாளர், வரவேற்பாளர், உ.முகாமையாளர் போன்ற பதவிகளுக்கான பயிற்சியாளர்கள் பயிற்சியளித்து இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

பயிற்சிக்காலம் 3 மாதம் - 6மாதம் வரை.

பயிற்சியின் போது 20,000/=, 35,000/= வருமானமும் பிறகு 40,000/= மேல் EPF,ETF காப்புறுதி, வெளிநாட்டு சுற்றுலா, குறுகிய கால பதவி உயர்வு. உங்கள் நகரங்களில் தொழில் தொடங்கும் வாய்ப்பு. குறைந்த தகைமை O/L தோற்றி இருத்தல்.

**தொடர்புகளுக்கு:**



**0771056848,**

**0774031931**

(2529)


## சர்வதேச வர்த்தகக் கண்...

மாநகரசபை மைதானத்தில் நடைபெறவுள்ளது. இக் கண்காட்சியில் உள்ளூர் மற்றும் வெளிநாடுகளில் இருந்து சுமார் 300 நிறுவனங்கள் தங்கள் பொருட்களை காட்சிப்படுத்த உள்ளதாக யாழ்.வர்த்தக தொழிற்துறை மன்றத்தின் தலைவர் கே.விக்னேஸ் கூறியுள்ளார்.

மேற்படி வர்த்தக கண்காட்சி தொடர்பாக நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்படி தகவலை கூறினார். இதன்போது மேலும் அவர் கூறுகையில், 2010-ம் ஆண்டு யாழ்.சர்வதேச வர்த்தக கண்காட்சி யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து 8 ஆண்டுகள் நடைபெற்று 9-வது வர்த்தக கண்காட்சி 26-ம், 27-ம், 28-ம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இக் கண்காட்சிக்கு பிரதம விருந்தினராக வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். 26-ம் திகதி காலை 11.30 மணிக்கு யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் யாழ்.சர்வதேச வர்த்தக கண்காட்சி உத்தியோகபூர்வமாக ஆரம்பமாகும். அதனை தொடர்ந்து யாழ்.மாநகரசபை மைதானத்தில் கண்காட்சி நடைபெறும். இக்கண்காட்சியில் 300ற்கும் மேற்பட்ட நிறுவனங்கள் தங்கள் காட்சி கூடங்களை அமைக்கவுள்ளன.

மேலும் இந்தியாவில் இருந்து 75 நிறுவனங்கள் இந்த கண்காட்சியில் கலந்து கொள்கின்றன. இதன் ஊடாக கடந்த காலத்தை போல் மக்கள் பல்வேறு நன்மைகளை அடைவார்கள். கடந்த காலத்தில் மக்கள் இந்த கண்காட்சியில் பங்கெடுத்திருந்த நிறுவனங்களுடன் இணைந்து தங்கள் தொழிலை ஆரம்பித்தார்கள்.

அதேபோல் பலர் தங்கள் தொழிலுக்கான உபகரணங்களை பெற்றார்கள். இவ்வாறு பல்வேறு நன்மைகள் கிடைக்கப்பெற்றன. எனவே கடந்த காலத்தை விடவும் இம்முறை சிறப்பான கண்காட்சியாக அமையும் என்றார். (ம-4)

## ரயில் மோதியதில்...

(கமலி) என்கின்ற 35 வயதுடைய குடும்ப பெண் நேற்று காலை கொழும்பு வெள்ளவத்தை ரயில நிலையத்தில் தனது ஆறு வயதுடைய மகனுடன் ஒரு ரயிலிலிருந்து மற்றுமொரு ரயிலிற்கு மாறும் போதே இந்த விபத்து ஏற்பட் டுள்ளதாக அறியப்படுகிறது. மகன் தெய்வாதீனமாக உயிர தப்பியுள்ளார். மேலதிக விசாரணை கள் வெள்ளவத்தை பொலிஸாரால் மேற் கொள்ளப்பட்டு வருகிறது. (ம-281)


## CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



(சி-1357)

**CNR World Wide Express**
இல.401. மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்

தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062
follow us cnrworldwideexpress



## DYNAMIC HOLDINGS LANKA (Pvt) LTD

### இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்...

எமது தனியார் நிறுவனத்தில் O/L, A/L தகைமைகளுடன் பணிபுரியலாம். உலகில் எப்பாகத்திலும் உமது திறமைகளை வெளிக்காட்டலாம்.

- முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகியோருக்கு முன்னுரிமை, உணவு தங்குமிட வசதிகள் உண்டு.
- வயதெல்லை 18 - 30.
- ஆர்வமுள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

(சி-1364)

**தொடர்புகளுக்கு : 076 666 8385**



## 2018 இல் யாழில் தொடரும் பரிசு மழை

யாழ்.நகர் தேசிய லொத்தர் சபை விற்பனை முகவர் S.கனகலிங்கம் ஊடாக 15.01.2018 கொவிசெத 1647 Draw ஊடாக ரூபாய் 1,000,000/=வும், 18.01.2018 மகாஜன சம்பத் 3580 Draw ஊடாக ரூபாய் 2,000,000/=வும் வெல்லப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

மேலும் 08.01.2018 அத கோடிபதியிலும் 10.01.2018 கெலக்சபதியில் தலா ஒரு லட்சங்களும் வெல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**லொத்தர் ரிக்கட் பின்புறத்தில் கனகலிங்கம் திலகவதி முகவரின் முத்திரை பதிக்கப்பட்டுள்ளதா? என்பதை பார்த்து வாங்கி உங்கள் வெற்றி வாய்ப்பை உறுதிசெய்யுங்கள்.**

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

கனகலிங்கம் திலகவதி
தேசிய லொத்தர் சபை
யாழ்ப்பாண விற்பனை முகவர்

(2531)



## இன்சுவை யாழ் ஒடியற் கூழ்

தினமும் காலை 11 மணி முதல்

யாழ்பாடி
49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

021 222 6868, 077 736 0353, 075 987 5800

(C-1347)



## நடமாடும் மிருகவைத்திய சேவை

சுன்னாகத்துக்கு அண்மையில் மிருக வைத்திய தேவைகளுக்கு தொடர்பு கொள்ளவும்.

(2502)

Dr.K.கிருபாகரன் 0779738802
முருகேசபண்டிதர் வீதி, சுன்னாகம்.



## பணியாளர் தேவை

யாழ்.நகரில் நிறுவனம் ஒன்றுக்கு கணனி இயக்குநர், சிட்டை எழுதுநர், பதிவாளர் ஆகிய வேலைகளுக்கு பெண் பணியாளர் தேவை.

(2532)

**0212215777, 0778558841**



## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

(C-1345)



UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS

**V2 TRAVELS-0768226240**

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- நெல்லியடி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை



## BBA, BCom

### வெளிவாரிக்கான புதிய ஆண்டுக்கான பதிவு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன (Medium Tamil)

A/L 2017 ஓகஸ்ட் பரீட்சை எடுத்தவர்களும் அதற்கு முற்பட்டவர்களும் விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள் ஆவர்.

விண்ணப்ப முடிவுத்திகதி -12.02.2018

மேற்குறிப்பிட்ட கற்கைநெறிகள் யாவும் மூன்று ஆண்டுகளாகும்.

விரிவுரைகள் ஆரம்பம்.

(வெளிமாவட்ட மாணவர்களிற்கு தங்குமிடம் இலவசம்)

**தொ.பே இல: 021 222 8148, 077 607 1954, 077 314 4762**

புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம், யாழ்ப்பாணம்

(C-1360)



## வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

11 kg மேற்பட்ட பொதிகளுக்கு 1 kg க்கான கட்டணம்

UK-550/-
France - 700/-
Germany - 650/-
Swiss - 750/-
Canada - 950/-

ஏனைய நாடுகளுக்கும் விசேட விலைக் கழிவு பொதிகள் அனுப்பி வைக்கப்படும்

சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் நிபுணத்துவம் வாய்ந்தவர்களூடாக செய்து கொடுக்கப்படும்

**திருமுருகன் கொம் நெற் (பிறைவெட்) லிமிடெட்**

216, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (ஆஸ்பத்திரி அருகாமையில்)
40, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
18, பிரதான வீதி, நெல்லியடி
கிளிநொச்சி,
மன்னார்.

077 755 4528

3-5 Working Days

DHL aramex SKYNET



## வேலைவாய்ப்பு

கிளிநொச்சியில் இயங்கும் சேவை நிலையத்திற்கு A/L படித்த கணினி அறிவுடைய ஆங்கிலம் or சிங்களம் பேசக்கூடிய பெண் வேலையாள் தேவை.

**தொடர்பு: 077 666 0178**

(C-1363)



## வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

EXPRESS Courier Services

(C-1286)

**அண்ணா பொதிகள் சேவை**

976,கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம்

021 221 5656 070 330 5500

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | வேலணை | சாவகச்சேரி | மீசாலை |
| முல்லைத்தீவு | கிளிநொச்சி | வவுனியா | திருகோணமலை |



## சிவன் கல்வி நிலையம்

புத்தூர் (சோமஸ்கந்தா பாடசாலை அருகாமை)

**A/L தொழில்நுட்பப் பிரிவு**

A/L 2020, 2019, 2018, Day Class வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன.

நவீன ஆய்வுகூட வசதியுடன்.

(C-1366)

**தொ.பே: 077 017 5346**


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.01.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org